# தேவாரத் திருவமுதம்

EVĀRAT TIRUVAMUTAM

*

Comm by

"தினகரன்" ஆசிரியர்
வே. க. ப. நாதன்
எழுதிய
பதவுரை விளக்கவுரைகளுடன்

NATAN (VKP)

*

அணிந்துரைகள் :
பண்டிதமணி. சி. கணபதிப்பிள்ளை
பாரிப்பாக்கம். கண்ணப்ப முதலியார்

...ARA PUBLIC LIB...
6 FEB 1955
MADRAS

கொழும்பு
சாலிவாகனசகம்–1876
விசய–மாசி

*First Edition*—1954

[*All Rights Reserved by the author*]

Published by the author
V. K. P. NATHAN
128/5, Ward Place,
COLOMBO 7.

Kabeer Printing Works, Madras-5 (2437)

CONNEMARA ...
6 FEB 1955
MADRAS

என்
அருமை அன்னையார்
திருமதி கனகசபை
தங்கமுத்துப் பிள்ளை
அவர்களின் நினைவுக்காக
இஃது எழுதி
அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

வே. க. ப. நாதன்

6 FEB
MADRAS

# அணிந்துரை

தமிழ் ஆசிரியர் ஒருவர் சமயபாட நேரத்தில் 'மந்திர மாவது நீறு' என்கின்ற திருநீற்றுப்பதிகம் படிப்பிக்க நேர்ந்தபோது, 'முகத்துக்குப் பூசுகிற மா இல்லாத காலத்திலே, சாணியைச் சுட்டு நீறு செய்து பூசினர்கள் அக்காலத்துத் தமிழர்கள்' என்று பாடம் ஆரம்பித்தார் என ஒரு புதிய கதை இப்பொழுது இங்கு முளைத்துப் பரவுகின்றது. 'விபூதியின் மகிமை திருநூற்றந்தாதியில் சொல்லப்பட்டிருக்கின்றது' என்று ஒரு குருக்கள் கூறினர் என்ற பழைய கதையை நாவலர் அவர்களே எழுதியிருக்கின்றார்கள்.

இப்படியான நிலையில், அருட்பாடல்களாகிய தேவாரங்களுக்கு உரைகாணுவது அரிய தொன்றாயினும், தமிழ் மரபு சமயமரபு ஒரு அளவுக்குக் குறிப்பாக அறிந்தவர்கள், பய பக்தியுடன் அரும்பதங்களை விளக்கியும், விரிவான பொழிப்புரை செய்தும், சரித்திரக் குறிப்புக்கள் கதைகளை விரித்தும், நுண்கருத்துக்கள், தத்துவங்கள், அநுபவங்கள் என்றிவற்றைப் புராணங்கள், சாத்திரங்கள், அருட்பாடல்கள் என்னும் இவற்றால் ஒருவாறு புலப்படுத்தியும் ஓர் உரை இக்காலத்துக்கு ஏற்ற முறையில் இரசிக்கத் தக்க வகையில் வகுப்பது விரும்பத்தக்கதே.

'தினகரன்' ஆசிரியர் ஆகிய நண்பர் திரு. வே. க. ப. நாதன் அவர்கள், ஈழநாட்டுக்கு இருகண்கள் போன்ற திருக்கேதீச்சரம், திருக்கோணமலை என்கின்ற இரண்டு

திவ்விய சிவஸ்தலங்களும் சற்றே விழிக்கின்ற இந்தச் சந்தர்ப்பத்தில், அத்தலங்களுக்குரிய பிரசித்தமான மூன்று தேவாரப் பதிகங்களுக்கும், மேற்காட்டிய பிரகாரம், மரபு பிறழாமல் ஒரு உரை வகுத்திருக்கின்றார்கள்.

நாதன் அவர்கள் தமிழ்மரபு சைவமரபு கைவந்த ஒரு பழந்தமிழ்க் குடியில் வந்தவர்கள். அவர்களுக்கு அம்மரபுகள் பாரம்பரியச் சொத்துக்கள். அவர்கள் வகுத்த இந்த உரை, ஆசிரியர்களுக்கு உறுதுணையாயும், மாணவர்களுக்கு ஒரு நல்லாசிரியனாயும், அறிஞர்களுக்குச் சாத்திரங்கள் புராணங்கள் அருட்பாடல்கள் பயிலுதற்கு ஒரு தூண்டுகோலாயும் விளங்கும் என்பது எனது கருத்து.

சைவாசிரிய கலாசாலை<br>
திருநெல்வேலி யாழ்ப்பாணம்<br>
23–2–1954

சி. கணபதிப்பிள்ளை

CONNEMARA PUBLIC LIBRARY
6 FEB 1955
MADRAS

CONNEMARA PUBLIC LIBRARY
6 FEB 1955
MADRAS

ஓம்

திருச்சிற்றம்பலம்

# அணிந்துரை

[சித்தாந்தப் பேராசிரியர்
பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியாரவர்கள்]

தெய்வச் செந்தமிழ் மொழிக்கண் இலங்கும் மெய்யுரை நூல்கள் அளப்பிலவாம்.

" கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவ
னற்ரு டொழா ரெனின் "

என்ற தெய்வப்புலவர் திருவாக்கின் உள்ளக் கருத்தின் வண்ணம் இப்பிறவியாலாய பயன்பெறுமாறு இஃதாமென உண்மை நெறியினை உள்ளவாறு எடுத்துக்காட்டும் தலையாய நிலையின் நிற்பது திருவருள் ஒளி செந்தமிழ் மாமறைகளாகிய தேவார திருவாசகத் தொடக்கத்துப் பன்னிரு திருமுறைகளும் சிவஞானபோதம் முதலிய பதினன்கு அருளோத்துக்களுமாம் என்பது.

மொழிக்கு மொழி தித்திப்பாக மூவர் சொல்லும் தமிழாகிய தேவார முதலிய தோத்திர நூல்கள் தம்மை ஓது வார் உள்ளத்து பேரன்பாம் ஊற்றினைப் பெருக்கி ஞான நற்பயிர் விளைத்து

" மாசில்வீணையும் மாலைமதியமும்
வீசுதென்றலும் வீங்கிளவேனிலும்
மூசுவண்டறை பொய்கையும் "

போன்ற ஈசன் திருவடிகளாம் பேரின்பப் பெருக்கிலே திளைத்திடச் செய்யும் பைந்தமிழ்க் கருவூலங்களாக உள்ளவைகளாம்.

இங்ஙனம் இவைகள் தம்மை ஓதுவார்க்கு உண்மைப் பயனளிக்கும் வன்மையால் சிறந்து விளங்கலின் இவற்றை

“ கண்ட பெரு மந்திரமே மூவர்பாடல்
கைகாணு மந்திரம் கண்ணுதலோன் கடவுள் ”

என உண்மைப் பயனளிக்கும் முறையில் வடமொழி மறையினும் இச்செந்தமிழ் மாமறை சிறந்து நிற்றலை உமாபதி சிவனுர் ஓர்ந்துரைத்தனர்.

“ அருட்பெருகு தனிக்கடலும் உலகுக்கெல்லாம் அன்பு செறி கடலுமாம் எனவும் ஓங்கும் பொருட்சமய முதற்சைவ நெறிதான் பெற்ற புண்ணியக் கண்ணிரண் டெனவும் புவனம் உய்ய, இருட்கடு வுண்டவர் அருளும் அகிலம் எல்லாம் ஈன்றுள் தன் திருவருளும் ” எனப்போந்த தெருட்கலைஞானக்கன்றும் தெளிஞானச் சொல்லரசுமாம் இவ்விரு ஞான செல்வருடன் “ அங்குனீர்ப் படைத்தோங்கி முடிவிலாத சிவபோகம் முதிர்ந்து முறுகி விளைந்த வடிவாம் நம்பியாரூர் பெருமானும் ” அருளிய சித்தமெலாம் உருக்கும் செந்தமிழ் மாமறையின் சிறப்பினை யாரே அளவிட்டு உரைக்கவல்லார்!

“ காணும் கரணங்களெல்லாம் பேரின்பமெனப்
பேணும் அடியார் ”

என்ற நிலையில் திருவருளிலே தோய்ந்து

“ நாயகன் சேவடி தைவரு சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர் பொழி கண்ணும் ”

உடையராய்ச் சிவானந்த அனுபவ நிலையில் அருள்புரிந்த அருளுருவ திருப்பாடல்களாம். இவை பரநாத ஒலியான் இயன்ற திருநெறிப்பாக்களாம். இது சுத்தவைந்தவத்தினின்றும் தோன்றுவது.

செவிப்புலனும் ஓசை எழுத்தோசை எனவும் இசையோசை எனவும் இருவகைப்படும். எழுத்தோசை விந்து முதற்காரணமாக அதனின்றும் தோன்றி இயங்குவது;

இசை ஓசை ஆகாய முதற்காரணமாக அதனின்றும் தோன்றிச் செவிப்புலனுவது ; இவை ஒளியும் உருவமும் போலப் புலப்படுப்பதும், புலப்படுவதும் ஆகிய நிலைகளை உடையன.

தமிழ் மறை அருளிய பரமாசாரியர்கள் பாசஞான, பசுஞான நிலைகளின் நீங்கிப் பதிஞான மெனப்படும் சிவஞான நிலையினராய், சிவத்துவவிளக்கம் எனப்படும் பரமானந்த சுவானுபவாதீத துரிய நிலையிலே நின்று திருவருள்வடிவாய்த்திகழும் மேற்கூறிய பரநாத ஒலிவடிவால் செந்தமிழ் மாமறைகளைத் திருவருள் புரிந்துள்ளார்கள்.

> " பாலை நெய்தல் பாடியதும் பாம்பொழியப்பாடியதும்
> காலனையன் றேவிக் கராங்கொண்ட—பாலன்
> மரணந் தவிர்த்ததுவும் மற்றவர்க்கு நந்தம்
> கரணம் போல் அல்லாமை காண்."

என்ற திருக்களிற்றுப் படியாரின் திருப்பாடல் அவர்தம் அருள்நிலையை அழகுற எடுத்துக் காட்டுகின்றது.

இச் செந்தமிழ் மாமறையின் பதிகங்கள் பல, செயற்கரிய செயல்களாம் அற்புதங்களுடன் தோன்றியுள்ளன. அவ்வற்புத நிகழ்ச்சிகளுக்கெல்லாம் அவ்வவர் திருவாக்குகளின் கண்ணே அகச்சான்றுகள் அருள் ஒளிகாட்டி மிளிர்கின்றன. இந்நிலை எந்நூற்கும் அமையாததாம்.

ஞானத்தின் திருவுருவாம் ஆளுடைய பிள்ளையார், இறைவனும் இறைவியும் அருளுருவொடும் எதிர் தோன்றித் தமக்கு ஞானப்பால் ஊட்டி ஆட்கொண்ட திறத்தினை,

> " போதையார் பொற்கிண்ணத் தடிசில்பொல் லாதெனத்
> தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்
> காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
> பேதையா ளவளோடும் பெருந்தகை யிருந்ததே "

என்ற பாடலால் எழிலுற விளக்குகின்றார். இதனை

ஈழநாட்டுத் தேவாரத்திருவமுத விளக்க உரையாசிரியர் எடுத்துக் காட்டி உள்ளமை மகிழ்தற்குரியது.

பிள்ளையார் பால்மணமாருத திருவாய் மலரினின்று இப்பாடல்கள் வெளிவந்தன என்பது,

"மானினேர் விழிமாதராய் வழுதிக்கு மாபெருந்தேவி கேள்
பானல்வாயொரு பாலன் ஈங்கிவன் என்று நீ பரிவெய்திடேல்."

என்ற திருப்பாடலில் தெளித்துரைக்கப்படுகின்றது. இங்ஙனமே அற்புதங்களுக்கெல்லாம் அகச்சான்றுகள் அமைந்து துலங்குகின்றன. பலவற்றை எடுத்துக்காட்ட இங்கே இடனின்று. இனி இத்தேவாரதிருவமுதம் என்னும் உரைநூலாசிரியர் திரு. வே. க. ப. நாதன் அவர்கள் ஈழநாட்டுத் திருத்தலங்களின் மேலதாகிய தேவாரத் திருப்பதிகங்களுக்கு உரை விளக்கம் தந்து அப்பதிகங்களை யாவரும் அன்புடன் ஓதி அவற்றின் உண்மைப் பொருள் கண்டு இன்பத்தில் திளைக்குமாறு இந்நூலை பலவகை யானும் சுவை மலிந்து நிற்க யாத்திருக்கின்றனர்.

உரை விளக்கத்தில் பௌராணிக மதம்பற்றிய செய்தி களுடன் சாத்திரக் கருத்துக்களையும் ஆண்டாண்டு இயைபு பற்றி எடுத்துரைத்துப் பயன் விளைத்திருக் கின்றனர். விளக்கம், எழுதியுள்ள முறை, நூலாசிரியர் செந்தமிழ் மாமறையில் எத்துணை ஈடுபாடு உடையவர் என்பதனை நன்கு விளக்குவதுடன் படிப்போரையும் அந்நிலை அடையுமாறு செய்துவிடுகின்றது என்புது போற்றற்கு உரியது. சொற்றெளிவும் பொருட்பொலிவும் இவ்வுரை யகத்து யாண்டும் அழகுற அமைந்திலங்கு கின்றன. ஆசிரியர் பல துறையிலும் அறிவுமிக்கார் என்பது உரை விளக்கத்தால் நன்கு உணரக்கிடக்கின்றது.

திருத்தொண்டர் புராணத்தினைப் பக்திச் சுவை நனி சொட்டச்சொட்டப் பாடியருளிய சேக்கிழார் பெருமா னிடத்தும் சிவஞானசித்தியார் முதலிய ஞான நூலாசிரிய ரிடத்தும் ஆசிரியர் காட்டும் பேரன்பு சைவ நன்மக்கள்

எவரும் கண்டு இன்புறுவதுடன் அவ்வவரும் மேற்கொளற்கு உரியதாம் என்பது மிகையாது.

இந்நூலாசிரியர் திரு. வே. க. ப. நாதன் அவர்கள் இன்னும் இதுபோன்ற நூற்கள் பல இயற்றிச் செந்தமிழ்ச் சைவ உலகிற்குப் பேருதவிபுரிவதுடன் தாமும் என்றும் பொன்றுப் புகழும் பொருளும் புண்ணியமும் நல்லருளும் பெற்று பொற்கோட்டிமையமும் பொதியமும் எனப் பொலிந்து நிறைந்த அகவைகள் வாழ்ந்திடுமாறு அம்பலவாணன் அடிக்கமலங்களை இறைஞ்சி வாழ்த்துகின்றேன்.

CONNEMARA PUBLIC LIBRARY
6 FEB 1955
MADRAS

CONNEMARA
6 FEB 1955
MADRAS

# தேவாரத் திருவமுதம்

## தோற்றுவாய்

நேசம் நிறைந்த உள்ளத்தால்
நீலம் நிறைந்த மணிகண்டத்
தீசன் அடியார் பெருமையினை
எல்லா உயிரும் தொழஎடுத்துத்
தேசம் உய்யத் திருத்தொண்டத்
தொகைமுன் பணித்த திருவாளன்
வாச மலர்மென் கழல்வணங்க
வந்த பிறப்பை வணங்குவாம்!

உலகில் வாழும் உயிர்க் கூட்டங்கள் பல. அவற்றுள் தலைசிறந்தது மக்கள் தம் உயிர். அவ்வுயிர் வாய்க்கப் பெற்ற ஒருவன் அதன் பயனை நுகர விரும்புதல் இயல்பு. அதற்கு அவன் உள்ளம் அன்பு நிறையப் பெறுதல் வேண்டும். அன்பு நிறைந்த உள்ளம் வாய்ந்தவன், அன்பு மயமாகவே திகழ்வான்; எவருக்கும், எவ்வுயிர்க்கும் அன்பின் வழித் தோன்றும் அருள் பெருக்கி, இரக்கம் காட்டுவான். அவன் கருணைக் கண்ணனாகவே காட்சி அளிப்பான். இறுதியில், அவன் அன்பின் வடிவாய், அன்பே சிவமாய் அமருவான்.

“அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்.
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே!”

என்பது தமிழ் மூவாயிரம் பாடிய திருமூலர் செவ்விய மொழி.

இறைவன் அன்பு நிறைந்த உள்ளத்தவன்; அன்பே உருவானவன். அவன், தன் ஆக்கம் கருதாதவன்; பல்லுயிர்களையும் காத்தருளும் புண்ணியன்; என்றுமுள்ளவன்.

தேவர்கள் இறவாமல் இருக்க விரும்பினார்கள். அதன் பொருட்டு அமுதத்தை உண்ணக் கருதினார்கள். அமுதம் திருப்பாற்கடலில் உள்ளது. அதைக் கடைய மந்தர மலை மத்தாகியது; திங்கள் கடையும் தறியாகியது; வாசுகி நாணாகியது. தேவர்கள் ஒருபுறத்தில் நின்றார்கள்; அவுணர்கள் மறுபுறத்தில் நின்றார்கள்; சல சல எனக் கடலைக் கடைந்தார்கள். கயிறாக அமைந்த வாசுகி பதைத்தது. அது ஆயிரம் வாய்களினின்றும் நஞ்சை உமிழ்ந்தது. பாற்கடலும் தனது நஞ்சைக் கக்கியது. நஞ்சின் கொடூரம் மண், விண் எங்கும் பரந்தது. வானவரும், தானவரும் கலங்கினர்; மேனி கருகினர்; ஓடினர்; சிவபிரானை அடைந்தனர்; காத்தருள வேண்டினர். சிவபிரான் சுந்தரரை நோக்கினார்; அந்த நஞ்சைக் கொண்டு வரும்படி சொன்னார். சுந்தரர் நஞ்சைக் கையாற் பற்றிக் கொண்டு வந்தார். எம்பிரான் அதை வாங்கி உண்டார்; தம் செயலுக்குச் சான்றாக அதைத் திருக் கண்டத்தில் நிறுத்திக் கொண்டார். எம்பிரான் கண்டம் நீலகண்டம் ஆயிற்று. தேவர்கள் மீண்டும் சென்று கடலைக் கடைந்தார்கள்; அமுதம் கிடைத்தது. ஈசன் நஞ்சினை உண்டான்; அமுதினை விண்ணோர்க்கு வழங்கினான். அவன் சாவை அளிக்கும் நஞ்சை உண்டு சாவை அழித்தான்.

மணி வகையில் ஒன்று நீலக்கல். அது நீல ஒளி காலும்; அவ்வாறு திகழ்ந்தது ஈசன் கண்டம். (நஞ்சு நீல நிறத்தது; நஞ்சை நீலமென்பர்; பண்பாகு பெயர்.) அக்கண்டம் அவன் பெருமை எல்லாம் உணர்த்தியது. எம்பிரான் பெருமையே பெருமை. அவன் அடியார் பெருமையே பெருமை. அவன் பெருமையை, அவன் அடியார் பெருமையை, அன்பு நிறைந்த உள்ளத்தோடு

கற்ருரும், மற்ருரும் தொழுதேத்தல் கடன். அவ்வாறு யாவரும் தொழவும், இந்த உலகம் உய்யவும் தோன்றியது திருத்தொண்டத் தொகை. அது தொகை நூல். இறைவன் அருளால் அதை உணர்ந்து, தொகுத்து உலகுக்கு உதவிய திருவாளன் ஆளுடைய நம்பி. முத்தித் திருவுடையது அவனது திருவடிகள். அதை வணங்குதற்கு என்றே வந்தது இம்மக்கட் பிறப்பு. அப்பேறு கிடைத்த மக்கட் பிறப்பு வணங்கத் தக்கது ; வணக்கஞ் செய்வோமாக !

இது தெய்வப் புலமைச் சேக்கிழார் அடிகள் திரு வாக்கு.

ஆளுடைய நம்பியாரே, சுந்தரமூர்த்தி சுவாமிகள். அவரது தேவாரம் பெற்றது எங்கள் நாட்டுத் திருக்கே தீச்சரம். அச் சிறந்த திருமுறை வாக்கை, நாம் காணும் பேறு பெற்றுள்ளோம். அதைப் பாடிப் பாடி, நுண் பொருள் கண்டு, இன்பந் துய்க்கும் பெரும் பேறும் எமக்குக் கிடைத்துள்ளது. திருக்கேதீச்சரத்தான் பெரு மையை, சுந்தரமூர்த்தி நாயஞர் பெருமையை, சிந்தை, மொழி, மெய்களினுல் வந்தனே செய்யும் வாய்ப்பும் எமக்கு வாய்த்துள்ளது. அதற்கு ஏதுவாய் உள்ளது இந்தப் பிறப்பு. அதை வணங்குவாம்.

தமிழகத்தின் ஒரு பிரிவு திருமுனைப்பாடி நாடு. திரு நாவலூர் அங்குள்ள ஓர் ஊர். அவ்வூரில் திருவவதாரஞ் செய்தார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். சுவாமிகளின் தந்தை யார் சடையஞர் ; தாயார் இசை ஞானியார். பெற்ருேர் அவரை நம்பியாரூரர் என்று அழைத்தனர். கழற்சிங்கன் என்ற பல்லவ அரசன் சுந்தரர் காலத்தவன். அக்காலம், எட்டாம் நூற்ருண்டின் தொடக்கம் (கி. பி. 720) என்கின் றனர் ஆராய்ச்சியாளர் சிலர் ; வேறு சிலர் ஒன்பதாம் நூற்ருண்டின் நடுப் பகுதி (கி. பி. 840) என்கின்றனர்.

நம்பியாரூரர் ஒருநாள், வீதியில் சிறு தேர் உருட்டி விளையாடிக்கொண்டிருந்தார். நரசிங்க முனையரையன் குழந்தையைக் கண்டான் ; அன்புகொண்டான் ; சடையஞ

ரிடஞ் சென்றான்; அப்பிள்ளையைத் தருமாறு வேண்டினான். குறு நில மன்னன் கேள்விக்கு இசைந்தார் சடையனார். நரசிங்க முனையரையன் நம்பியாரூரரை அபிமான புத்திரனாக வளர்த்து வந்தான். நம்பியாரூரர் அளவிலாக் கலைகளை ஆய்ந்து ஆய்ந்து அறிஞரானார். அவர் திருமணப் பருவம் எய்தினார். புத்தூரில் சடங்கவியார் என்பவர் ஒருவர் இருந்தார். அவருடைய மகளை நம்பியாரூரருக்குத் திருமணம் செய்துவைக்க விரும்பினார் சடையனார். திருமணத்திற்குத் திருநாள் குறிப்பிடப்பெற்றது. திருமணப் பந்தலிலுள்ள ஒரு பீடத்தில் திருமணப் பிள்ளை வீற்றிருந்தார். ஆலாலசுந்தரருக்கு, தாம் அளித்த வாக்குறுதி முக்கண் மூர்த்திக்கு ஞாபகம் வந்தது; தடுத்தாட்கொள்ளத் திருவெண்ணெய் நல்லூர் அருட் டுறையுள் இருந்து புறப்பட்டார்; திருமணப் பந்தருள் நுழைந்தார்; சுந்தரர் தம் ஒரு திருமணத்தைக் கெடுத்தார்; வல்வழக்காடி அடிமை ஆக்கினார்; பின்னர் இரு மணம் கொடுத்தருளினார்.

"பித்தாபிறைசூடியின்" பேரடியர் ஆனார் நம் வன்தொண்டர். அவர் சேர நாட்டு மன்னன் சேரமான் பெருமகனைத் தன் ஒப்பற்ற தோழனாகக்கொண்டார். இருவரும் திருக்கோயில் வழிபாடாற்றி வந்தனர். சோழநாட்டு ஆலயம் பல சென்று, திருமுன் நின்று, இறைவனை வணங்கினர்; வாழ்த்தினர்; பாண்டி நாட்டை அடைந்தனர். இவர் தம் வரவை அறிந்தான் பாண்டிமன்னன். பாண்டியனும், அவனுடனிருந்த அவன் மைத்துனன் சோழனும் இருவரையும் எதிர்கொண்டு வரவேற்றனர். தமிழ்நில வேந்தர் மூவரும், தமிழ்மொழி வேந்தர் ஒருவருமாய் ஆலவாய்க் கோயில் அமர்ந்த மதுரைப் பதிக் கடவுளை வழிபட்டனர். பின்னர் வன் தொண்டரும் சேரமான் பெருமாளும் பாண்டிநாட்டுப் பழ ஆலயந்தோறும் சென்றனர்; இறைவனைக் கண்கள் ஆரக் கண்டுகளித்தனர்; இன்பக் கடலில் இடைவிடாது தோய்ந்தனர்; இறுதியாய் திரு இராமேச்சரம் வந்து சேர்ந்தனர்;

" நெல்வேலி நீற்றழகர் தமைப்பணிந்து பாடிநிகழ்
பல்வேறு பதிபிறவும் பணிந்தன்பால் வந்தணைந்தார்
வில்வேட ராய்வென்றி விசயனெதிர் பன்றிப்பின்
செல்வேத முதல்வர்அமர் திருவிரா மேச்சரத்து !"

இராமேச்சரம், இராமன் வழிபட்ட தலம். இராம இராவண யுத்தம் முடிந்தது. யுத்தத்தினால் ஏற்பட்ட கொலைபாதகம் தீரும் பொருட்டுக் கடவுளை வழிபடக் கருதினான் தசரத ராமன். அவன் சிவலிங்கம் ஒன்றை அமைத்தான். சிவாகம விதிப்படி அதில் சிவம் எனும் பரம்பொருளை வழிபட்டான். திருஅருள் கூடியது. தீய வினைகள் யாவும் தீயிற்பட்ட வைக்கோல்போன்று அழிந்தன. பின்னர், தன் நகரம் சார்ந்தான் இராமன். இராமனால் சிவ வழிபாட்டுக்கு அமைத்த சிவலிங்கத்தின் பெயர் இராமேச்சரன்; இடப்பெயரும் இராமேச்சரம் என்றாயிற்று. இராம-இராவணப் போர் ஆறாயிரம் ஆண்டுகளுக்குமுன் நிகழ்ந்தது என்பர் சில அறிஞர்.

இராமேச்சரத்தில், அடியவர், பெரியோர், வன்தொண்டருக்கு ஈழ நாட்டுக் கேதீச்சரத்தின் பெருமையைக் கூறினர். மாதோட்டத்திலுள்ள திருக்கேதீச்சரத்தைக் காண அவருக்கு ஆசை மீக்கூர்கின்றது; கடல் தடுத்தது; என் செய்வார்?

திரு இராமேச்சரனை உளம் ஆர நினைந்தார். காலந் தாழ்ப்பதோ கருணையங் கடவுள். கேதீச்சரத்தில் தாம் மணக் கோலமாய் வீற்றிருக்கும் மாட்சியை, கண்களாரக் கண்டுகளிப்ப, வன் தொண்டருக்கு அவர் அருளினார். தொண்டரும் கண்டு களிப்பெய்தினர். இராமேச்சரத்தில் இருந்தவாறே, தோழர் கேட்கும்படி, கேதீச்சரக் காட்சியைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடினர்.

" மன்னும்இரா மேச்சரத்து மாமணியை முன்வணங்கிப்
பன்னுதமிழ்த் தொடைசாத்திப் பயில்கின்றார் பாம்பணிந்த
சென்னியர்மா தோட்டத்துத் திருக்கேதீச் சரம்சார்ந்த
சொன்மலர்மா லைகள்சாத்தித் தூரத்தே தொழுதமர்ந்தார் !"

"உரைப்பார் உரைகண்டு உள்குவார்" என்றார் எங்கள் சுந்தரர். "சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்" என்றார் எங்கள் மாணிக்க வாசகர். குரவர்கள் அருளியவாறே பொருளுணர்ந்து ஓதுதல் எம்மனோர்க்கு எட்டாதது. ஆயினும், நமது நாட்டுத் தேவாரப் பதிகங்களின் பொருளையாவது சமய சாத்திர வழி நின்று ஒரு சிறிது சிந்திப்போமாக!

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த

# திருக்கேதீச்சரத் தேவாரத்திருப்பதிகம்

பண்—நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

(1)

**நத்தார்புடை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வாய்**
**மத்தம்மத யானையுரி போர்த்தமண வாளன்**
**பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்**
**செத்தார்எலும் பணிந்தான்திருக் கேதீச்சரத் தானே.**

[நத்தார் - விரும்பாதவர்; பசு - இனச்சுட்டுப் பெயர், எருது; நனை - அரும்பு; மத்தம் - நெற்றி; பத்து - பற்று, மரூஉச் சொல்.]

அவன் பேரறிவாளன்; தன்னை விரும்பாதாரையும் விரும்பும்படி செய்பவன்; மழவிடை ஊர்பவன்; கவிழ்ந்த அரும்பின் காட்சிபோல நான்று தொங்கும் வாயுடைய, நெற்றிவாய்ந்த, மதயானையின் தோலைப் போர்த்தவன்; மனையாள் உடனிருக்க விளங்குபவன். பற்றுடைய தொண்டர் பலர் வந்து அவனைத் தொழுகின்றனர். அவனது இருப்பிடமோ பாலாவியின் கரையிலுள்ள திருக்கேதீச்சரம். போதாக்குறைக்கு அவன், மாண்டொழிந்தவர் எலும்பையும் மாலையாக அணிந்துள்ளான். மணக்கோல மாப்பிள்ளைக்கு மாலையும் எலும்புதானோ? நன்று நன்று, இருந்தவாறு!

இது வியப்புத்தானே; இல்லை, நகைப்புந்தான்.

" நத்தார்புடை ஞானன்பசு ஏறி "

அவன் விரும்பாதாரையும் விரும்பி வழிப்படுத்தும் பேரறிவாளன்; எவர்பாலும் அன்பால் இரங்கியும், ஒறுத்துங்கூடத் தன் வழிப்படுத்துவான். ஆனால் அவன் பசுவின்மீது ஏறுகின்றான்! இஃதென்னை? வேடிக்கையாக

இருக்கின்றதே என்கின்றார் நம் சுந்தரர். அதை நோக்கின் எமக்கும் அப்படித்தான்'; என்றாலும் கருத்தை ஆராயின் உண்மை வேறாம்.

பசு என்னும் சொல் இனச்சுட்டாய் எருதை உணர்த்துவது.

எம்பிரான், தேர், யானை, குதிரை இவை ஒன்றிலும் ஏறுவதில்லை. எருதொன்றையே அவர் என்றும் ஏறுவார். ஏறொன்றே அவருக்கு உகந்த வாகனம்.

இரண்டாயிரம் நான்கு ஊழிகள் நான்முகனுக்கு ஒருநாள். அந்த நாள் முப்பது கொண்டது அவனுக்கு ஒரு திங்கள். திங்கள் பன்னிரண்டு கொண்டது அவனுக்கு ஓர் ஆண்டு. இவ்வாறு நூறு ஆண்டுகள் முடிந்தால் அவனது ஆயுள் நீங்கும். அது திருமாலுக்கு ஒரு நாள். திருமாலின் ஆயுளும் இவ்வாறே முடியும். அப்போது உயிர்களும், உலகங்களும் அழியும்; தீயானது வியாபித்து உண்ணும்; யாவும் சுடலையாய்த் தூய்மை உடையதாக விளங்கும். அச்சுடலையிலே ஞான முதல்வராகிய சிவ பெருமான் திருநடனஞ் செய்தார். அத்தருணத்தில் அறக் கடவுள் எருதுருவில் எம்பிரான் திருமுன்னர் வந்தது; போற்றியது; "அடியேன் இறக்குந் தன்மையை மாற்றித் தேவரீர்க்கு வாகனம் ஆகும் பேற்றைத் தந்தருள்க!" என வேண்டிக்கொண்டது. சிவபிரான், அறக்கடவுளுக்கு அவ்வரத்தை அருளினார். அந்நாள் முதல் எம்பிரான் எருதின்மீது ஏறுகின்றார்.

ஈசன் முப்புரத்தை எரித்தபோது திருமால், எருதுருவில் அவரைத் தாங்கினார்.

இது புராணம் சொல்லியது. ஆதலின் அறமாகிய தெய்வமே சிவபிரானது வாகனமாம்.

ஆயின், சிவாலயத்தின் கண் திருமுன்னர்க் காணும் நந்தி வடிவத்தின் குறிப்பு என்ன?

முக்கால் முடக்கி, ஒருகால் மடக்கி மண்டியிட்டு எழும்புவதுபோலக் காட்சி அளிப்பது நந்தியாகிய விடை

யல்லவா? முடக்கிய மூன்று காலும் சென்ற மூன்று யுகங்களைக் குறித்துக் காட்டுவன. மண்டியிட்டு எழும்பும் மற்றை ஒருகால் நிகழும் கலியுகம் இதுவெனக் காட்டும். எனவே, யுகங்கள் மூன்று கழிந்தன; நடப்பது கலியுகம் அல்லவா? இது காலத்தின் போக்கும் எல்லையுமாகும். உயிர்களாகிய நாம் காலத்தின் உட்பட்டே வாழும் இயல்புடையோம். இறைவனோ, காலத்தை ஆக்குபவனாயும், காலத்தைச் செலுத்துபவனாயும், காலத்தைக் கடந்தவனாயும் விளங்குகின்றான். காலக்கோட்படுவது நாம். காலத்தின் கோளாய் விளங்குபவன் கடவுள். ஆகலின், காலக்கோள்வாயினின்றும் தப்பினால் இறைவன் திருவடி அடைவோம். இவ்வுண்மையைப் புகட்டவே நந்தியைக் கடந்து சிவவணக்கஞ் செய்யச் செல்லும்படி பெரியோர் ஆணையிட்டுள்ளனர். அன்றியும், காலஞ்செய்யும் அறக் கடவுள் என்னும் குறிப்பை நந்தி வடிவம் உணர்த்தும் என்றும் ஆன்றோர் கூறியுள்ளனர்.

பசுவேறி என்பதில் ஒரு நுண் பொருளும் உண்டு.

பண்டுள்ள பொருள்கள் பதி, பசு, பாசம் என்னும் மூன்று. பதி ஒன்று. பசுக்கள் பல. பாசம் மூன்று. இயல்பாகவே பாசத்தினின்று நீங்கினவர் பதி. இயல்பாகவே பாசத்தினாலே கட்டுண்டவர் பசுக்கள். இயல்பாகவே உயிர்களைப் பந்தித்தது பாசம். சிவபெருமானே பதி. பிறவெல்லாம் பசுக்கள். சிவபெருமான் உயிர்களின் பொருட்டுச் செய்யுந் தொழில்கள் ஐந்து. அவை படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளலாம். இவ்வைந்தும் அருள் தொழில்கள். பிறப்புத் துன்பசாகரம். அதில் அமிழ்ந்தி வருந்தி அழும் உயிர்களை அருட்கரை ஏற்றுபவர் எம்பிரான். அவரால் அழியும் உயிர்கள், பின்னர் அவரினின்று தோன்றுவது மலபரிபாகம் வரும் பொருட்டே. எனவே அவர் உத்தம பசுவின்மேல் ஏறுபவர். இதுபற்றியே, "பசுபதி அதன்மிசை வரு பசுபதி" எனப்பட்டதும் சிந்திக்கத் தக்கது.

" எவ்வுயிரும் பராபரன் சந்நிதியாகு
மிலங்கு முயிருடலனைத்து மீசன் கோயில்;"
என்பது சிவஞான தீபம்.

" நனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்த மணவாளன்"

கயாசுரன் என்பவன் யானைவடிவத்தை உடையவன். அவன் நான்முகனை நினைத்துத் தவஞ் செய்தான். நான்முகன் அவனுக்கு முன்னாகத் தோன்றினான்; "நீ வேண்டிய வரம் யாது? சொல்லுதி?" என்றான். கயாசுரன், "சுவாமீ! அழியாத ஆயுளையும், வலிமையையும், வீரத்தையும் தந்தருளும்;" என்றான். நான்முகன், "நீ வேண்டியவாறே தந்தோம்; ஆனால் சிவபெருமானுக்கு எதிரிற் செல்லாதே; செல்வாயாயின் இவ்வரம் அழியும்;" என்று கூறி மறைந்தான். கயாசுரன் வானுலகத்திற்குச் சென்றான்; இந்திரனைத் துரத்தினான்; ஐராவதயானையின் வாலைப்பிடித்துச் சுழற்றியடித்தான்; சுவர்க்க உலகத்தை அழித்தான்; திக்குப் பாலகர்களைப் புறமுதுகிட்டோடச் செய்தான்; தன் இனத்தவர்களையும் வதைத்தான்; நிலவுலகத்திலும் துன்பஞ்செய்து நஞ்சுபோலத் திரிந்தான். முனிவர்களும் மக்களும் அவனைக்கண்டு அஞ்சி ஓடி, எம்பிரான் எழுந்தருளியிருக்கும் காசிப்பதியை அடைந்தார்கள்; "அடியேம் உய்யும்படி அருள்புரியும்!" என்று காசி விசுவநாதரை வேண்டினார்கள். கயாசுரன் அவ்விடத்தை அடைந்து இடிபோல உரப்பினான்; விசுவநாதரை அடைக்கலம் புகுந்தவர்களை அழிக்குமாறு சென்றான். கோயிலுட் புகுந்த சனங்கள் மனங்குலைந்து விசுவேசரைத் தழுவி மயங்கினர். சிவபிரான் சங்கார உருக்கொண்டார்; தமது திருமுடி அண்டத்தின் உச்சியைத் தொட நிமிர்ந்து ஆயிர கோடி ஞாயிறொளியுடன் தோன்றினார். தேவர்களும் முனிவர்களும் மற்றவர்களும் அத்திருவுருவைப் பார்க்க முடியாதவர்களாகக் கண்களைப் பொத்திக் கொண்டார்கள்; வருந்தினார்கள். எம்பிரான் ஒருதரஞ்

சிரித்து, மெல்லவாக உரப்பினர். அதனால் உலகமெல்லாம் நடுங்கின. அவ்வொலியைக்கேட்ட நான்முகன் முதலிய தேவர்களும் வெருண்டார்கள். கயாசுரன் நான்முகன், முன் சொல்லியதை மமதையால் மறந்தான்; எம்பிரானுடன் போர் செய்ய முயன்றான். சிவபிரான் ஒரு திருவடியினால் அவனை உதைத்தார். அவன் கவிழ்ந்து பதைத்து வீழ்ந் தான். சிவபிரான் அவனுடைய தலையை ஒரு திருவடி யாலுந் தொடையை ஒரு திருவடியாலும் மிதித்துக் கொண்டார்; இரண்டு திருக்கரங்களின் நகங்களினால் முதுகிற்கிழித்து நான்கு கால்களும் பக்கங்களிற் பொருந் தும்படி இரத்தம் பெருகத் தோலை உரித்தார். எம்பிரா னின் உக்கிரத் திருமேனியின் பேரொளியைப் பார்த்த உயிர் களின் கண்கள் ஒளியிழந்து பதைத்தன. உமாதேவியாருங் கலங்கினர். எம்பிரான், உயிர்கள் கண் ஒளி மழுங்கிய தைத் தீர்க்கத் திருவுளங்கொண்டார்; அந்த யானைத் தோலைத் தம் திருமேனிமேற் போர்த்துக் கொண்டார்; தம்முடைய பேரொளியை மறைத்துக்கொண்டார். உயிர் கள் அச்சம் நீங்கின; கண்ணொளியை மீண்டும் பெற்றன.

> "செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
> செயற்கரிய செய்கலா தார்"

என்பர் திருவள்ளுவர். எம்மனோரால் செய்தற்கு அரிய செயல் செய்பவர் எம்பெருமான். அவரே முழு முதற் கடவுள்; உயிர்களைப் படைத்துக் காத்து அழித்து, மறைத்து அருளுந்தெய்வம்.

. அவனது கோலமோ மணக்கோலம். ஏன்? சிவபெரு மான் உயிர்களைப் பந்தித்த பாசத்தை ஒழிப்பவர். அதன் பொருட்டுத் தம்மோடு ஒற்றுமை உடைய சத்தியைக் கொண்டு ஐந்தொழில் நடாத்துபவர். அவர் அருளோ சத்தி; அவர் அருளோ பெண்வடிவுற்றது; அவர் அருளோ உமை; அவர் உருவோ சத்தி; அவர் உருவோ அருள்; அவர் உருவோ ஞானம். சிவன் அருள் இன்றி உயிர் இயங்காது; சிவன் அருளோடே உயிர் இயங்கும்.

எனவே, சிவமுஞ் சத்தியுமாய் உலகை ஈன்றவர் சிவபெருமானே. குணமின்றிக் குணியில்லை; சத்தியின்றிச் சிவமில்லை.

"அருளது சத்தியாகு மரன்தனக் கருளையின்றித்
தெருள்சிவ மில்லையந்தச் சிவமின்றிச் சத்தியில்லை
மருளினை யருளால்வாட்டி மன்னுயிர்க்களிப்பன் கண்கட்
கிருளினை யொளியாலோட்டு மிரவியைப்போல வீசன்"

"ஆக மங்களெங்கேயறு சமயந்தானெங்கே
போகங்களெங்கே புணர்ப்பெங்கே—பாகத்
தருள்வடிவுந் தானுமாயாண் டிலனேலந்தப்
பெருவடிவை யாரறிவார் பேசு"

என்னுந் திருச்செய்யுள்களும் சிந்திக்கத்தக்கவை.

முன்னர் ஒரு பிரமன் தோன்றினன். அவன் பல உயிர்களைப் படைக்கக் கருதினன், முதலில் சநகர் முதாலகிய நான்கு மக்களை உண்டாக்கினன். அவர்கள் நல்ல தவத்தர்களானார்கள். பிரமனின் சிருட்டித்தொழில் விருத்தியடையவில்லை. அவன் திருமாலிடஞ்சென்று முறையிட்டான். திருமால் நான்முகனை அழைத்துக்கொண்டு திருக்கைலை மலையை அடைந்தார்; இக்குறையை நீக்கி அருளும்படி விண்ணப்பித்தார். கைலாசபதி அவர்களைத் துகளாக அழித்தார்; தமது இடது தோளை நோக்கினார். அதினின்று உமாதேவியார் தோன்றியருளினார். சிவபிரான் அவரை இடப்பாகத்தில் அமர்த்தினார்; துகளாக அழித்தோரை மீண்டும் உண்டாக்கினார். அவர்கள் எம்பிரானை வணங்கினர். அவர் திருமாலை நோக்கி, "நாம் நமது அருட்சத்தியாகிய உமையோடு கூடினேம். இனி நான்முகனுடைய படைத்தல் தொழில் முன்போலக் கைகூடும். செல்க!" என்றார். பின்பு நான்முகனுடைய படைப்புத்தொழில் கைகூடியது. எம்பிரான் உமாதேவியாரோடு வீற்றிருந்து அருளினார்; ஆண் பெண் ஆசையோடு சேர்ந்து இன்பமெய்தின; உயிர்கள் விருத்தி எய்தின. அங்கப்பிரத்தியங்க, சாங்க உபாங்கமாகக் காணப்படும் வடிவமெல்லாம்

சத்தியே; அந்தந்த வடிவச் சத்திமயமாகி நிற்பவர் எம்பெருமான். இவ்வாறு கந்த புராணம் கூறுகின்றது.

வீடு பேற்றை விரும்பினர் பிருங்கி முனிவர். அவர் சத்தியை விட்டுச் சிவமூர்த்தியைத் தரிசித்தார். உமா தேவியார் அவரிடம் தம் கூருகிய இரத்தம், இறைச்சிகளை வற்றச்செய்தார். பிருங்கிமுனிவர் நடக்கவும் சத்தியற்ருர்; சிவமூர்த்தியை வேண்டினர்; சிவமூர்த்தி ஒரு கோலுங் காலுந்தந் தருளினர். இதனல் பிராட்டியார் எம்பிரானைத் தவஞ்செய்தார்; பத்தர் வழிபாடு தமக்கும் கிடைக்கும் உரிமை பெற்ருர்; அர்த்தபாகத்திற் கலந்தார். இதுவும் புராணக் கூற்று.

> " தென்பால் உகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்
> பெண்பால் உகந்தான் பெரும்பித்தன் காணேடி
> பெண்பால் உகந்திலனேற் பேதாய் இருநிலத்தோர்
> விண்பால் யோகெய்தி வீடுவர்காண் சாழலோ "

என்பது திருவாசகம்.

இறைவன் சிவமும் சத்தியுமாய் நின்று உயிர்களை இயக்குவன். அவ்வாறு அவன் இயக்காவிடின் உயிர்கள் ஆணும் பெண்ணுமாய் இன்பந் துய்க்க மாட்டா.

"அவளால் வந்த ஆக்கம் இவ்வாழ்க்கை எல்லாம்" என்றது சிவஞானசித்தி.

> " நங்கையினுமைனைத்துஞ் செய்தாற்போ ருடனைத்து
> நங்கையினற் செய்தளிக்கு நாயகனு—நங்கையினு
> நம்பியாய்த்தானடுவே நாட்டப்பெறுமிதுகா
> ணெம்பெருமானுர்த மியல்பு "

என்பது திருக்களிற்றுப் படியார்.

> " பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரை
> செத்தார் எலும்பணிந்தான் " [மேல்

அவன் இருப்பிடம் பாலாவியெனுந் தீர்த்தக்கரையில் உளது. பற்றுடைய தொண்டர் பலர் அவனைத் தொழுது நிற்கின்றனர். அவன் மணக்கோலமாக எழுந்தருளியிருக்

கின்றான்; ஆனால் பிணவெலும்பை அணிந்திருக்கின்றானே! என்னே புதுமை!

ததீசிமுனிவர் தக்கனுக்குக் கூறுகின்றார் :—

"அருளையே திருமேனியாகக் கொண்டவர் சிவபெருமான். அவர் நான்முகன் முதலிய தேவர்களை முன்னே தந்தார்; தாம் அவர்களைப் பொருந்தி நின்று உயிர்களைப் படைத்தல் முதலியவைகளைச் செய்தார்; அவ்வுயிர்களுக்கு வினைப் பயன்களை ஊட்டினார்; இருவினையொப்பு மலபரிபாகம் வரப்பெற்ற உயிர்களை வீடுபேறடையச் செய்தார்; மற்றைய உயிர்களையும் உலகங்களையும் அழித்தார்; திருமால், நான்முகன் முதலிய தேவர்களை ஒடுக்கி அருளினார். ஆனால் எம்பிரான் தாமோ முன்போல ஏகமாக இருந்தார்; (இருப்பார்;) அதன் பின்னும் ஐந்தொழில்களையுஞ் செய்வார். இவ்வாறு அழித்தல் தொழிலைச் செய்யுந்தோறும் நான்முகன் முதலிய தேவர்களுடைய எலும்புகளைத் தரிப்பார்; அவர்களுடைய தலைகளை எல்லாம் மாலையாகத் தொடுத்துப் பூண்பார்; அவர்களுடைய சிகைகளைப் பூணூலாக அணிவார்; அவர்களை முத்தலைச் சூலத்திற் கோத்து ஏந்துவார்; அவர்களைச் சாம்பராக்கித் திருவுடலிற் பூசுவார். இவ்வாறு எம்பிரான் செய்தற்குக் காரணம் அத்தேவர்களின் மாதவங்களேயாம். இன்னுமொரு காரணமுண்டு. அது யாதோவெனில், யாவரும் எவர்க்குந் தலைவர் எம்பிரானே என்று அறிவதற்காம்; அவரை அடைந்து பாவங்களை நீக்கி வீடுபேற்றைப்பெற்று உய்தற்காம். எலும்பு, சாம்பல் முதலியவற்றைச் சிவபிரான் முன்னுளில் அணிந்தமை அவர் எல்லா உயிர்களிலும் வைத்த திருவருட் செயலாம்".

"நங்காய் இதென்னதவம் நரம்போ டெலும்பணிந்து
கங்காளந் தோள்மேலே காதலித்தான் காணேடி
கங்காளம் ஆமாகேள் காலாந்த ரத்திருவர்
தங்காலஞ் செய்யத் தரித்தனன்காண் சாழலோ"

என்ற திருவாசகமுங் காண்க.

எனவே செத்தார் எலும்பணிந்தது ஊழிமுடியினும் தான் முடியா ஒருவன் என்பதை உணர்த்தவன்றோ?

" திருக்கேதீச்சரத்தானே "

தேவர்கள் திருப்பாற்கடலில் அமுதம் எடுத்தனர். அசுரர்களை விலக்கிவிட்டு அவ்வமுதத்தைப் பருக அவர்கள் ஓரிடஞ் சென்றார்கள். ஆங்கு அவுணன் ஒருவனும் மாறு வேடத்திற் புகுந்தான். மோகினி வடிவங்கொண்ட திருமால் அமுதத்தைப் பங்கிட்டு வழங்கினர். அப்போது சூரிய சந்திரர்களுக்கு இடையில் கரந்து நின்ற அவுணனும் தன் கரங்களை நீட்டினன்; அமுதத்தை பெற்றான்; பருகினன். பக்கத்தே நின்ற சூரிய சந்திரர்கள் இவன் அவுணன் என்பதை அறிந்தனர்; திருமாலுக்குக் காட்டினர். அவர் தன் கையிலிருந்த சட்டுவத்தால் அவுணன் தலை வேறு உடல் வேருகும்படி வெட்டினர். அவுணன் அமுதம் பருகியவன். எனவே அவன் இறக்கவில்லை; சிரத்துண்டம் பாம்பின் உடலும் அவுணத்தலையும் உடைய ஒருருவாகி யது; உடற்றுண்டம் பாம்பின் தலையும் அவுணன் உடலும் உடைய மற்ருேருருவாகியது. அவுணன் ஈருரு உடைய னாய் விளங்கினன். இவ்விரண்டு உருவங்களே இராகுவும் கேதுவும். இவர்கள் இருவரும் கேதீச்சரத்தை அடைந் தனர்; கடுந்தவஞ் செய்தனர்; தங்களைக் காட்டிக் கொடுத்த சூரிய சந்திரரை இடையிடையே விழுங்கி வருத்தும் வரம் பெற்றனர்.

இராமன் சிவ வழிபாடாற்றிய இடம் இராமேச்சர மானது. அதேபோலக் கேது சிவ வழிபாடாற்றிய இடம் கேதீச்சரமானது. அவ்விடத்தில் அமர்ந்து அருள் செய் பவன் திருக்கேதீச்சரத்தான் ஆனன்.

குறிப்பு: இப்பாடலில், "நத்தார்படை" என்றும், "எலும்பணிவான்" என்றும், "மழுவாளன்" என்றும் பாடங்கொள்ளப்படுவதுண்டு.

(2)

சுடுவார்பொடி நீறுந்நல்ல துண்டப்பிறை கீளும்
கடமார்களி யானையுரி யணிந்தகறைக் கண்டன்
படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
திடமாவுறை கின்றான்திருக் கேதீச்சரத் தானே

[சுடுவார்பொடிநீறு - உயிர்ஒழிந்த உடலைச் சுட்டுப்பெற்ற சாம்பல், எனவே வெண்ணீறு என்பதாம் (விபூதி); துண்டம் - ஒரு கீற்று ; கீள் - அரையிற் சுற்றிக் கட்டுந் துணி ; கடம் - மத நீர்; கண்டன் - கழுத்தை உடையவன் ; படம் - அரவின் படம் ; ஏர் - அழகு.]

அவன் எரிகாட்டின் சுடுபொடி வெண்ணீற்றைப் பூசி விளங்குகின்றான்; அருமையான களங்கமற்ற கீற்று மதியையும் (ஒற்றைப் பிறை) சூடியுள்ளான்; ஐந்து விரல் அகலமுள்ள துணியை அணிந்துள்ளான் ; மதம் நிறைந்துதருக்குற்ற யானையின் தோலையும் தரித்துள்ளான் ; கறுத்து நிறம் வாய்ந்து அழகு செய்யும் கழுத்து விளக்கம் தருகின்றது; அரவின்படம் போன்று அகன்று சுருங்கும் இடையுடைய பெண்ணோடு மிகுந்த உறுதிப் பாட்டுடன் எழுந்தருளியுள்ளான்; உறைவிடமோ பாலாவியின் கரையிலுள்ள திருக்கேதீச்சரம். இவனது போக்கும் நோக்கும் என்னே ! நாம் அறியக் கூடாப் பெருமை உடையனவாயிருக்கின்றனவே.

" சுடுவார்பொடி நீறும் "

ஊழி முடியுங்காலத்து அவன் ஒருவனே எஞ்சி நிற்பான் ; உயிர்கள் யாவையும் மாயையுள் ஒடுக்குவான் ; பருப்பொருளாம் உடம்பைத் தன் பார்வையாற் சுட்டெரிப்பான் ; அவ்வெண்ணிறச் சாம்பலைத் தன் திருவுடல் முழுதும் பூசுவான் ; பாண்டரங்கக் கூத்தாடுவான். அவன் போல இவன் காட்சி அளிக்கின்றான் என்பதைச் சுட்டுவது.

உலகங்கள் அழியும்போது அருவமாக நிற்கும் மாயை சாம்பரெனப்படும். அம்மாயையைத் தாங்குபவர் எம்

பிரான் என்பதைச் சாம்பரணிதல் காட்டும். "காடுடைய சுடலைப் பொடி பூசி" என்பர் திருஞான சம்பந்தர்.

"துண்டப் பிறை"

பதினாறு கலை நிறைந்துள்ள மதியம் நாளடைவில் தேய்ந்தது; பதினைந்து கலை ஒழிந்தது; கலையெல்லாம் ஒடுங்கியது; ஒற்றைக் கலையோடு களங்க மறத் தூயதாய்க் கீற்று மதியாய் விளங்கியது. தக்கன் இட்ட சாபத்தால் முழு மதியம் இந்நிலை அடைந்தது. மெலிந்த உடலோடு மதியப்புத்தேள் (பிறைச் சந்திரன்) எம்பெருமானை அடைக் கலம் அடைந்தது; அடையவே ஆதரித்துப் பிள்ளை மதி யானதால் அச்சம் நீக்கி அருள்புரிந்தார். அதை அறிவோம்.

தக்கன் தனது இருபத்தேழு பெண்மக்களைத் திங்க ளுக்குத் திருமணஞ் செய்து கொடுத்தான்; அவர்கள் யாவ ருடனும் ஒரே தன்மையான அன்புடையவனாக இருத்தல் வேண்டும் எனத் திங்களுக்குக் கட்டளை இட்டான். அப் பெண்களுள் கார்த்திகையும், உரோகணியும் பேரழகுடைய வர்கள். திங்கள் அவர்களிடம் மிகுந்த அன்புவைத்தான்; மற்றவர்களை வெறுத்தான். அவர்கள் தக்கனிடஞ்சென்று நடந்ததைக் கூறினார்கள். "திங்களுடைய கலைகள் தொலைக" என்று சாபமிட்டான் தக்கன். திங்களின் கலை கள் நாடோறும் ஒவ்வொன்றாகக் குறைந்தன. பதினைந்து நாட்களில் பதினைந்து கலைகள் அழிந்தன. ஒரு கலை மட்டும் எஞ்சியது. எஞ்சிய அந்த ஒரு கலையுங்கூடத் தொலைந்துவிடுமோ என்று மயங்கி மெலிந்து வெட்கினான் திங்கள்; இந்திரனை அடைந்து அறிவுரை கேட்டான். இந்திரன் சந்திரனைப் பார்த்துச் சொல்வான்: "நீ முன் னொரு காலத்திலே கணபதியின் திருவயிற்றையும், திருக் கரத்திலுள்ள மோதகத்தையும் பார்த்துச் சிரித்தாய். அவர் யாரும் உன்னைக் காணாதிருக்குமாறு சபித்தார். அன்று தொட்டு யாவரும் உன்னை நோக்காதிருந்தனர். நீ நாண மடைந்து விண்ணில் இயங்காது ஒடுங்கினாய். இதை

நான்முகன் முதலிய தேவர்கள் கண்டனர்; கணபதியின் திருவடிகளைப் பணிந்தனர்; சாபத்தை ஆண்டில் ஒரு நாளைக்கு உன்மேற் கொள்ளுமாறு, திருவருள் செய்யுமாறு கேட்டனர். கணபதி அவ்வாறே அருள் புரிந்தார். ஆவணித் திங்கள் பூர்வபக்கச் சதுர்த்தியில் உலகோர் கணபதிக்குச் சிறப்பான வழிபாடு செய்து உன்னைப் பாராது இருந்தனர். இது பழம் பழி. இப்போது புதிய பழி ஒன்றையும் பெற்றாய். நீ மதி கெட்டாய்; விரைந்து சென்று நான்முகனிடம் கூறு.'' சந்திரன் சத்திய வுலகத்திற்குச் சென்றான்; நான்முகனை வணங்கினான்; சாபத்தை நீக்கும்படி வேண்டினான். அதற்கு நான்முகன் சொன்னான்: "தக்கன் தன் மனம்போன போக்கிற் போகின்றவன். அவன் என் சொற் கேட்கமாட்டான். நீ எம்பிரானிடம் முறையிடு. அவர் உடனே நீக்கி அருளுவார்.'' சந்திரன் நான்முகனை வணங்கித் திருக்கைலை மலையை அடைந்தான்; எம்பிரானைப் போற்றிப் பணிந்தான்; சாபத்தை நீக்கும்படி முறையிட்டான். "சந்திரனே அஞ்சாதே!'' என்றார் பரமபதி; தேய்ந்துபோனவை போக மிஞ்சியிருந்த ஒரு கலையை எடுத்துத் தமது திருச் சடையில் வைத்துக்கொண்டார். தக்கன் சாபம் அவ் விடத்து அடைந்திலது. இறைவன் திங்களை நோக்கினார்; "இனி நீ கவலற்க! நம்முடைய முடியிலணிந்த இந்தக் கலை அழியாது. அதனால் உனது பழைய கலைகள் யாவும் பதினைந்து நாட்களில் நிரம்பிப் பின்னர் அவ்வாறே தேய்ந்து வந்து, ஒரு கலை மாத்திரம் தேயாதிருக்கும். இது எந்தக் காலத்தும் நிகழும்'' என்றருளினார். இறைவனைத் திங்கள் வணங்கித் தன் பதத்தை அடைந்தான்; விண்ணுலகத்திற் சஞ்சரித்தான். அவனுடைய கலைகள் வளர்வதுந் தேய்வதுமாக இருந்தன. தக்கன் சாபம் வலிமையுடையது. பெரியோர் வாக்குப் பொய்த்தல் முரண். எனவே எம்பிரான் அச்சாபத்தை அறவே ஒழிக்க வில்லை; தன்னருளால் பிள்ளை மதியின் வெள்ளைக் கிரங்கித்

தேய்ந்த கலையாவும் வளர்கவென வாழ்த்திஞர்; தனது தலையின் மீது அச்சமின்றி வாழவும் இடங்கொடுத்தார். இதுவன்றே அருள்!

இதில் இயற்கை நியதியும் ஒன்றுண்டு. சூரிய சித்தாந்த வழக்கின்படி சந்திரன் நாள்தோறும் ஒவ்வொரு நட்சத்திரத்தை (விண்மிசை விளங்கும் நாண்மீன்) அணுகும்; அப்போது சூரியனுக்கும் சந்திரனுக்கும் உள்ள தூரத்திற் கேற்ப ஒளி விளங்குவதும் மழுங்குவதும் உண்டு. அதைக் குறிப்பதும் துண்டப் பிறையின் கருத் தல்லவா?

சிவஞானத்தைச் சிவபிரானது திருமுடியிலுள்ள சந்திர கலையாகச் சொல்வதுமுண்டு.

"கீளும்
கடமார்களி யானையுரி யணிந்தகறைக் கண்டன்"

அவனது இடையினைச் சுற்றி விளங்குகின்றது வெண் ணிறக் கச்சை ஒன்று; உடலைச் சூழ்ந்து இருள் நிற முடைய யானைத் தோல் போர்த்தப்பட்டுள்ளது. அவனே "செம்மேனி அம்மான்" அல்லவா? எனவே அவன் தனது சிவந்த நிறமேனி மிசை வெண்திருநீறு பூசியிருக்கின்ருன்; கழுத்துக் கருமணிபோற் கறுத்து விளங்குகின்றது; இவை காணுவென்று தலையிற் பிறையுஞ் சூடி அழகுஞ் செய்துள்ளான். என்னே காட்சியின் பொலிவு. அவன் சாவா மருந்தெனும் அமுதத்தைத் தேவர்களுக்கு அருள் சுரந்து நல்கினுன்; தன் உயிரைத் துரும்பாய் மதித்தான்; சாம்நஞ்சினைத் தான் துஞ்சினும் பிறர்துஞ்சலாகாவென உண்டான்; குறையிரந்தார்க்குக் குறை நிறைவு பெறச் செய்தான். நஞ்சுண்டும் நாம் காண வீற்றிருக்கின்ருன் பெருமையே பெருமை. அவன் கலைவல்லான் ஆவன்; எனவே நஞ்சின் களங்கமாம் கலப்புப் பொருள்களைப் போக்கினுன்; நஞ்சை அமுதாக்கி உண்டு சாவா திருந்தான். நஞ்சு அமுதாவதும், அமுதம் நஞ்சாவதும்

அறிவார் அறிவியல் அறிஞர். ஆகலின் அவன் அறிவியல் அறிஞனுமாவன்.

"படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
திடமாவுறை கின்றான்திருக் கேதீச்சரத் தானே"

நஞ்சை அமுதாக்கும் அறிஞன் அவன். அவ்வாறே நமது பழவினைகளைத் தீர்த்தருளும் பண்பன் அவன். நமது பந்தங்கள் நீங்க அருளும் பரமன் அவன். நமது பாசங்களைக் களைபவன் அவன். வினையினின்றும் விடுதலை காட்டும் தந்தை அவன். குணமின்றிக் குணியில்லை. அதேபோன்று சத்தியின்றி அவனில்லை. ஆகவே அவன் பெண்மகளுடன் மனையறம் நடாத்தும் மாண்பு சிறக்கப் பெருமித உருவோடு உறைகின்றான். எங்கே? பாலாவி என்னுந் தீர்த்தக் கரையிலுள்ள திருக்கேதீச் சரத்தில். என்னே இவன் இறுமாப்பு!

மணிவாசகப் பிரானார், "பைந்நாப்பட அரவேரல்குல் உமைபாகமதாய்" என்று கூறுவதுங் காண்க.

(3)

அங்கம்மொழி யன்னார்அவர் அமரர்தொழு தேத்த
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநல் நகரில்
பங்கம்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேல்
செங்கண்அர வசைத்தான் திருக் கேதீச்சரத் தானே.

[அங்கம் - வேதப்பொருட் கூறுபாடு; வங்கம் - தோணி; பங்கம் - குறை அல்லது ஈனம்; அசைத்தான் - கட்டிக் கொண்டான்.]

வேதங்களை அறிந்தோர் அவனை வணங்கித் துதிக் கின்றனர். வேதத்துள் விளங்கும் பொருள் யாதென ஆராயத்தக்கவாறு வகைப்படுத்தி விரித்துரைப்பது வேதக் கூறுபாடு. அவ்வேதக் கூறுபாடாம் அறுவகைப்பட்ட உறுப்புக்களை உணர்ந்தோர் அவனைத் தொழுது ஏத்து கின்றனர்; தேவர்கள் போற்றி அஞ்சலி செய்கின்றனர். அவனது உறைவிடம் திருக்கேதீச்சரம். அது பாலாவி யெனுந் தீர்த்தக் கரையில் உள்ளது. பாலாவி, மாதோட்டம் எனும் நல்நகரில் இருக்கின்றது. அம்மாதோட்டமோ மரக்கலங்கள் பலவாய் ஓடிச் செல்கின்ற கடலை அடுத்து விளங்குகின்றது. அவன் தன் முடியில் இளம் பிறையைச் சூடியுள்ளான். அப்பிறை தன் கலை அளவு குறையப் பெற்றது. அவன் தன் அரையில் பாம்பைக் கச்சையாகக் கட்டியுள்ளான். அந்தப் பாம்போ சிவந்த நிறமுள்ள கண்களையுடையது. தன்னைத் தொழுவோரும், இளம் பிள்ளை மதியமும் அஞ்சும்படி அவன் பாம்புக் கச்சை கொண்டிருப்பது விந்தையா யிருக்கின்றதல்லவா?

"அங்கம்மொழி யன்னார்அவர் அமரர்தொழு தேத்த"

இந்நிலவுலகத்து மறையோர் அவனைப் போற்றித் தொழுகின்றனர். அம்மறையவர்கள் ஆறுவகைப்பட்ட வேத உறுப்புக்களைப் பயின்றவர்கள்; பொருள் அறிந்த வர்கள். அவ்வேத உறுப்புக்கள் இலக்கணம், தருக்கம், மருத்துவம், கந்தருவம், படைக்கலம், பொருள் நூல்

என்பனவாம். இவை இருவ்வகைப்பட்ட நியாய நூல்கள் என்று சொல்லப்படுவன. எம்பிரானைத் தேவர்களும் வணங்கித் துதித்து நிற்கின்றனர். அவர்கள் கட்புலனாகாது கரந்துவந்து தோன்றும் இயல்புடையவர்கள். எனவே, கால் நிலந்தோயும் மக்களும், கால் நிலந்தோயாக் கடவுளர் பலரும் உடன் ஒருங்கு நின்ற காட்சி புலனாகின்ற தல்லவா?

அங்கமாவன :

" இருவகைப்படு நியாயம் ஆயுள்மறை எழிற்கந்
தருவவேதம் வில்வேதமோ டருத்தநூல் "

என்று காஞ்சிப் புராணங் கூறும்.

" கற்பங் கைசந் தங்கா லெண்கண்
தெற்றே னிருத்தஞ் செவிசிக் கைமூக்
குற்ற வியாகர ணமுகம் "

என்று மணிமேகலை கூறும்.

நச்சினார்க்கினியார், சிக்கையை ஒழித்துப் பிரமத்தைக் கூட்டி, " ஆறங்கமாவன : உலகியற் சொல்லை ஒழித்து வைதிகச் சொல்லை ஆராயும் நிருத்தமும், அவ்விரண்டையு முடனாராய்ந்த ஐந்திரத் தொடக்கத்து வியாகரணமும், போதாயனீயம், பாரத்துவாசம், ஆபத்தம்பம், ஆத்திரேயம் முதலிய கற்பங்களும், நாராயணீயம், வராகம் முதலிய கணிதங்களும், எழுத்தாராய்ச்சி ஆகிய பிரமமும், செய்யு ளிலக்கணமாகிய சந்தமுமாம் " (தொல். புறத். 20. உரை.) என்றனர். ஈண்டுக் கூறிய எண்ணைச் சோதிடம் என்றும் கொள்ப.

மறையாவன : தைத்திரியமும் பௌடியமுந் தலவ காரமுஞ் சாமவேதமுமாம். வேதவியாதர் வரையறைப் படுத்திய காலத்து ஓதுகின்ற நான்கு வேதமுமாம்; இருக்கு, யசுர், சாமம், அதர்வம்.

சொல்லப்பெற்ற அறுவகை நூல்களை ஓதி அவற்றின் வழி ஒழுகுபவரே அந்தணர் என அழைக்கப்படுவார். தொல்காப்பியனாரும்,

"அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்" என்றே எடுத்துக் கூறினர்.

ஆனால், திருவள்ளுவப் பெருந்தகையோ அதற் கொரு விரிவுரையாக,

"ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின்"

என்று கூறுமிடத்து "அறுதொழிலோர்" என விளக்கி யுள்ளதும் காண்க.

"வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநல் நகரில்"

மாதோட்டம் ஓர் அழகிய கானலஞ்சோலை; நல்ல நகரம். அது கலங்கள் மிகுந்து விளங்கும் குடாக்கடலை அடுத்துள்ளது.

"பங்கம்செய்த பிறைசூடினன்"

திங்கள் நாளொருவண்ணமாகத் தேய்ந்தது; மெலி வுற்றது; ஒற்றைக் கலைப் பிள்ளை மதியாயது. அது அச்சத் தால் எம்பிரானை அடைக்கலம் புகுந்தது. எம்பிரான் அதை ஆதரித்தார்; வளரும்படி அருளினர்; முடியில் சூடினர். இவ்வடியில் இன்னுமோருண்மையுண்டு. தேய்மதி இர வியை அடுத்து விளங்கும் காலத்து இராகுக்கோள் எனும் பாம்பு அதைப் பற்றுது; மதிமறைவு (கிரகணம்) ஏற்படாது. எனவே அச்சமின்றிப் பிறை வளரும். ஆகவே வளர்பிறையாயிற்று.

"பாலாவியின் கரைமேல்
செங்கணரவ வசைத்தான் திருக் கேதீச்சரத் தானே"

பாலாவியின் தீர்த்தக் கரையில் விளங்குகின்ருன் திருக்கேதீச்சரத்தான். அவனைச் சரண் புகுந்த பிள்ளை மதி அவனது கற்றையஞ்சடை மீது வளருகின்றது. அம்மதி பாம்பைக் கண்டு அஞ்சுமென்று அவன் கருத வில்லையா? கருதுவானுயின் அரையிற் சீற்றமுடைய அரவத்தைக் கச்சையாக அணிவானு? பிள்ளை மதிக்கு வெள்ளை அறிவுதானே என்று தன் சொல்லை மறத்த

லாகுமோ? என்ன? இது வியப்பாக வன்றோ இருக்கின்றது. ஓ, வியப்பிலும் ஓர் உண்மை இருக்கும் போலும்; நோக்குவோம். முழுமதியைத்தானே இராகு என்னும் கரும்பாம்பு பற்றிக் கொள்ளும். இளமதியை அது பற்றாது. இவ்வுண்மையை எங்கட்கு அறியச்செய்ய வேண்டாமோ. எனவே சீற்றமுடைச் செங்கண் அரவை அரைக்கு அசைத்துக் காட்டுகின்றான் போலும்.

புராணஞ் சொல்வதென்னை?

வினையால் எவையும் ஆக்கலாம் பெறலாம் என்பர் தாருக வனத்து முனிவர். இவர்கள் கொண்ட கொள்கை கருமகாண்டக் கொள்கை. வினை (கருமம்) அறிவற்ற பொருள். அது அறிவுடைப் பொருளைத் தானாகச் சென்றடையாது. அவ்வுண்மையை உணராதவர்கள் அம்முனிவர்கள். எனவே அவர்கள் அதர்வ வேதத்திற் கூறப்படும் அபிசார (எதிர்முக) மந்திர வலியால் வேள்வியிடை ஒரு பாம்பைத் தோற்றுவித்தனர்; அதனை இறைவன்பால் ஏவினர். அது கோபத்துடன் இறைவனை நோக்கிச் சென்றது. அவர் அதைப்பற்றிக் கச்சையாக அணிந்து கொண்டார். முனிவர்களின் ஆணவம் வலிகெட்டது; சிவபிரானே மெய்ப்பொருளென்று வழிபட்டு நல்வழிப்பட்டனர்.

(4)

கரியகறைக் கண்டன்நல்ல கண்மேல்ஒரு கண்ணன்
வரியசிறை வண்டியாழ்செயு மாதோட்டநல் நகருள்
பரியதிரை யெறியாவரு பாலாவியின் கரைமேல்
தெரியுமறை வல்லான்திருக் கேதீச்சரத் தானே.

[கரிய - கருமையான; வரிய - வரிகளையுடைய; யாழ் - இசை; பரிய - பருத்த, பெரிய; எறிதல் - வீசுதல்; மறை - வேதம்.]

அவன் மேலும் மேலும் கறுத்து அமைந்து விளங்கும் கழுத்தை உடையவன்; நோக்க நோக்கப் போக்கருக் காட்சி அளிக்கின்றான். அவன் மூன்று கண்களும் பெற் றுள்ளான். கேதீச்சரத்தை அவன் தனக்கு உறைவிடமாகக் கொண்டுள்ளான். அக்கேதீச்சரம் பேரலை வீசிவரும் பாலாவியின் தீர்த்தக் கரையில் உள்ளது. பாலாவி மாதோட்டத்தில் உள்ளது. மாதோட்டம், வரிகளையுடைய செய்ய சிறகுவாய்ந்த, தேன் உண்ணும் ஈக்கள் மொய்த்து இசையால் பாடுகின்ற (ஒலிக்கின்ற) நகர். அவனது காட்சியின் மாட்சிதான் என்னே! வேதம் தெரியும் ஒப் பற்ற வல்லான் இவன் போலும்.

"கரியகறைக் கண்டன்"

கருமை என்பது நிறப் பண்பு. கருமை நிறம் இய லாக உள்ள பொருள் யாவும் நாளடைவில் வெளுக்கும்; வெண்ணிறம் படர்ந்து விளங்கும். இறைவன் கழுத்தில் காணப்படும் கருமை நிறம் அவ்வாறு மாறாது. அது கன்னங்கரேல் என்னக் கறுத்துக் கருமை நிறப் பண்பு மேலும் மேலும் ஊறிக் காட்சி அளிக்கின்றது. இது பற்றியே "கரியகறைக் கண்டன்" என்றார் போலும் சுந்தரமூர்த்திகள்.

எம்பிரான் உண்ட நஞ்சு தொண்டையில் நின்று விட்டது. அது நெஞ்சினிடம் செல்லவில்லை. அதைப் போலக் கடவுளை அடைய விரும்புவோர் நஞ்சு போன்ற

பொருள்களை மனதாலும் நினைத்தல் கூடா ; தூய்மையான மனத்துடன், இருதயத்துடன் இருக்கவேண்டும்.

" நல்ல கண்மேல்ஒரு கண்ணன் "

எம்பிரான் எங்கும் நிறைந்தவன். அவன் முழுமுதல். எனவே ஞாயிறுந் திங்களுந் தீயும் அவனுக்கு முக்கண்கள் என்று அறிந்தோர் உரைப்பர்.

எவர்க்கும் கண்கள் இரண்டு. அவை ஊனொடு பொருந்திய ஊனக் கண்கள். அவ்வூனக் கண்கள் போலாது, அவன் ஞானக் கண்ணும் கொண்டுள்ளான். இதனை, அகக் கண், அகங் கண், அங்கண் என்றும் புகல்வர். இவ்வகக் கண் தோன்றுமிடம் நெற்றி என்றும் இலலாடமத்தி என்றும் இரு புருவத்திடை என்றும் கூறுவர். மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், இதயம், விசுத்தி, ஆக்ஞை எனப்படும் ஆதாரம் (உயிர் நிலை) ஆறு. இவற்றில் ஆறுவதாக எண்ணப்படும் ஆக்ஞை, ஆக்னேயம் அல்லது அக்கினி என்ற பெயரால் அழைக்கப்படும் ஞானத் தீக் கண் உடையவன் கேதீச்சரத்திறைவன்.

சாதாரணக் கண்கள் இரண்டும் இச்சை, கிரியை ; நெற்றிக்கண் சத்தி என்றும் பெரியோர் கூறுவர். எம்பிரான் சாதாரணக் கண்கள் இரண்டையும் மூடி நெற்றிக் கண்ணைத் திறப்பர். அவ்வாறே உயிர்கள் இச்சையையும் கிரியையும் அடக்கி ஞானத்தை எழுப்பல் வேண்டும் என்பதும் பொருளாம்.

" வரியசிறை வண்டியாழ்செயும் மாதோட்டநல் நகர் "

தேனீக்கள், தம்முடல் முழுதும் ஒருவகை வரிகள் அமைந்து விளங்குகின்றன. அவை தேறுண்ணச் செல்லுங்கால் இரைச்சலிடுகின்றன. அவ்விரைச்ச லோசை மிகுந்த பெருஞ் சோலை வாய்ந்தது மாதோட்ட நன்னகர்.

" பரியதிரை எறியாவரு பாலாவியின் கரைமேல்
தெரியும்மறை வல்லான்திருக் கேதீச்சரத் தானே "

அவன் இருப்பது கேதீச்சரம் என்னும் கோயில். அக்

கோயில், பேரலைகள் மீள மீளச் சீறி ஏறிவரும் பாலாவியின் தீர்த்தக் கரையில் உள்ளது. அலை கரையை யுறிஞ்சுவதால் கரை கரைந்துவிடாதோ? கரை கரைந்துவிடின் கதி யென்னும்? எம்பிரான் கண்காணியாய் இருந்து அறங் காக்கின்றான். ஆகவே கரை கரைவ தெப்படி? அவன் யோகியாகவும் காணப்படுகின்றான்; முக்கண்ணுடை மூர்த்தியாகவும் விளங்குகின்றான். மற்றைத் தேவர்க் கில்லாத நெற்றிக் கண்ணும் ஞானக்கண் அவனுக்குண்டு. ஆதலின் அவன் இருந்த இடத்தே எல்லாம் ஒருங்கே உணரும் பேரறிவும் பேராற்றலும் உடையவன். அவன் பிறர் காணாத் தன்மையன்; மறைந்திருந்து உயிர்கட்குப் பேரருள் புரிவான். அவன் பிறபொருளைச் சாரான். அவற்றைத் தன் சார்பாகக் கொண்டு அருள்வான். அதனை நோக்கின் அவனே மறையவனும் ஆகின்றான். மறைந்திருந்து (மறை பொருளை) மறைப்பொருளை அவன் தோற்றுவிக்கின்றான். மறை என்பது யாது? மறைப்பொருள் என்பது யாது? எனப் பிறர் அறிய உணர்த்தும் ஆற்றல் வாய்ந்தவன் அவன். எனவே அவன் அச்சமின்றி உறைகின்றான். மறை வல்லான் இவனே. அவனன்றி ஓரணுவும் அசையாதல்லவா?

## (5)

**அங்கத்துறு நோய்கள்அடி யார்மேல்ஒழித் தருளி**
**வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநல் நகரில்**
**பங்கம்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்**
**தெங்கம்பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத் தானே.**

[அங்கம் - உறுப்பு, உடல்; பங்கம் - பாதி; மடவாள் - பெண்.]

அவன்பால் அன்பு கூர்ந்து ஒழுகுகின்றனர் அடியவர். அவர்க்கு வினை வசத்தால், விதிவசத்தால் உடல் உறுப்பு நோய்கள் வந்து அணுகுகின்றன. அவன் அதைக் கண்டான்; தன் கடைக்கண் நோக்கினுல் நோக்கினுன்; அந் நோய்களைப் போக்கினுன்; அருளும் புரிந்தான். மேலும், அவன் தன் அடியவரை நோய் பற்ருது ஆட்கொள்ள விரும்பும் உள்ளத்தவன் போலும் காட்சி அளிக்கின்ருன். நோய் கெடுக்கும் அருமருந்தாய் அவன் விளங்குகின்ருன். அவன் ஒரு பெண்ணுேடு தனித்திருந்து வாழ்க்கையில் நல்லறம் புரிகின்ருன். மரக்கலம் மிகுதியும் செல்லும் கடலை அடுத்து விளங்கும் பட்டினம் மாதோட்டம். ஆங்குள்ளது பாலாவி எனும் தீர்த்தக் கரை. அத் தீர்த்தக் கரையில் விளங்கும் தெங்கம் சோலை ஒன்று உண்டு. அதன் நடுவிலுள்ள கேதீச்சரம் எனும் கோவிலைத் தனக்கு உறைவிடமாக அவன் கொண்டுள்ளான். அடியவர்பால் அவன் கொண்டுள்ள அன்புதான் என்னே! மருந்து கொடுப்பான் மருத்துவன். இவன் அவ்வாறன்றி மருந்தாகவே விளங்குகின்ருன். ஆனதாலன்ருே எதிர்ப்படும் அடியார் நோய் எளிதில் நீங்கி விடக் காண்கின்ருேம்.

**“ அங்கத்துறு நோய்கள்அடி யார்மேல்ஒழித் தருளி ”**

நோய் உடலை வந்து பற்றுவது இருவகை. ஒன்று உடலோடு சார்ந்து அடங்கி ஒடுங்கியிருக்கும்; நாளடைவில் வளர்ச்சி பெறும்; வளர்ச்சி பெற்றுப் பின் வெளிப்

படத் தோன்றியும், தோன்ருமலும் துன்புறுத்தும். மற்றென்று நோயுற்ருர் உடனுறைவால் வந்து பற்றித் துன்புறுத்துவதாம். எவ்வகையாயினும் இருவகை நோயும் துன்பந் தருவனவேயாம். நோயுற்ற துன்பு தீர விரும்புவது நோயுடையான் இயல்பு. எனவே அவன் மருத்துவனை அணுகி மருந்து வேண்டுகின்ருன் ; மருத்துவனும் மருந்து தந்து உதவுகின்ருன் ; உணவு வகையிற் சில பக்குவமும் எடுத்துச் சொல்லுகின்ருன் ; நோயாளி அவ்வழி ஒழுகின் நோய் தீரப் பெறுகின்ருன். நோய் சற்றே தணிகின்றது. அவ்வளவில் நோயாளி மகிழ்ச்சி அடைகின்ருன். இப்போது நோயின் வேகந்தான் தணிந்துள்ளது ; நோய் மூலம் தீரவில்லை. எனவே, மீண்டும் மீண்டும் மருத்துவனை நாடுகின்ருன் நோயுடையான் ; இறுதியில் வெறுப்புக் கொள்கின்ருன் ; "இறைவனும் கடவுள் என்பால் இரக்கமில்லான், என்ன வன்கண்மை" என்கின்ருன் ; "கடவுளும் இல்லை, காப்பாரும் இல்லையே" என்று புலம்புகின்ருன். இவனது அறியாமை என்னே !

"உடன் · பிறந்தே கொல்லும் வியாதி" என்ற பண்டைச் சான்ருேர் சொல்லையும் அவன் தெரிந்தானில்லை. தோன்ருது துன்புறுத்தும் நோய் சூலை. அப்பர் அடிகளுக்கு அந்நோய் தீர்ந்த வகையையாவது பெரியோரிடம் அவன் கேட்டறியலாகாதா ? வன் தொண்டப் பெருமகனுர்க்கு உற்றுத் தோற்றித் துன்புறுத்திய நோய் தீர்ந்த முறையினையாவது அவன் அறிந்தானு ? என்னே பாவம் !

உடலுறு நோயின் மூலம் அறிந்து போக்க வல்ல ஒருவனும், தன்னை வந்து அடையாத ஒருவனைத் தேடிச் சென்று தீர்ப்பானே ?

ஆகலின், தன்பால் அன்புடையவனையும், குறிப்பு வழிப்பட்டு ஒழுகுபவனையும் உள்ளான்மேல் உள்ள நோய் களைதல் மருத்துவன் இயல்பு.

அவ்வாறே எம்பெருமானும் விளங்குகின்ருன். எம்பிரான் தன் அடியவர்க்குற்ற நோய் எத்துணைக் கொடிதா

யினும் இரங்குகின்றான் ; திருக்கடைக் கண் நோக்காற் கடிகின்றான் ; களைகின்றான்.

" வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநல் நகரில்
பங்கம்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம்பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத் தானே.

அவன் பார்வையா லன்றியும், உப்பு நீர் முழுக்காலும், நல்ல நீராட்டாலும் நோய்கள் பல களையப் பெறுகின்றன. நல்ல காற்று உடலிற் படுவதாலும் சில நோய்கள் தீரப் பெறுகின்றன. அடியவர்கள் காலையில் எழுந்து கடும்புனல் நீராடி, வெண்ணீறு பூசியே இறைவனைக் காணச் செல்லுகின்றனர். இறைவன் அவர்பால் உடலுறு நோய் மூலம் களையப்படா திருப்பின் கடைக்கண் பார்வையாற் களைவான் ; எதிர்ப்படு மாத்திரமே நோயுந் தீர்ந்துவிடுகின்றது. " நீராடாதாரோடு சாராதே, சாரின் நோய் சாரும் ". இவ்வுண்மையும் இப்பாட்டடிகளாற் புலனும்.

(6)

**வெய்யவினை யாயதடி யார்மேல்ஒழித் தருளி**
**வையமலி கின்றகடல் மாதோட்டநல் நகரில்**
**பையேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்**
**செய்யசடை முடியான்திருக் கேதீச்சரத் தானே.**

[வெய்ய - கொடிய; வையம் - நிலம், தோணி; பை - பாம்பின்படம்; செய்ய - சிவந்த; சடைமுடி - சடையும் முடியும்.]

*தீய, கொடியவினை என்பவை தன் அடியவர்பால் தாக்கா வண்ணம் அவன் கடிந்து காத்துள்ளான்;* மேலும் காப்பான். காக்குந் *திருவுள்ளங்* கொண்டதால் அவன் இன்றும் *திருக்கேதீச்சரத்தை* உறைவிடமாகக் கொண் டுள்ளான். அது பாலாவியின் *தீர்த்தக்* கரையிலுள்ளது. பாலாவித் *தீர்த்தக்* கரையோ மாதோட்ட நகரில் இருக் கின்றது. அம்மாதோட்டமோ நிலம் நிறைய மிகுநீர்ப் பெருக்காலுறும் கடல் அடுத்து விளங்கும். அவன் திருக் கேதீச்சரத்தில் தனியாகவா இருக்கின்ருன்? அன்று, அன்று. அவன் ஒரு பெண்ணேடு அமர்ந்துள்ளான். அம்மாது நல்லாளுமோ அரவின் படம்போல விரிந்து மேலோங்கி விளங்கும் இடை வாய்ந்தவளாவள். நோக்கின். செந்நிறச் சடையும் முடியும் தோற்றம் அளிக்கின்றன, கேதீச்சரத்தான் பெருமையே பெருமை.

**"வெய்யவினை யாயஅடி யார்மேல்ஒழித் தருளி"**

வினை இருவகைப்படும். ஒன்று நல்வினை. மற்ருென்று *தீவினை.* ஒரு காரியம் செய்ய முற்படுவோன் எவனும் நலம் கருதியே செய்கின்ருன்; அவ்வாறு அவன் கருதுவது நலம்தான். ஆனல் அவன் செய்வது நன்னெறியா அல்லது தீ நெறியா என்பதை நோக்கவேண்டும். நல்வினை யின் பயனும் தீவினையின் பயனும் தம்மில் முரணுனவை. தீயவினை கடிந்து ஒதுக்கப்பட வேண்டியது. நல்வினை மேற்கொள்ளப்படவேண்டியது. ஆகவேதான் பெரியோர்,

"ஒன்றே செய்க ஒரொரு காலில்
ஒன்றும் நன்றே செய்க"

என்று வலியுறுத்திச் சென்றனர்.

அறநூல் கூறவந்த திருவள்ளுவப் பெருந்தகை கூறுவதென்னை? "மக்கள் மனத்தால் நினைக்கவும் அஞ்சப்படும் பொருள் ஒன்று உண்டு. அதுவே தீவினையாகும். எனவே அத்தீவினை புரிதலுமாகாது; மனத்தால் நினைக்கவுமாகாது: நினைத்தாலும் செய்தாலும் அத்தீயவினை செய்தார்க்குத் தீமையே விளைக்கும்; பிறப்புத் தொறும் தீமை விளைக்கும். அத்தகைய தீயவினை தீயினும் மிக அஞ்சப்படும்"; என்றார் அவர்.

"தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்"

பாவம் பாவத்தையே விளைக்கும். பாவம் நெருப்பினும் பெரியது. நெருப்பு வேரைச் சுடமாட்டாது; பாவம் வேரையும் சுட்டுப்போடும்.

வினை பிறப்புத்தோறும் பயன் தந்து கழியும். ஆதலால், நாம் இப்பிறப்பில் தீய காரியங்கள் செய்யாதொழியினும் முற்பிறப்பிற் செய்தவை இப்பிறப்பிற் பயன் தருவது உண்மை. நல்வினை விளைவாயின் நாம் நன்மைபெற்று மகிழ்ந்து இன்புறுவோம். தீயவினை விளைவாயின் நாம் ஆற்றாது அரற்றி வருந்துவோம். சடப் பொருள் (பருப்பொருள்) அறிவில்லாதது. உயிர் அறிவுடையது. அறிவுடைப் பொருளை அறிவில் பொருள் எங்ஙனம் வந்தடையும்? வினையோ அறிவில் பொருள். அதைச் செய்தவன் அறிவுடையவன். அவன் நல்வினை விளைவாம் இன்பம் நுகர விரும்புபவன். ஆகவே, அவன் கொடுமை விளைக்கும் தீயவினையின் விளைவை நுகர ஒருக்காலும் விரும்பான். அத்தீய வினையோ அவனைச் சென்று பற்ற இயலாத் தன்மையது. எனவே இடையில் ஒருவன் வேண்டும். வினை செய்தவன் அவ்வினையின் விளைவைப் பெற மத்தியில் ஒரு பேரறிவன் இருந்து

பொருந்த நுகரச் செய்தல் வேண்டும். இதை அறிஞர்கள் ஆய்ந்தாய்ந்து கண்டனர். கண்டவழி தீயவினையின் விளைவைப் போக்க எண்ணினர்; இடையில் நின்று ஊட்டு வானைப் பணிவுடன் கண்டு முறையிட்டனர். அவனும் அன்போடு இரங்கினன்; தீயவினை வந்து தாக்குங்கால் துன்பம் தோன்றாதவாறு அருள்புரிந்தான். அவர்கள் இன்பத்தின் வழியே துன்பம் யாதென உணராது துய்த்துப் புறங்கண்டார்கள்; துன்பம் நீங்கப் பெற்றார்கள். இவர்களே அடியார் எனப்படுபவர்கள். இவ்வுண்மை சாக்கிய நாயனார் வரலாற்றால் அறியலாம்.

"செய்வினையும் செய்வானும் அதன்பயனும் சேர்ப்பானும்
மெய்வகையால் நான்காகும் விதித்தபொருள் எனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி யல்லவற்றுக் கில்லையென
உய்வகையாற் பொருள்சிவன்என் றருளாலே உணர்ந்தறிந் [தார்."

இதுவே மேன்மைகொள் சைவ நீதியுமாம்.

"வையமலி கின்றகடல் மாதோட்டநல் நகரில்
பையேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
செய்யசடை முடியான்திருக் கேதீச்சரத் தானே."

உடனுறை மணவாட்டியின் கூற்றில் அவன் பின்னிய சடை கொண்டுள்ளான்; தன் கூற்றில் விரிசடை முடித்த முடிகொண்டு விளங்குகின்றான். மாதொருகூறன் அல்லவா இறைவன். அவன் மணவாளனாகவன்றே திருக்கேதீச் சரத்தில் அமர்ந்து விளங்குகின்றான்.

நீருள் நிவந்த (உயர்ந்தோங்கிய) நிவப்பு (உயர்வு) இந்த உலகம். அது தன்னகத்தே யிருந்து ஊற்றெடுக்கும் ஊற்றுநீர்ப் பெருக்கே கடல். எனவே "வையமலிகின்ற கடல்" என்று சுந்தரர் குறித்துள்ளார் போலும்.

(7)

ஊனத்துறு நோய்கள்அடி யார்மேல்ஒழித் தருளி
வானத்துறு மலியும்கடல் மாதோட்டநல் நகரில்
பானத்துறு மொழியாளொடு பாலாவியின் கரைமேல்
ஏனத்தெயி றணிந்தான்திருக் கேதீச்சரத் தானே.

[ஊனத்து - உடலில்; வால்நத்து - வெள்ளியசங்கினம்; பால்நத்துறும் - பாலின் இனிமையும் விரும்பும்; ஏனத்து - பன்றியின்.]

ஊனில் அடங்கி யுலாவி உருவாகும் கொடு நோய்கள் உண்டல்லவா? அவற்றைத் தன் அடியாரிடத்து நின்றும் அவன் போக்கி அருள்புரிந்துள்ளான். மேலும், தன்னை வந்தடைவாருறும் நோய்களையும் போக்குவான். அதற்காகவே கேதீச்சரம் என்னும் கோயிலை உறைவிடமாக் கொண்டான். அது மாதோட்ட நகரிலுள்ள பாலாவியின் கரையில் உள்ளது. மாதோட்டம் வெண்ணிறச் சங்கினங்கள் மிகுந்துலாவும் கடலையடுத்துள்ளது. அவன் தனித்தும் இருக்கவில்லை; இல்லாளையும் தன்னுடன் கொண்டுள்ளான். அவளோ பாலின் சுவையும் பழித்து மிகவோங்கும் இன் சுவை வாய்ந்த சொல்லாள். நோக்கின், அவன் பன்றியின் கொம்புமன்றோ அணிந்து காட்சி அளிக்கின்றான்.

"ஊனத்துறு நோய்கள்அடி யார்மேல்ஒழித் தருளி"

"குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு"

என்றார் திருவள்ளுவனார். எனவே, உடம்பு வேறு; உயிர் வேறுதான் என்பது தெளிவு. ஆனால், ஊன் என்பது உடம்பொடு தொடர்புடையது என்பது தேற்றம். ஊனையே அடிப்படையாகக் கொண்டது உடம்பு. உடம்பிற் காணும் நோய் ஊனில் அடங்கியிருந்து காலப்போக்கில் விளைந்து வெளிப்படுவதாகும். ஊன் குறையவே உடல் மெலிவு காணும். கல்வியிற் பெரிய கம்பரும், "ஊனும், உயிரும், உணர்வும்" என்றார். எனவே உடலொடு பிரியா ஊன்

வேறு, உயிர் வேறு, யான் என்னும் உணர்வு வேறு என்பது தெளிவு. நம் சுந்தரமூர்த்திகளும், "ஊனாய், உயிரானாய், உடலானாய்" என்றார் பிறிதோரிடத்தில். ஆகவே எம்பிரான் மனவுணர்வுக்கும், கட்பார்வைக்கும் தோன்றும் நோய்களை யெல்லாம் தீர்த்தான்; அந்நோய்களின் மூலம் யாதெனத் தேர்ந்து அறவே களைந்தான்.

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என்றார் தெள்ளத் தெளிய வள்ளுவப் பெருந்தகை. அவர் இவ்வுலக மருத்துவர்க்குக் கூறுவதுபோலவே அவ்வாறு கூறினார். இறைவன் அவ்வாறல்லன். அவன் எல்லா உலகுக்கும் நோய் தீர்க்கும் வல்ல மருத்துவத் தலைவன் —வைத்திய நாதன். அதை வலியுறுத்திக் காட்டவே "ஊனத்துறு நோய்கள்" என்றார் நம் சுந்தரர்.

"வானத்துறு மலியும்கடல் மாதோட்ட நல் நகரில்"

முத்துவிளைக்கும் இப்பி (சிப்பிகள்) மிகுந்த குடாக் கடலை அடுத்துள்ளது மாதோட்டம். இது நாம் அறிந்தது. ஆயின், இப்பிக்குலம் மட்டுமல்ல, சங்கின் குலமும் முத்து விளைப்பன என்பது முன்னையோர் கூற்று. "திருமுத் தீன்ற வலம்புரி" என்பர் சிந்தாமணியார். அத்தகைய இப்பியும் சங்கும் மிகுந்துலாவும் கடல் என ஆளுடைய நம்பியார் இங்கு குறித்துள்ளார் போலும்.

"பானத்துறு மொழியாளொடு பாலாவியின் கரைமேல்
ஏனத்தெயி றணிந்தான் திருக் கேதீச்சரத் தானே."

அவன் திருக்கேதீச்சரத்தில் அமர்ந்துள்ளான். பாலினும் இனிய மொழியாள் உடனுறைகின்றாள். அவன் பன்றியின் கொம்பும் அணிபெற அணிந்துள்ளான். பன்றியின் கொம்பை அவன் அணிந்திருப்பது நாம் உணரும் பொருட்டேயாம்.

இரணியாக்கன் என்னும் அவுணன் தேவர்களைத் துன்புறுத்தி வந்தான். அவன் ஒருநாட் பூமியைக் கவர்ந்து

வயிற்றில் மறைத்துக்கொண்டு பிலத்திற் புகுந்தான். உலகங்களெல்லாம் நடுங்கின. தேவர்கள் அஞ்சினர். திருமால் நான்முகனுடைய நாசியில் ஒரு பன்றியாகத் தோன்றினர்; விண்ணிற் போய் மேருமலைபோல் வளர்ந்தார்; நொடிப்பொழுதிற் பாதலத்திற் புகுந்தார்; கொம்பினல் இரணியாக்கனைக் கொன்றார்; பூமியைக் கொண்டுவந்து முன்போல நிறுத்தினர். அதனல் அவர் தன்னைப் பரமென்று மதிக்க முற்பட்டார்; அகந்தையுற்றார்; அறிவிழந்தார்; பூமியைக் கோட்டினல் இடந்தார்; கடலையும் உடைத்தார். இவ்வாணவச் செயல்களைச் சிவபிரான் கண்டார்; அங்கு வந்தார்; ஏனத்தின் கோட்டில் ஒன்றைப் பிடுங்கினர். திருமாலுக்குப் பண்டை உணர்வு வந்தது; முன்னை உருவங்கொண்டு நின்று துதித்தார். எம்பிரான் மறைந்தார். அவர் அன்று பிடுங்கிய ஏனக்கோட்டை அறிகுறியாக அணிந்தார். அது இன்றும் அவருடைய திருமார்பிற் பிறைபோல விளங்கும். இது புராணக் கூற்று.

இக்கூற்று எம்பிரான் ஆணவத்தை நீக்குபவர் என்பதை உணர்த்தும். ஆணவமலத்தால் பற்றப்படாமல் யாண்டும் தூயனய் விளங்குபவன் எம்பிரான். ஆணவ மலத்தாற் பற்றப்பட்டோரை அவற்றினின்று நீக்குபவனும் எம்பிரானே.

(8)

**அட்டன்அழ காகஅரை தன்மேல்அர வார்த்து**
**மட்டுண்டுவண் டாலும்பொழின் மாதோட்ட நல்நகரில்**
**பட்டவரி நுதலாளொடு பாலாவியின் கரைமேல்**
***சிட்டன்நமை யாள்வான்திருக் கேதீச்சரத் தானே.***

[அட்டன் - எண்வகைப் பொருள்வடிவாய் விளங்குவன்; அரை - இடை; மட்டு - மணம், தேன்; ஆலுதல் - ஆடுதல், பாடுதல்; பட்டம் - நெற்றிப்பட்டம் என்னும் ஓர் அணிகலன்; நுதல் - நெற்றி; சிட்டன் - நல்லோன்.]

நிலம், நீர், தீ, காற்று, விசும்பு, பருதி, மதி, உயிர் ஆகியவை எண்வகைப் பொருள்கள். இவைகளோடு பொருந்தி நின்று இயக்கும் அட்டமூர்த்தியே அவன். அவன் அழகு எவர் உள்ளத்தையும் கவரும் தன்மையது. அவன்தன் இடுப்பைச் சுற்றிப் பாம்பு ஒன்றை வளைத்துக் கட்டியுள்ளான். மாதோட்டநகர் பெருஞ்சோலைகள் உள்ளது. அச்சோலைகளில் மணந்தருதேனுண்டு. அதை உண்ண விரைந்து இரைந்து கொண்டு, ஆடிப் பறந்து வரும் வண்டுகள் அப்பொழில்களில் நிறைந்திருக்கும். இவ்வனப்புமிக்க நகரிற் பாலாவியெனும் தீர்த்தக்கரையுண்டு.

ஆங்குள்ள திருக்கேதீச்சரத்தை அவன் உறைவிடமாகக் கொண்டுள்ளான். அவன் தனியனுமில்லை; ஒரு பெண்ணோடு உடனுறைகின்றான்; அவளும் நெற்றிப் பட்டம் என்னுஞ் சுட்டி அணிந்து, வரைகள் மலிந்து நிறைந்த நெற்றியோடு விளங்குகின்றாள்.

"அட்டன்"

அவன் அட்டமூர்த்திபோலும். எண்வகைப் பொருளொடும் இறைவன் தன் பேராற்றல் வழி கலக்கின்றான்; அவற்றை விளங்கவும் இயங்கவுஞ் செய்கின்றான்; ஆன

தால் அட்டமூர்த்தியென்று அழைக்கப்படுகின்றான். மணிவாசகனார்,

" நிலம்நீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்துநின்றான் "

என்றெடுத்துக் காட்டிய முறையும் நோக்குக.

" அழ காகஅரை தன்மேல்அர வார்த்து "

புலித்தோல், மான்தோல் ஆடை நெகிழுவதை அவன் விரும்ப வில்லை; எனவே இடுப்பைச் சுற்றிப் பாம்பை வளைத்து இறுகக் கூட்டியுள்ளான். அத்தோற்றம் காண்போர் கண்ணும் உள்ளமும் ஒருங்கே கவரும் வனப்பு மிக்கது. இதன் குறிப்பு என்னை? வடிவுடைப் பொருள் யாவும் மகாமாயை அல்லது குடிலை என்னும் ஓர் ஒப்பற்ற கேடில்லாத பொருள் வழியன்றித் தோன்றுவதில்லை. ஓசை அல்லது ஒலி என்று சொல்லப்படும் அணுப்பொருளும் ஒளி என்னும் அணுப்பொருளாற் சூழப் பெற்று விளங்குவதாம். நாத (ஒலி) வடிவாம் இறைவனது வடிவமும் மகாமாயையின் வழித்தோன்றி விளங்கும் சுத்தமாயா தத்துவத்தின் தொடக்கத்தே தோன்றுவதாகும். எனவே, உயிர்களின் பொருட்டு அருள்புரியவே தனக்கென ஒரு வடிவிலாத்தம்பிரான் *மாயை வழித்தோன்றுவான்; அருளுருவம் காட்டி நம்மை யாட்கொள்ளுவான் என்ற உண்மை இவ்வடிகளிற் புலனாகின்றது.

இங்கு ஓர் ஆசங்கை தோற்றும். இறைவன் மாயா காரியமான வடிவம் கொள்ளுவானாயின், அவன் சீவர்களுள் ஒருவனல்லனோ? அவன் சீவர்களுள் ஒருவனல்லன். அவனது வடிவம் சீவர்களின் மாயா தேகத்தைக் கழிக்க

---

*மாய்தல் என்னும் சொல்லின் முதனிலை மாய் என்பதாகும். ஆதல் என்னும் சொல்லின் முதனிலை, ஆ ஆகும். இரண்டும் புணர மாய்+ஆ மாயா என்னும் சொல் தோன்றும்; மாயை என வழங்கும். மாய்தல் - ஒடுங்குதல்; ஆதல் தோன்றுதல்.

வந்த கருணை வடிவம் ; ஞான வடிவம். இதைச் சித்தியார்

"மாயைதான் மலத்தைப்பற்றி வருவதோர் வடிவ மாகும்
ஆய வாணவ மகன்ற அறிவொடு தொழிலை யார்க்கும்
நாயகன் எல்லா ஞானத் தொழில்முதல் நண்ண லாலே
காயமோ மாயை யன்று காண்பது சத்தி தன்னால் ;"

என்று விளக்கமுறத் தெரிவித்துள்ளார்.

"மட்டுண்டுவண் டாலும்பொழில் மாதோட்டநல்
நகரில்"

மாதோட்ட நகரப்பொழிலிலுள்ள மலர்களின் மணம் எங்கும் வீசுகின்றது. மணம்பெற்றதும் மதுவுண்ணும் வேட்கை வண்டுகளுக்கு மீக்கூர்கின்றது. அவைகொண்ட விடாய் தணியும் பொருட்டு மலர்தொறும் மலர்தொறும் மூசுகின்றன ; ஒலிகள் மிகுந்தன. இது வெளிப்படை ; நுண்பொருளும் ஒன்றுண்டு. அன்பின் விளைவாய் இன்பப் பொருளாய் உள்ளவன் இறைவன். அவன் எவ்வுயிர்க்கும் இனியன். அவன் தேனுவான். அத்தேனை அன்புடைய வண்டுகள் மணம்பெற்று உண்ண வந்தன ; வாயாரப்பருக இயலாது கண்களாரப் பருகின "அரனே அரனே" என்று வாழ்த்தின. அவ்வாழ்த்தொலி மிக்கது மாதோட்டநகரம். வாதவூரர் கூறியவாறு "செந்தீயுந்துந் தேன்" அல்லவா எம்பெருமான் ? அதை எங்ஙனம் வாயாரப் பருகவியலும் ? வாய் அள்ளூறினும் கண்களாரப் பருக வியலுமேயன்றிப் பிறிது வேறுண்டோ ? இவ்வுண்மையும் இவ்வடிகளிலுண்டு.

"பட்டவரி நுதலாளொடு பாலாவியின் கரைமேல்
சிட்டன்நமை யாள்வான்திருக் கேதீச்சரத் தானே."

பட்டம், மாதர்அணிகலன்களில் ஒன்று. அது நெற்றிப்பட்டம். "பட்டமுங் குழையுமின்ன" என்று சிந்தாமணியாரும் உரைப்பர். கௌரியம்பிகை நெற்றிச் சுட்டியெனப் படும் பட்டம் அணிசெய்ய வரைமிகுத்த

நுதலாள் ஆவள். வரைமிகுதி அகவையின் பெருக்கத்தைக் குறிப்பது. அவளொடு சிட்டன் உள்ளான். அச்சிட்டனுகிய திருக்கேதீச்சரத்தப்பன் நம்மையாட்கொள்வான். எம்பெருமாட்டியேயன்றி இறைவனும் பட்டங்கட்டியுள்ளான் என்பதை,

" பட்டநெற்றியர் பால்வெண்ணீற்றினர் "

என்ற அடியால் திருஞான சம்பந்தப் பெருமகனுர் தெரிவித்துள்ளனர்.

(9)

**மூவர்என இருவர்என முக்கண்ணுடை மூர்த்தி**
**மாவின்கனி தூங்கும்பொழில் மாதோட்டநல் நகரில்**
**பாவம்வினை யறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்**
**தேவன்எனை யாள்வான்திருக் கேதீச்சரத் தானே.**

[மூவர் - அயன், மால், உருத்திரன் ; இருவர் - சத்தி, சிவம் ; முக்கண் - கதிர், மதி, அக்கினி ; பாவம் - தீவினை ; வினை - நல் வினை.]

அவன் மூன்று கண்ணுடைத்தலைவன் ; அயன், மால், உருத்திரன் என்று எண்ணப்படும் மூவராகவும் உள்ளவன்; ஆணொடு பெண்ணையும் அமர்ந்து விளங்குபவன். அவன் மாதோட்ட நகரில் உள்ளான். அந்நகர் மாமரத்தின் கனி தொங்கி விளங்கும் சோலை சூழ்ந்தது. அவன் கோயில் கொண்டது பாலாவியின் தீர்த்தக்கரையிலுள்ள திருக் கேதீச்சரம். ஆங்கு முன் செய்தீவினை விளைவும், மேல் செய் யும் வினையும் ஒருங்கேபோக்கும் அன்பர்கள் சென்று வருவர். அம்மாதேவன் என்னையாளுடையான்.

"மூவர்என இருவர்என முக்கண்ணுடை மூர்த்தி"

எம்பிரான் உயிர்களின் பொருட்டு அயனை அதிட்டித் துப்படைத்தல் செய்வர் ; மாலை அதிட்டித்துக் காத்தல் செய்வர் ; உருத்திரனை அதிட்டித்து அழித்தல் செய்வர். இவ்வாறு அவர் இடையறாதியற்றுவர். எம்பிரானால் அழி வெய்திய உலகம் மீண்டும் அவரினின்று தோன்றுவது மலபரிபாகம் வரும்பொருட்டேயாம். அவர் அழித்தற் றொழில் செய்யுமிடத்து அயன் மாலையும் ஒழிப்பர் ; தாம் ஒருவரே எஞ்சி நிற்பர்.

"நாரண னென்னுந்தேவுநான் முகத்தவனுமுக்கட்
பூரணன்றானுமாகிப் புவிபடைத் தளித்துமாற்றி
யாரணமுடிவுந் தேறுவநாதியா யுயிர்கட்கெல்லாங்
காரணனாய மேலோன்கழலிணை கருத்துள் வைப்பாம்"

*

" செங்கண் மாறன்னை யென்னைத் திண்டிறன் மொய்ம்பினல்கி
யங்கண்மா ஞாலங்காப்பு மளிப்பது முதலியாமு
முங்கள் பாலிருத்து மென்றெம் முயிருணின் றியற்குநின்று
னெங்களான் முடியுஞ் செய்கை யாவதுமில்லை கண்டாய் "

✱

அன்னவேலை யிலவை யெலாமழித்த பின்னளிப்போ
ரென்னநின் றவர்தம்மையு மொடுக்குறு மிதற்பின்
முன்னருள்ள தோரேகமா யுறையுமெம் மூர்த்தி
பின்னுமிம்முறை புரிந்திடுமென்று மிப்பெற்றி

✱

" அந்தமாதியின் றுகியேயுயிரெலா மளிக்குந்
தந்தையாகிய தனக்கன்றி முழுதடுந்தகைமை
மைந்தராகியவ மரரான்முடி வுருமையினு
லெந்தைதன் வயிற்கொண்டனனீறு செய்யியற்கை "

✱

" ஊன்புகு மெவரையுந் தன்னெண்குணத் தொடுக்கித்தானே
வான்புகலாகி நின்றுமற்றவர் குணங்களூடு
தான்புகலில்லாதோனுந் தன்னியலினைய தென்றே
யான்புகலரிய தேவுமீசனு மவனேயென்னும் "

இக் கந்தபுராணத் திரு விருத்தங்கள் எம்பிரானின் முத் தொழிலைத் தெளிவு படுத்தியுள்ளன.

மூவர்க்கும் முதல்வன் உருத்திரன். அவன் அம்மை யோடு அப்பனுயும் (சத்தியும் சிவமுமாய்) விளங்குகின் றுன். அவனுக்கு மூன்று கண்கள் உண்டு. மூன்று கண்கள், கதிரவன், மதியப்புத்தேள், ஞானம்.

" மாவின்கனி தூங்கும்பொழில் மாதோட்ட நல்
நகரில் "

முன்னர் ஓரிடத்துத் " தெங்கம்பொழில் சூழ்ந்த திருக் கேதீச்சரத்தானே " என்றுர் நம் சுந்தரர். அதை அவர் இங்கு மறக்காது " மாவின்கனி தூங்கும் மாதோட்ட நல் நகர் " எனத் தொகுத்துள்ள திறம்போற்றத்தக்கது. தெங்கஞ்சோலை சூழவிளங்குவது திருக்கேதீச்சரம் என்

னும் பெருங்கோயில். மாவின்கனி தூங்கும் மாஞ்சோலை சூழவிளங்குவது மாதோட்டம் எனப்படும் நகரம். சோலையைப் "பொழில்" என்றும் "தோட்டம்" என்றும் சொல்லுவது இலக்கிய வழக்கும் உலகியல் வழக்குமாம். ஆதலின், மாவின்சோலை "மாதோட்டம்" என்றுயிற்று என்னும் உண்மை வலியுறுத்தப்பட்டுள்ளது. மாதோட்டம் சூழநிறைந்த அவ்வூரும் மாதோட்டம் என்றழைக்கப் படும் நகர் என்பதனை வலியுறுத்தி "மா தோட்ட நன்னகர்" என்றுர் வன்தொண்டப் பெருமகனுர். இவ்வுண்மைக்கு மாருக வேறு வரலாற்று முறையிற் கூறப்படுவது பொருந்தாது.

"மாவும் பூகமும் கதலியும் நெருங்கு மாதோட்ட நன்னகர்" என்று சம்பந்தப் பெருமான் அருளியதும் காண்க.

"பாவம்வினை யறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்
தேவன்எனை யாள்வான்திருக் கேதீச்சரத் தானே".

முன் செய் கொடு வினையும் மேற் செய் இரு வினையும் போக்குவார் சென்று நீராடிப் பயில்வது பாலாவி. அதன் தீர்த்தக் கரையில் உள்ளது திருக்கேதீச்சரம் என்னும் கோயில். அங்கிருந்து அருள் செய்யுந் தேவன் என்னை யாளாக உடையவன்; ஆள்வான் ஐயமில்லை. நாமெல்லாம் முற் பிறப்பிற் செய்த வினைகள் நல்வினை, தீவினை எனும் இரண்டினுள் அடங்கும். அவ்வினையின் விளைவே ஊழ்வழி நாம் நுகருகின்ருேம். நல்வினை பயப்பது இன்பம். இன்பம் புண்ணியம் செய்தார் அனுபவிப்பர். தீவினை பயப்பது துன்பம். துன்பத்தைப் பாவஞ் செய்தவரே நுகர்வர்.

நல்வினைப் பயனை நுகரும்போது இன்பம் உண்டாம். அந்த இன்பப் பெருக்கினுல் நாம் செருக்கும் கொள்ளுகின்ருேம். தீவினைப் பயனை நுகரும்பொழுது துன்பம் உண்டாம். அத் துன்பத்துக் காற்ருது நாம் என்ன பாவஞ் செய்தோமோ என்று ஏங்குகின்ருேம்; தவிக்கின்ருேம். அங்ஙனம் ஏங்கும்போது காணும் பிறருங்கூட, "ஐயோ

பாவம் பாவம்'' என இரங்குவர். அதையும் நாம் காண்கின்றோம்.

எனவே, முன் செய் கொடிய வினையினை நுகர்ந்து போக்கிக் கழித்தும், மேலும் இப்பிறப்பில் அப்படிப்பட்ட கொடுவினைகள் செய்யாது, நல் வினையே செய்தும் வருவோராகிய அன்பர், சென்று வினை கழிய நல்ல உள்ளத்தோடு இறைவனை வாழ்த்தும் ஒலி சிறக்கும் பாலாவி என்பது தெளிவாம்.

முன்னர், ''எமையாள்வான்'' என்று கூறினர் நம் சுந்தரர். இங்கு ''எனையாள்வான்'' என்றார். இது முன்னை நாட் சம்பவத்தைக் குறிப்பதாகும். எம்பிரான் சுந்தரரை வெண்ணெய் நல்லூரில் வைத்து ஆட்கொண்டார். ''அந்த ஒப்பற்ற தனி முதல்வனின் வடிவமே இந்தத் திருக்கேதீச்சரத்திலும் காண்கின்றேனே யன்றிப் பிறிதில்லை;'' என்று அழுத்தந் திருத்தமாகக் கூறுவதாகும் இவ்வடி.

## (10)

**கறையார்கடல் சூழ்ந்தகழி மாதோட்டநல் நகருள்
சிறையார்பொழில் வண்டியாழ்செயுங் கேதீச்சரத்
தானை
மறையார்புகழ் ஊரன்அடித் தொண்டன்உரை செய்த
குறையாத்தமிழ் பத்துஞ்சொலக் கூடாகொடு வினையே.**

[கறை - களங்கம், கறுப்பு; யாழ்செய்தல் - இசை எழுப்புதல்; சிறை - காப்பு, வேலி; மறையார்புகழ் ஊரன் - ஆரூரன்; அடித்தொண்டு - வழி வழி அடிமை; கொடுவினை - வெவ்வினை.]

களங்கம் நிறைந்து கறுத்து விளங்கும் கடல் நீர். அந்நீர் சூழ்ந்துள்ள கானல் உடையது கழி (உப்பங்கழி.) அக்கழி பொருந்தி அழகு செய்யும், மாதோட்டம் எனும் நல் நகரை. அந்நகருள் திருக்கேதீச்சரம் உண்டு. வேலி சூழ்ந்து அதைக் காப்புற யாத்த சோலையில் வண்டுகள் இசை எழுப்பும்; ஒலித்துப் பாடிக்கொண்டிருக்கும். அத்திருக்கேதீச்சரத்திற் கோயில் கொண்டருளுகின்றான் எம்பெருமான். அவனை மறையவர் புகழும் ஊரனும் ஆரூரனும், எம்பெருமான் திருப்பணியாற்றுந் தொழும்பனுமாகிய அடியேன், விரித்துச் சொல்லிய நிறை தமிழ்ப் பாட்டுக்கள் ஒரு பத்தாம். இவற்றை உள்ளவிழைவோடு சொல்ல வேண்டும்; சொல்லின் கொடிய வல்வினை விளைவானது வந்து சாராது.

**" கறையார்கடல் சூழ்ந்தகழி மாதோட்டநல் நகருள் "**

கடல் நீர் களங்கமுடையதாய்த் திகழ்கின்றது. காரணம் என்ன? உப்பின் சார மிகுதி; உயிர்கள் பலவாய் உலாவுதல்; மரக்கலம் பலவாக நீரைப் போழ்தல், கிழித்துச் செல்தல், வருதல்; இவ்வாறாய நிகழ்ச்சிகள் எப்போதும் நிகழ்தல்; அன்றியும், நீரின் ஆழத்துக்கேற்ப நீரின் நிறம் வேறுபடுவதால் கறுத்து விளங்குவதுமாம். கடல் நீர் பருவந்தோறும் பெருகுவது, வற்றுவது. அந்நிகழ்ச்சியாற் கழிநீர் செல்லும் உப்பங்கழியும் கடலொடு கலந்து

கொள்ளும் இயல்புடையது. எனவே, உப்பங்கழிக் கானல் அடுத்து விளங்குவது மாதோட்டம் என்னும் நகர் ஆகும்.

"சிறையார்பொழில் வண்டியாழ்செயும்
கேதீச்சரத்தானை"

மாதோட்ட நகரின் இடையே வேலி செய்து மிகு காப்புடன் விளங்கும் சோலை யுள்ளது. அச் சோலையில் மண மிக்க மலர்கள் பலவகை யுள்ளன. மண மறிந்து தேன் உண்பவை வண்டுகள். அவை அதன் பொருட்டு மலர் தொறும் சென்று சென்று மூசும். அந்த ஒலி யாழின் இசை போல் இனிமை பயப்பது. எனவே, வண்டிசை முரலும் சோலையின் நடுவே கேது தன்னை வழிபடக் கண்டிரங்கி அருள் புரிந்த எம்பெருமான் காட்சியினுற் காட்சி நல்கிய இடம் திருக்கேதீச்சரம் என்னும் திருக்கோயிலாகும். அன்று போல் என்றும் தன் அடியவர் பல திறத்தினருக்கும் திருக் கேதீச்சரத்தை உறைவிடமாகக் கொண்டு அருள்புரிவோன் எம்பெருமான் அல்லவா?

"மறையார்புகழ் ஊரன்அடித் தொண்டன்"

"வேதமொ டாகமம் மெய்யாம் இறைவன்நூல்
ஓதும் பொதுவும் சிறப்பும் என்றுன்னுக
நாதன் அருளவை நாடில் இரண்டந்தம்
பேதம தென்பர் பெரியோர்க் கபேதமே"

என்று திருவாய் மலர்ந்துள்ளார் தெய்வத் திருமூலர். மறையோர் அந்தத் திருமந்திரத்தின் வழி மறைநாலும் பயில்வர்; பின்னர் ஆகமம் (சிவாகமம்) ஓதியுணர்வர்; மந்திரமும் தந்திரமும் வல்லவராய்ச் சிவவழிபாடாற்றும் தொழும் புடையராவர். அம்மறையோரும் கண்டும் கேட்டும் புகழும் திரு ஆருரன்; "அடியார்க்கும் அடியேன்" எனத் திருத் தொண்டத் தொகையோதிய தொழும்பன்.

"உரைசெய்த குறையாத் தமிழ்"

நம்பியாரூரர் சொல்லிய நிறைதமிழ் என்பதாம். தமிழ் ஓசையும், தமிழ் ஒழுக்கும், தமிழ் இசை ஒழுக்கும் என்றும்

குறையா நிறைவுடையன. திருஞானசம்பந்தப் பெருமானும் " திருநெறிய தமிழ் " என்றார். அன்றியும், தமிழாகாரம் (தமிழ் வடிவம்) தம்பிரான் வடிவமன்றோ? நோக்குவோமாயின், இன்பமாய்த் திகழ்வதும் நம் தமிழ் அன்றோ என்ற குறிப்பும் கொண்டதாகும் இவ்வடி ; ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டதுமாம்.

" பத்தும் சொலக் கூடாகொடு வினையே "

சொல்லிய பாட்டு, தமிழாற் சொல்லிய பாட்டுப் பத்தையும் உள்ளன்போடு சொல்லித் துதியுங்கள் ; துதிக்கக் (புகழ) கொடிய வல்வினையும் அணுகாது.

# திருஞானசம்பந்தர்

" அம்மையே அப்பா " என்று அரற்றியது குழந்தை. உள்ளமிரங்கி உண்பால் உதவ இறைவன் திருவுள்ளங் கொண்டான். அவ்வழி எம்பிராட்டியாம் உமையம்மை பொற்கிண்ணத்தில் திருஞானம் குழைத்த பாலை உண்ண உதவினுள். பாலமுதுண்ட அப்பொழுதே ஞானசம்பந்தம் (ஞான உடைமை) பெற்றது பிள்ளை.

யார் இந்தப் பிள்ளை ?

சோழநாட்டில் சீர்காழி வளஞ்சிறந்த திருநகரம். ஆங்கு சிவபாத இருதயர் என்னும் அந்தணர் ஒருவர் இருந்தார். அவர் வாழ்க்கைத் துணைவியார் நற்குணம் நிரம்பிய பகவதியார். புத்திரப்பேறில்லாமையால் இருவரும் எம்பிரானை நோக்கித் தவஞ் செய்தனர்; சைவமோங்கவும், பௌத்தம், சமணம் என்ற புறப்புறச் சமயங்களை ஒழிக்கவும் வல்ல குழந்தையைத் தருதல் வேண்டும் என்றும் வேண்டினர். எம்பிரான் அருள் சுரந்தான். பகவதியார் கருப்பமுற்ருர்; எப்பொருளிலும் சிவம் பெருக்கும் பிள்ளையாரும் பிறந்தருளினர்.

பிள்ளையார் பிறையென வளர்ந்தார்; செங்கீரை யாடினர்; சப்பாணி கொட்டினர்; மழலைமொழி பயின்ருர். சிறுதேருருட்டினர்; சிற்றிலழித்தார்; மூன்ருண்டுமெய்தினர்.

சிவபாதவிருதயர் ஒருநாள் வழக்கம்போல நீராடப் புறப்பட்டார். பிள்ளையார் அவரைத் தொடர்ந்தார். சிவபாத விருதயர் வெகுண்டார்போலப் பிள்ளையாரை விலக்கினர். பிள்ளையார் திரும்பினரில்லை; பிடிவாதமாய் அழுதார். என் செய்வார் தந்தையார்? பிள்ளையாரை அழைத்துக்கொண்டு தோணியப்பர் திருக்கோயிற் பொய்கைக்குச் சென்ருர். பொய்கைக் கரையில் பிள்ளையாரை இருத்தி வைத்து விட்டுக் குளத்திலிறங்கினர் சிவபாதவிருதயர். நீராடித் தருப்பணம் புரிந்து ஆகமருடண விதிப்பிரகாரம் மந்திரத்தை உச்சரித்து முழுகினர். தந்தையாரைக் காணுத

பிள்ளையார் பல திக்குகளையும் நோக்கி அழுதார். ஈற்றில் திருத்தோணியப்பர் சிகரம் பார்த்து விம்மினர்; "அம்மையே அப்பா!" என்று அரற்றினர். அம்மையுடன் விடையின்மேல் எழுந்தருளினன் எம்பிரான்; ஆரம்பத்திற் கூறியபடி ஆட்கொண்டருளினன்.

"சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங் கியஞானம்
உவகையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்"

இறைவனல் ஆட்கொள்ளப்பட்டமையால் ஆளுடைய பிள்ளையுமாயினர் சிவஞான சம்பந்தர்.

*

பாண்டிநாடு சமண்களையால் மலிந்தது; சைவப் பயிர் மிக நலிந்தது; அரசியாரிடமும் அமைச்சர் குலச்சிறையாரிடமுமே சைவநெறி மறைவாகத் தங்கி இருந்தது. கவுணியர் குலமணியின் சைவத் திருப்பணியை இருவருங் கேள்வியுற்றனர்; தம் ஏவலரில் அறிவிற் சிறந்தவரைத் திருஞானசம்பந்தரிடம் தூதுவிட்டனர். அவர்களும் சீர்காழிச் செல்வரைத் திருமறைக் காட்டிற் சந்தித்து உற்றதுரைத்தனர். ஆளுடைய பிள்ளையாரும் பாண்டி நாடடைந்தார்; ஆங்கு அமணரை வாதில் வென்றார்; சிவமணம் கமழச் செய்தார்; பாண்டியனது உள்ளக்கோட்டமும் தீர்த்து ஒழித்தார். பின்னர் பல சிவாலயங்களையும் நம் திருஞானச் செல்வர் பரவிப் புகழ்ந்து பாடினர்; கடைசியாய்த் திரு இராமேச்சரம் வந்து சேர்ந்தார். அவருடன் தொண்டர்களும் உடன் உறைகின்றனர். கூன்பாண்டியனும் தன் பட்டத்துமாதேவி மானியாருடன், அமைச்சு குலச்சிறையும் போற்றிவர, ஆளுடைய பிள்ளையாரொடு திருவிராமேச்சரத்து இறைவனை ஒருங்கே வழிபாடு புரிகின்றனர். சிலநாளில் பாண்டி மன்னனும், பட்டத்தரசியும், பேரமைச்சரும் திருஞானசம்பந்தரிடம் விடைபெற்றுச் சென்றனர். காழியர்கோன், கவுணியர் தலைமகனும் ஆளுடைய பிள்ளையாரோ திருவி

ராமேச்சரத்து எம்பெருமானைப் பிரியமாட்டாதவராய் அங்கேயே தங்கி வழிபாடாற்றி வருவாரானர்.

அக்காலையில், ஒருநாள் ஈழநாட்டில் எம்பிரான் கோயில் கொண்டுள்ள காட்சியை உணர்ந்தார் நம் திருஞான சம்பந்தப் பெருந்தகை. திரு இராமேச்சரத்தில் இருந்தபடியே தான் கண்ட திருக்கோணமலை, திருக்கேதீச்சரக் காட்சிகளை அழுதொழுகு சொல்லாற்றெடுத்தார்; உடன் அமர்ந்துறையும் தொண்டர் பலரும் அறிந்து உணர விளக்கினர். அடிகள் இங்கு வந்தார் என்பதற்குக் குறிப்பு யாதுமில்லை; இதுகாறும் எடுத்து விளக்குவாருமில்லை; தெய்வச் சேக்கிழார் அடிகளும் கூறினர்களில்லை. ஆதலால் சுவாமிகள் ஈழம் வந்ததில்லை என்பதே மிகப் பொருத்தம். அது கடல்கடக்க மாட்டாமையாலோ, அன்றி வேறு காரணத்தாலோ என்பதும் யாமறியோம்.

“ அந்நகரி லமர்ந்தங்க ணினிது மேவி
யாழிபுடை சூழ்ந்தொலிக்கும் ஈழம் தன்னில்
மன்னுதிருக் கோணமலை மகிழ்ந்த செங்கண்
மழவிடையார் தமைப்போற்றி வணங்கிப் பாடிச்
சென்னிமதி புனைமாட மாதோட்டத்தில்
திருக்கேதீச் சரத்தண்ணல் செய்ய பாதம்
உன்னிமிகப் பணிந்தேத்தி அன்ப ரோடும்
உலவாத கிழிபெற்றுர் உவகையுற்றுர்.”

கழுமலச் சிறுவர் கண்ட காட்சியைப் புழுமலக்கூட்டில் பொதிந்த உயிரும் செவிவாய்க் கேட்டல் வேண்டும்; சிந்தனை செய்து மனக்கண் வழியே புறக்கண்ணும் கண்டு களித்துப் பேருவகை பெறுதல் கடமை. முதலாவதாகத் திருக்கேதீச்சரக் காட்சியை யாமும் கண்டு களிப்பாம்.

திருஞானசம்பந்தமூர்த்திகள் அருளிச்செய்த

# தேவாரத் திருப்பதிகம்

# ‘ திருக்கேதீச்சரம் ’

### பண்—நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

(1)

விருது குன்றமா மேருவில்
    நாணர வாஅனல் எரியம்பால்
பொருது மூஎயில் செற்றவன்
    பற்றிநின் றுறைபதி யெந்நாளும்
கருது கின்றவூர் கனைகடற்
    கடிகமழ் பொழிலணி மாதோட்டம்
கருத நின்றகே தீச்சரம்
    கைதொழக் கடுவினை அடையாவே.

[விருது - வெற்றி, வெற்றிச்சின்னம் ; மாமேரு - பொன்மலை; நாண் - கயிறு ; எயில் - கோட்டை, மதில் ; செறல் - அழித்தல் ; கனைகடல் - ஒலிக்கும் கடல் ; கடி - மணம் ; பொழில் - சோலை ; கடுவினை - கொடியவினை ; அடையா - பொருந்தா.]

அவன் திரியும் புரம் என்னும் வெற்றிச் சின்னத்தைக் கெடச் செய்தவன். அதன்பொருட்டு அவன் எடுத்த வில் பொன்மலை. அவ்வில்லில் நாணகப் பூட்டியது ஒரு பாம்பு. கொழுந்துவிட்டு எரியும் தீயே பகழி. இவற்றைக் கைக் கொண்டு போர் விளைத்தான். செம்பொன், வெண்பொன், கரும்பொன் இவற்றாலாகிய கோட்டைகளைக் காப்பாக வுடைய திரியும் புரம் என்றழைக்கப்படும் மூன்று ஊர்களை யும் அவன் அழித்து ஒழித்தான் ; ஒருங்கே ஒரே காலத்தில் அழித்து ஒழித்தான். அவன் பற்றுக்கொண்டு உறையும் பதி திருக்கேதீச்சரம். அது ஒலிக்கும் கடல்சூழ விளங்கும் (ஈழநாட்டின்கண்) மாதோட்டம் என்னும் நல்ல நகரில் உள்ளது. மணம் கமழ்ந்து எங்கும் பரப்பும் சோலை அம்

மாதோட்டத்தை அணிசெய்யும். யாவரும் கருதும்படியாக (அத்திரிபுரம் அழித்தவன்) நின்று காட்சி அளிக்கும் கேதீச்சரம் என்னும் கோயிலுள் உள்ளானைக் கையால் தொழுங்கள். தொழவே கொடிய வினையேயாயினும் தொழு வார் தம்மை வந்து அணுகி அடையா.

" விருது குன்றமா மேருவில்
நாணரா வாஅனல் எரியம்பால்
பொருது மூஎயில் செற்றவன் "

தாரகாசுரன் மக்கள் வித்துன்மாலி, தாரகாக்கன், கம லாக்கன் ஆகிய மூவருமாவர். இவர்கள் மூவரும் இறைவன் திருவடி மறவாச் சிந்தையர். சிவவழி பாடாற்றிப்பொன், வெள்ளி இரும்பு இவற்றுலாகிய கோட்டைகளையுடைய மூன்று ஊர்களைப் பெற்றவர்கள். இம்மூன்று ஊர்களும் விண்மிசை எக்காலமும் இயங்கித் திரியும் ஆற்றல் பெற்றவை. இவர்கள் செருக்குற்று அக்கோட்டைகளோடு அந்தரத்தெழுந்து தமக்கு இட்டமாகிய இடங்களுக்குச் சென்று ஆங்காங்குள்ள பட்டணங்கள் மீதும், ஊர்கள் மீதும் உட்கார்ந்து அவைகளை நாசஞ்செய்து வந்தார்கள்; தேவர்களை வருத்தினுர்கள். தேவர்கள் முதலியோர் சிவபிரானிடம் முறையிட்டனர். இவ்வசுரர்களிடமுள்ள சிவப்பற்று மாறில் இவர்களுக்குச் செல்வமும் செருக்கும் அகலும் என்று கூறினுர் எம்பிரான். சிவபிரான் சொல்லி யதைத் தேவர்கள் திருமாலுக்குப் பகர்ந்தனர். திருமால் புத்தராய் அவதரித்தார்; நாரதரைச் சீடராகக் கொண்டார். திரிபுராதிகள் மறந்தும் சிவனடி மறவாச் சிந்தையராகை யால் அவர்களது குடிகளுக்குப் பாசண்ட மதத்தைப் போதித்தார். குடிகள் சிவவழிபாட்டினை ஒழித்துப் பிற சமயம் புகுந்தனர். " குடிசெய்குற்றம் கோனைச் சாரும் " என்றபடி முப்புரத் தலைவர் மூவரையும் அது பீடித்தது. புத்தர் சிவ விரோதிகள். எனவே எம்பிரான் அவர்களை அழிக்க முற்பட்டார். மேருமலையை வில்லாகவும், ஒப்பற்ற பெரிய உருவத்தையும் தழல்வீசும் கண்களையும் பெற்ற

வாசுகி என்னும் மாநாகத்தை நாணாகவும், நெருப்பை அம்பாகவும் கொண்டு ஓரம்பை எய்தார். புரமூன்றும் எரிந்தது. மூரணர் மரணமுற்றனர். எம்பிரான் அடியவராகிய வித்துன்மாலி, தாரகாக்கன், கமலாக்கன் ஆகிய மூவரும் ஒழிய மற்றுள்ளோர் அனைவரும் அழிந்தனர். மூவரில் முன்னோனைத் தன் கூத்துக்கேற்பக் குடமுழா முழக்கவும், பின்னோர் இருவரையும் தன் கோயில் வாயிற் காவலராகவுங் கொண்டனர் என்று கூறுகின்றது புராணம்.

" வளைந்தது வில்லு விளைந்தது பூசல்
உளைந்தன முப்புரம் உந்தீபற
ஒருங்குடன் வெந்தவா றுந்தீபற."

[மேருவாகிய வில்லானது வளைந்தது; சண்டை ஏற்பட்டது; மூன்று நகர்களும் நொந்தன. திடீரென அவை முழுவதும் வெந்தன. அவ்வழிதானென்னே என்று உந்தீ பறத்தலைச் செய்க :]

" உய்யவல் லாரொரு மூவரைக் காவல்கொண்
டெய்யவல் லானுக்கே உந்தீபற
இளமுலை பங்கனென் றுந்தீபற "

[திரிபுரத்தசுரர்களில் சிவபத்தியிற் குன்றாமையால் உய்தி கூடத் தகுதியுடையார் மூவராவர். அம்மூவரையும் ஊனம் வராமற் காத்துப் பிறரை அம்பால் எய்தொழித்த வல்லமையுடையான் பொருட்டு, உந்தி விளையாடுக. அவன், இளமைமாறுத நகிலினை உடைய அருளன்னை பாகனென்று கூறி உந்தி விளையாடுக.]

சைவத் திருமுறைகளுள், பத்தாவது திருமுறையாகிய திருமந்திரம்,

" அப்பணி செஞ்சடை ஆதிபு ராதனன்
முப்புரஞ் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புர மாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யாரறிவாரே."

என்று சாற்றுகின்றது.

[மும்மல காரியம் என்பது மும்மலத்தினாலாகிய தூல, சூக்கும, காரண மென்கின்ற மூவுடம்புகள்.]

" மூவகை யெனுந்தளை மூழ்கி யுற்றிடு
மாவிக ளுலப்பில வநாதி யுள்ளன
தீவினை நல்வினைத் திறத்தின் வன்மையா
லோவற முறைமுறை யுதித்து மாயுமே "

[ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும்மலங்களினாலே பந்திக்கப்பட்டுள்ள உயிர்கள் எண்ணிலாதன; அவை அநாதியே உள்ளன; அவை தாம் தாம் செய்த தீவினைகளினாலே இடையறாது பிறந்திறந்துழலும்.]

" தரும மென்றொரு பொருளுள து தாவிலா
விருமை யினின்ப மூமெளிதி னாக்குமா
லருமை யில்வரும் பொருளாகு மன்னது
மொருமை யினோர்க்க லாலுணர்தற் கொண்ணுமோ "

" தருமமே போற்றிடினன்பு சார்ந்திடு
மருளெனுங் குழவியு மணையு மாங்கவை
வருவழித்தவ மெனுமாட்சி யெய்துமேற்
றெருளுறு மவ்வுயிர் சிவனைச் சேருமால் "

" சேர்ந்துழிப் பிறவியுந் தீருந்தொன்மையாய்ச்
சார்ந்திடு மூவகைத்தளையு நீங்கிடும்
பேர்ந்திடலரியதோர் பேரின்பந்தனை
யார்ந்திடுமதன் பரிசறைதற்கே யுமோ "

[ஆன்மாக்கள் பொருட்டுத் தருமமென்னுமோர் பொருளுண்டு. அது இருமை இன்பத்தையும் எளிதிலே கொடுப்பது. அது அருமையின் எய்தும் பொருள். அது ஒருமையுடையோர்க் கன்றிப் பிறர்க்கு அறிவது அரிது. இத்துணைச் சிறப்பினதாகிய தருமத்தை ஓருயிர் செய்யுமாயின் அன்பும் அருளும் உண்டாகும்; அது உண்டாகத் தவமுண்டாகும்; அது உண்டாக அவ்வுயிர் சிவபெருமானை அடையும். அடையின், பிறவிக்குக் காரணமாகிய மும்மலங்களினின்று நீங்கிப் பேரின்பத்தை அனுபவிக்கும். இது கந்தபுராணம் கூறுவது. வைதிக சைவ உண்மை.]

"பற்றிநின் றுறைபதி யெந்நாளும்
கருது கின்றவூர் கனைகடற்
கடிகமழ் பொழிலணி மாதோட்டம்
கருதி நின்றகே தீச்சரங்
கைதொழக் கடுவினை யடையாவே."

திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் உயிர்கள் பாலிரங்கி ஆங்காங்கே கோயில் கொண்டுள்ளான்; அருள்புரியுமாறு விரும்பி உறைகின்றான். அவ்வாறு விரும்பி உறையும் ஊர் ஒலி கடல் சூழ்ந்து கடிமணம் கமழும் சோலையின் நடுவே விளங்கும் மாதோட்டம் என்னும் நகராகும். அந்நகரில் அணிபெற இலங்கும் கேதீச்சரம் என்னும் கோயிலே உறைவிடம். ஆதலால், எம்பெருமான் உறையுந் திருக்கேதீச்சரத்தை உள்ளத்தால் நினைந்து, வாயாற் பாடி, கைகளால் தொழுமின் தொண்டர்காள். தொழவே, வலிய கொடிய வினையாயவை வந்து அணுகி அடையாவாம். "கைதொழ" என்றதால் உள்ளமும், வாக்கும் ஒன்று வழி ஒன்று நிகழ்தல் காணப்படும். அன்றி, கையொன்றே தொழுதல் சாலும் என்பார்க்கு அதுவும் நெடுநாள் நினைந்து பாடித் தொழுதார்க்கே யன்றிச் சாலாவாம். இவ்வுண்மை, "நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நாநமச்சிவாயவே" என்ற தேவாரத் தமிழ் வாக்கால் நன்கு அறியலாம்.

## (2)

பாடல் வீணையர் பலபல
சரிதையர் எருதுகைத் தருநட்டம்
ஆடல் பேணுவர் அமரர்கள்
வேண்டநஞ் சுண்டிருள் கண்டத்தர்
ஈடமாவது இருங்கடற்
கரையினில் எழில்திகழ் மாதோட்டம்
கேடிலாதகே தீச்சரந்
தொழுதெழக் கெடுமிடர் வினைதானே.

[சரிதை - வரலாறு; நட்டம் - கூத்து; பேணல் - விரும்புதல் ; இருள் - இருண்டு கறுத்தல்; ஈடம் - பெருமை; எழில் - அழகு; கேடு - கெடுதல்; இடர் - இடர்ப்பாடு, துன்பம்.]

பாட்டின் இன்னிசை எழுப்பும் வீணை என்னும் கருவி உடையவர். பலவாகப் புகழப் பெறும் வரலாற்றுக்குத் தானே காரணமானவர். எருதும் ஏறிச் செல்வார். சிறப்பு மிக்க பெருங் கூத்தும் விரும்பி ஆடுவார். ஒரு காலத்து, தேவர்கள் பலரும் சூழ்ந்து அஞ்சியவர்களாய் ஒடுங்கி நின்று இரந்து கேட்டுக் கொள்ள அவர்பாலிரங்கி அருளும் முகத்தால் சாவினைத்தரும் நஞ்சினைத்தானே உண்ணும் பதமாக்கி யுண்டவர். ஆதலால் மேலும் மேலும் இருண்டு விளங்கும் கழுத்து அழகு வாய்ந்தவர். பெருங்கடற் கரையினை அடுத்து விளங்குவது எழில் வாய்ந்த மாதோட்டம். அந்நகரில் நன்மையே பயக்கும் கேதீச்சரம் என்னும் கோயிலைத் தனது உறைவிடமாகக் கொண்டிலங்குகின்றார். அத்தகு சிறப்பு வாய்ந்த அவர் உறைகோயிலை நினைந்து தொழுது கொண்டே எழுபவர்தம் இடரும் முன் செய் பழங் கொடிய வினையும் தாமே கெட்டொழிந்து போம். இது அவர்தம் பெருமை.

"பாடல் வீணையர்"

பாட்டின் இசை எழுப்புங் கருவியுடையவர். பண்டை இலக்கியச் சான்று கொண்டு நன்கு ஆராய்ந்து "யாழ்

நூல்" ஒன்று தந்துதவியவர் விபுலானந்த அடிகளார் ஆவர். அவர் கூறும் கூற்றை நோக்கின் வீணை என்பது யாழினின்றும் வேறு பட்டது என்பது புலனும். யாழ் வகை யாவும் நரப்புக் கருவி என்பர். அன்றியும் வீணை என்னும் சொல்லே தமிழகத்தின் வேற்றுப் புலச்சொல் என்பர் அறிஞர் பலரும். காரணம் சங்ககால இலக்கியங் களில் அவ் "வீணை" என்னுஞ் சொல் பயின்று வராமையாகும். ஆயினும் வழக்கு நோக்கின் வடவரும் "வீணைகானம்" என்று கூறவே யாம் கேட்கின்றோமே யன்றி "பீணைகானம்" எனக் கூறுவார் எவரையும் காண்டலும் கேட்டலும் அரிதாகவே இருக்கின்றது. எனவே, வீணை என்னும் இசைக் கருவியும் தமிழகத்துப் பண்டுள்ளது எனத் தேவாரம் முதலிய சமய நூல் வாயி லாய் அறியக் கிடக்கின்றது காண்க. அஃதன்றியும், தமிழ்க் கடவுள் இசைப்பது வடபுலத்துக் கருவியும் ஆகுமோ என்பது ஓர் ஐயமன்றோ? அறிஞர் தெளிதல் பொருந்தும்.

"பலபல சரிதையர்"

சிவபிரான் விருது இலங்கும் சரிதைத் தொழிலர். அவர் சரிதைகள் பலப்பல; தமிழகத்து வரலாற்றுப் பெரு நூல்கள் எனப்படுவன யாவும் எல்லாம் வல்ல இறைவன் பெயரால் வழங்குவன வாதல் தெளிவாக்கும்.

"எருதுகைத் தருநட்டம் ஆடல் பேணுவர்"

எம்பிரான் காலத்தைக் கடந்தவன், காலத்தைச் செய்பவன். ஆதலால், அச்செயல் நிகழ்தற்கேதுவாம் பெருங் கூத்து மாடுவன்.

சிவபிரானுக்கு ஆடலில் விருப்பம். அவர் மண்ணும் விண்ணும் புடைபட ஆடுவர். சொக்கம், பண்டரங்கம், புயங்கராகம் என்னும் ஆடல்களை ஆடுவர். அவருடைய ஆடலெல்லாம் அருட் காரணம் பற்றியவை. நீறுபூசி, ஆறுசூடி, பிறைசூடி ஆடுவர்; விடையேறி ஆடுவர்; வண்டு

பாட ஆடுவர்; வன்னிமத்தம் கொன்றைசூடி ஆடுவர்; கரியை உரித்தும், காளியை வென்றும், திரிபுரங்களை எரித்தும், நஞ்சை உண்டும் ஆடுவர். இவ்வாறு இன்னும் பலப்பல.

"ஆட்டு வித்தால் யார் ஒருவர் ஆடாதாரே" என்ற பொன்மொழி நோக்கின் உண்மை புலனுதல் எளிது. அன்றியும்,

"வினையெனப் படுவது வேற்றுமை கொளாது
நினையும் காலைக் காலமொடு தோன்றும்"

[வினையென்று சொல்லப்படுவது வேற்றுமையொடு பொருந்தாது ஆராயுங்காற் காலத்தொடு புலப்படும்.] என்னும் ஒல்காப்புகழ் பெறு தொல்காப்பியனுர் கூற்றும் ஒப்பு நோக்குதல் கடமையுமாகும்.

"அமரர்கள்
வேண்ட நஞ் சுண்டிருள் கண்டத்தர்"

எம்பிரான் கொல்லும் நஞ்சின் கொடுமையைப் போக்கும் திறன் அறிந்த பெருமருத்துவன்; ஆனதால், அதை உண்டு சாவாது ஒளி விடுகருமை நிறம் மிளிருங் கண்டத்தராயினுர். மருத்துவ நூல் வல்லார் அறிவர் நஞ்சின் கொடுமை போக்கும் வகை. நாம் அறியோம். அரவின் நஞ்சை எடுத்து அதைத் தானே கலப்புப் பொருள்களினின்றும் வேறு பிரித்து உண்ணும் பதமாக்கினுன் ஒரு சருமானிய மருத்துவன். அதற்கு "நஞ்சுகொல்லி" (Anti-Venom) எனப் பெயரிட்டுப் பாம்புக்கடி யுண்டார்க்குக் கொடுத்துக் குணம் கைகண்டான். இப்போது மருத்துவத் துறை வணிகப் பொருள்களில் அதுவும் ஒன்ருக விற்கப்படுகின்றது. ஆகவே நஞ்சே அமுதமாயிற்று என்பதற்கு யாதோ ஐயம்? ஆயினும், எப்பொருளாயினும் உண்பின் குரல் வளையில் நிற்குமேயானுல் உண்டவன் விக்குள் வந்து உயிர் ஒடுங்குவது உண்மை. இறைவனே என்ருல், அறிவுடைய மருத்துவனினும் வேறு எனப் புல

னுக்கவே, " நஞ்சுண்டிருள் கண்டத்தர் " என்றும், உயிர்கள் பால் இரங்கி அருள் புரியும் பெருமான் மக்களினும் வேறுபட்டான் என்பதோடு நில்லாது மேம்பாடு உடையவன் ஆதல் வேண்டும் எனத் தெரிக்குமாறு " அமரர்கள் வேண்ட " எனக்கூறிய திறன் எவருள்ளத்தையும் கவர்வதாகும்.

" ஈடமாவது இருங்கடற்
கரையினில் எழில்திகழ் மாதோட்டம்
கேடிலாதகே தீச்சரந்
தொழுதெழக் கெடுமிடர் வினைதானே."

நஞ்சினை அருந்திக் குரல் வளையில் என்றும் உறைந்து திகழும்படி நிறுத்தி அடக்கிய பெரு மருத்துவனது உறைவிடமாகிய பெருங் கடற்கரை யடுத்து அழகு செய் மாதோட்டம் என்னும் நகரில் நஞ்சுடைப் பாம்பு என்று பெரியோர் கூறும் கேது என்னும் கோளும் வழிபடும் கேதீச்சரத்தை நினைந்து தொழுது எழுந்தாலே துன்பந் தொடராது; வல்வினையும் வந்தடையாது தம்மிலே கெட்டழியும். இதுவன்றோ பெருமை.

(3)

பெண்ணொர் பாகத்தர் பிறைதவழ்
சடையினர் அறைகழல் சிலம்பார்க்கச்
சுண்ணம் ஆதரித் தாடுவர்
பாடுவர் அகந்தொறும் இடுபிச்சைக்
குண்ணல் ஆவதோர் இச்சையின்
உழல்பவர் உயர்தரு மாதோட்டத்
தண்ணல் நண்ணுகே தீச்சரம்
அடைபவர்க் கருவினை யடையாவே.

[அறைகழல் - ஒலி செய்யும் வீரக்கழல் என்னும் ஆடவர் காலணி; சிலம்பு - பெண்டிர் காலணி; சுண்ணம் - வெண்நீறு; அகம் - இல்லம்; பிச்சை - உணவு; உழலுதல் - சென்றுமீளுதல்; அருவினை - கொடியவினை; அடையா - சாரா.]

அவர் மாதொரு கூறராய் விளங்குவார். பிள்ளைமதி தவழ்ந்துலாவும் சடையினை உடையவர். வலக்காலில் ஆடவர் அணியும் வீரக்கழல் ஒலிக்கும்படி பூட்டியுள்ளார்; என்றாலும், பெண்உரு ஒரு பாதியில் உடைமையாலே இடக் காலில் பெண்டிர் அணியும் சிலம்பும் ஒலிக்க அணிந் துள்ளார். மேனியில் வெண்ணீறு பூசிக்கொண்டு ஆடுவார், உடன்பாடுவார். அம்மட்டுமா? இல்லந்தோறும் சென்று இடுவார் பிச்சைக்கு விரும்பி உண்ணும் அவாவினலே செல்வதும் வருவதுமாயிருப்பார். அவர்தான், ஓங்கிய மரங்கள் செறிந்த மாதோட்டம் என்னும் நகரில் தன் பெருமை விளங்க உள்ளம் விழைந்து கேதீச்சரம் என்னும் கோயிலைத் தனக்கு உறைவிடமாக் கொண்டுள்ளார். ஆதலால் அவர் உறைவிடமாம் கேதீச்சரம் சென்றடை பவர்க்கு நேரவிருக்கும் பழவினைகள் சென்று அடை யாவாம்.

"பெண்ணொர் பாகத்தர்"

பெண்ணைத் தன் உடலின் ஒரு பாதியில் கொண்டவர். அவ்வடிவம் நோக்கின், வாழ்க்கைத்துணை நலம் இன்றி இல்லறம் சிறவாது என்ற குறிப்பும் தென்படும்.

ஆண்மையினின்றே பெண்மை தோன்றுவது இயல்பு. "அவன், அவள், அது எனும் அவை" என்றே சிவஞான போதத்து முதற்சூத்திரம் கூறிச் செல்கின்றது.

"ஆற்றலொடு புணர்ந்த ஆண்பாற் கெல்லாம்
ஏற்றைக் கிளவி உரித்தென மொழிப"

என்றே தொல்காப்பியரும் கூறுமுகத்தான் அந்த ஆற்றல் விளைவிடமே ஆண்மை என்பதும், விளையும் அவ்வாற்றல் சென்று அடங்கியொடுங்கும் இடமே பெண்மை என்பதும் புலனுதல் தெளிவாம். எனவே, ஆற்றலும், அதன் மறுதலையும் ஆண்மை பெண்மையாய்த் திகழ்தல் இயற்கையின் பாற்படும் என்பதாயிற்று.

அன்றியும், இலக்கண வழக்குப்படி ஓர் உடன் பாட்டிற்கு ஒன்றே எதிர்மறை ஆவதுபோல ஓர் ஆண்மை யினின்றே ஒரு பெண்மைத் தோற்றம் உள்ளது என்ற உண்மையும் வெள்ளிடைமலை.

"பிறைதவழ்
சடையினர் அறைகழல் சிலம்பார்க்கச்
சுண்ணம் ஆதரித் தாடுவர்"

இளமதி தவழ்ந்து விளையாடும் சடைமுடி உடையவர். தன் ஆண் பெண் ஆனவடிவத்துக்கேற்ப ஆடவர் அணியும் வீரக்கழல் வலக்காலிலும், இடக்காலிற் சிலம்பும் ஒலி செய்து காட்டும். தன் செம்மேனியில் வெண்ணீறு சண்ணித்துப் பெருங்கூத்து நிகழ்த்தி ஆடுவதோடன்றிப் பாடவுஞ் செய்வார்.

"அகந்தொறும் இடுபிச்சைக்கு
உண்ணல் ஆவதோர் இச்சையின்
உழல்பவர்"

உண் அவா வேட்கையாலே இல்லந்தொறும் சென்று ஊண் இடுவார் உள்ளத்தில் படுமாறு யாதென ஓர்ந்து பின் உணவு கொள்பவர். அஃதன்றி எவரிடத்தும் உணவு வேண்டுமென்று இரக்கமாட்டார். என் எனின், திருவள்

ளுவப் பெருந்தகை கூறியபடி தமிழனுக்கு இரவு (இரத்தல் தொழில்) அச்சம் அல்லவா? எனவே, தமிழாய்ந்து உதவிய தமிழ்க் கடவுளும் இரவுக்கு அஞ்சினர் போலும். "உழல் பவர்" என்றமையால், உண்ண விழைந்து ஓர் இல்லிற்சார் வதும், இல்லத்தவர் உளங்காணும் வரை மீள்வதும் செல் வதுமாய், அங்கும் இங்குமாய் உழலுபவர் என்ருயிற்று.

முத்தொள்ளாயிர ஆசிரியரும்,

"பெருஞ் செல்வர் இல்லத்து நல்கூர்ந்தார்போல
வரும் போம் திரிதருமென் நெஞ்சு"

என்றே இரவச்சத்தை வலியுறுத்தியுள்ளார். இரத்தல் விழைவான் உள்ளத்தையும் இற்றெனக் கணித்துள்ளார்.

"உயர்தரு மாதோட்டத்
தண்ணல் நண்ணுகே தீச்சரம்
அடைபவர்க் கருவினை யடையாவே."

ஓங்கிவளர் பெருமரக்கா சூழ்ந்த நகராம் மாதோட்டம். அங்குள்ள கேதீச்சரமே பெருமை பொருந்தியவன் பொருந்தி உறையும் இடம். அக்கேதீச்சரம் சென்று அடைபவர்தம்மைத் தீயவல்வினை சென்றடையாவாம்.

(4)

பொடிகொள் மேனியர் புலியதள்
அரையினர் விரிதருகரத் தேந்தும்
வடிகொள் மூவிலை வேலினர்
நூலினர் மறிகடல் மாதோட்டத்
தடிகள் ஆதரித் திருந்தகே
தீச்சரம் பரிந்தசிந் தையர்ஆகி
முடிகள் சாய்த்தடி பேணவல்லார்
தம்மேல் மொய்த்தெழும் வினைபோமே.

[பொடி - வெண்நீறு ; அதள் - உரி, தோல் ; அரை - இடுப்பு ; வடி - கூர் ; நூல் - செப்பம், ஒழுக்கம் உரைப்பது, முப்புரிநூல் ; மறித்தல் - மடித்தல் ; பரிந்த - அன்புடைய ; முடிகள் - தலைகள் ; மொய்த்தல் - அடர்தல், செறிதல்.]

அவர் வெண்ணீறு சண்ணித்த மேனியொடு விளங்குபவர். புலியின் உரியை அரைக்கு அசைத்துள்ளார். கையிலேந்தும் விரிந்து தோன்றும் கூரிய மூன்று இலை போலும் வடிவம் வாய்ந்த முத்தலை வேலை உடையவர். (இதனைச் சூலப்படை என்பர்.) முப்புரி நூல் மார்பில் துவள்பவர். செப்பம் வாய்ந்தவர். மடித்து எறியும் அலைகடல் அடுத்துள்ள நகர் மாதோட்டம். ஆங்கு நம்மையாளும் அடிகள் விரும்பி உறைவிடமாகக் கொண்டது கேதீச்சரம். அக்கேதீச்சரத்தை விரும்பி அன்பு மிக்க சிந்தையராய்த் தலைவணங்கி அவ்வண்ணலின் திருவடியேத்தவல்ல பெரியார் மேல் அடர்ந்தெழும் வினை தானே ஒழிந்துபோம்.

"பொடிகொள் மேனியர்"

பேரூழி இறுதியில் தாம் ஒருவரே தனி நின்று சுடலை வெண்பொடி பூசி விளங்குபவர்.

"புலியதள் அரையினர்"

தாருகா வனத்து முனிவர்கள் கருமமேயாவும் தரும், வினைவழியாவும் பெறலாம், தெய்வம் ஒன்று வேண்டா

என்னும் கொள்கையினை மேற்கொண்டு ஒழுகுபவர். ஆதலால், தெய்வம் பேணாது செருக்குற்றனர். நல்லறிவு புகட்டியும் அவர்கள் கேட்கவில்லை; அறிவு புகட்டியோனைக் கொல்ல விரும்பினார்கள். அடுபுலியொன்றைத் தங்கள் அபிசாரவேள்வியின் வழித்தோற்றுவித்தார்கள். "நீ சென்று சிவபெருமானைக் கொல்வாயாக" என்று ஏவினார் கள். சீற்றத்துடன் வந்தது கொடுவரிப்புலி. அதைச் சினந்து நோக்கிப் பற்றிக்கிழித்து அதன் தோலையே தன் வெற்றிக்கு அறிகுறியாக அரையில் கட்டிக்கொண்ட மாவீரர்.

"விரிதரு கரத்தேந்தும்
வடிகொள் மூவிலை வேலினர்
நூலினர்"

எக்காலும் தன் கையில் இலை போன்ற முத்தலை வேற்படை தாங்கிப் பகை வெல்லும் பற்றுடையார்; எனினும் செப்பமிக்கார்; அழகிய மார்பில் முந்நூல் இலங்க அந்தணனுமாயினார்.

தாருகா வனத்து முனிவர்கள் எம்பிரானைக் கொல்ல அனுப்பிய புலி மாண்டதும் அபிசார வேள்வியின் வழி முத்தலைச் சூலம் ஒன்றைத் தோற்றுவித்தார்கள். அதனைச் சிவபெருமான்மீது செலுத்தினார்கள். எம்பிரான் அதனைப் பற்றித் தம்முடைய கையிலே ஏந்தி, "நீ நம்முடைய படையாகக்கடவாய்!" என்று பணித்தார்.

"மறிகடல் மாதோட்டத்(து)
அடிகள் ஆதரித் திருந்தகே தீச்சரம்..."

மடித்த ஆடை விரித்து உதறுவதுபோன்று கரைமிசை மோதுற்றும், பின் மறித்துமெழும் அலைவாய்கடலை அடுத் துள்ளது மாதோட்டம். அந்நகரில் நம் அடிகளாகிய பெருமான் விரும்பி உறையுமிடம் கேதீச்சரமாம்.

"(கேதீச்சரம்) பரிந்தசிந் தையர்ஆகி
முடிகள் சாய்த்தடி பேணவல்லார்
தம்மேல் மொய்த்தெழும் வினைபோமே."

அடிகள் உறையும் கேதீச்சரம் என்னும் கோயிலை உளத்தே நினைந்து அன்பு கனிந்து தம் தலை சாய்த்து வணங்கி அவர்தம் திருவடியினை வாழ்த்துவோர் யாவரே யாயினும் அவர்மேல் ஊழ்வழி அடர்ந்தெழும் வினை தாமே ஒழிந்துபோம்.

"மொய்த்து எழுவினை" என்றமையால் பழவினை நிகழ்வது ஊழின்வலி என்பது பொருந்த உரைத்தலாகும். வள்ளுவரும், "ஊழிற் பெருவலி யாவுள" என்று வினவிப் பின்னர், "மற்றொன்று சூழினும் தான்முந்துறும்" என்றார். ஆயின், அவ்வாறு மொய்த்து எழும் வினை "போமே" என்றது நோக்கின் புதுமையாகவே தோன்றும். ஆயின் புதுமையின்று. வினைதான் (ஊழ்) வலிதேயாயினும் காலத்தொடு பட்டு நிகழ்வதாகும். காலங் கடந்த கடவுள் திருவடிச் சார்பு உற்றாரைக் காலத்துள் அடங்கும் வினைதான் யாது செய்யும்? அன்றியும், அறிவில்லாப் பொருளாம் அவ்வினைதானே செய்தவனைப் பற்றும் வகை யாது? சேர்ப்பான் ஒருவன் இடைநின்று உதவவேண்டும் அல்லவா? எனவே, சேர்ப்பான் ஒருவன் இன்மையாலே செய்தானைச் சென்றடரும் ஆற்றலுடையதா யிருந்தும் செல்லுதற்கின்மையால் காலத்தொடுதானும் சுழன்று சென்று கொண்டே யிருந்து வளர்ச்சி குன்றித் தேய்ந்தொழிந்து போம் என்னுஞ் சைவசித்தாந்த உண்மை யினை உள்ளவாறே எடுத்தோதியதுமாம்.

## (5)

நல்லர் ஆற்றவும் ஞானநன்
குடையர்தம் அடைந்தவர்க் கருள்ஈய
வல்லர் பார்மிசை வான்பிறப்
பிறப்பிலர் மலிகடல் மாதோட்டத்
தெல்லை யில்புகழ் எந்தைகே
தீச்சரம் இராப்பகல் நினைந்தேத்தி
அல்லல் ஆசறுத் தரனடி
யிணைதொழு மன்பராம் அடியாரே.

[அடைந்தவர் - சார்ந்தவர் ; வல்லர் - வல்லவர்; மலி - நிறை; ஆசு - குற்றம் ; இணை - ஒப்பு, இரண்டு.]

ஆற்றவும் நல்லவர். ஞானமோ நன்கு உடையவர். தம்மைத் தஞ்சமென்று அடைந்தோர்க்கு அருள்தர வல்லவர். இப்பூவுலகத்துப் பிறப்பும் மேல் உலகத்து இறத்தலும் (கடந்து செல்லுதல்) இல்லாதவர். நீர் நிறைகடலை அடுத்துள்ளது மாதோட்டம் என்னும் நகர். ஆங்கு அளவிலாப் புகழ் படைத்த எம்பெருமானுர் கோயில்கொண்டு அருள் புரியும் கேதீச்சரம் உண்டு. அக்கோயிலை இராப்பகலாக உள்ளத்தே நினைத்து வழுத்தித் தங்கள் துன்பமும், தீய குற்றமும் போக்கி அரன் திருவடி இரண்டினையும் தொழுதல் செய்யும் அன்பர் தாமே அடியவர் என்று அழைக்கப்படுவார்.

"நல்லர் ஆற்றவும் ஞானம்நன் குடையர்"

பொல்லாங்கு சிறிதேனும் பொருந்தியில்லாத நல்லவர். ஞானசம்பந்தப் பெருமகனுர் தாமே பிறிதோரிடத்தில், "நன்றுடையானை" என்றதோடமையாதே பின்னும் உண்மை புலனுக்குவதற்கு, "தீயதில்லானை" என்று எடுத்து விளக்கிக் கூறியுள்ளார். அன்றியும், "ஞானம் நன்குடையர்" என்றமையால் மற்றுப் பிற உயிர்களைக் காட்டிலும் ஞானம் நிறை செல்வர் என்பதும் புலப்படுத்தினுராயிற்று.

"......தம் அடைந்தவர்க்(கு) அருள் ஈய வல்லர்"

தம்மையே தஞ்சமென்று வந்தடையாரைக் கண்டு நாணமேலீட்டால் எள்ளி நகையாடுவாரேயன்றி எக்காரணம் பற்றியும் அருள்செய்யத் திருவுள்ளங் கொள்ளார், என்ற பேருண்மையினைப் பலரும் அறிந்து அவர் அருள் நாடித் தக்கவாறு ஒழுகுதல் கடன் என்பதை உறைப்பாக வலியுறுத்துதலாகும்.

இதனுல் அன்றே திருநாவுக்கரசும்,

"நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்ஞர்சடைப் புண்ணியன்
பொக்கம் மிக்கவர் பூவும்நீரும் கண்டு
நக்கு நிற்பன் அவர்தம்மை நாணியே"

என்று கரவில் பூசனை செய்வார் அல்லது பிறர் காணும் பொருட்டன்றித் தன்னுள்ளம் பொய்த்து வழிபாடாற்றுவோர் மேல் வைத்துக் கூறி விளக்கியது.

"பார்மிசை வான்பிறப் பிறப்பிலர்"

நிலவுலகத்தே யன்றிப் பிறவுலகத்து வாழும் உயிர்களும் (மக்கள், தேவர், நரகர் முதலியோர்) பிறவிப் பெருங் கடல் வாய்ப்பட்டு மறித்து மறித்துப் பிறப்பதும் இறப்பதும் தம் தொழிலாகக் கொண்டவை. ஈசன் ஒருவனே அவ்வாறு எவ்விடத்தும், எக்காலத்தும் பிறப்பு, இறப்பு இல்லாது என்றும் ஒருபடித்தாய் விளங்குபவன். இவ்வுண்மையினைச் சிவஞான சித்தியார்,

"யாதொரு தெய்வங் கொண்டீரத் தெய்வமாகியாங்கே
மாதொரு பாகனர் தாம்வருவர் மற்றத் தெய்வங்கள்
வேதனைப்படு மிறக்கும் பிறக்கும்மேல் வினையுஞ் செய்யும்
ஆதலான் இவையிலாதான் அறிந்தருள் செய்வன் அன்றே."

என்று திருமால் முதலிய தெய்வங்களையுங் கூடப் பிறந்து இறக்கும் இயல்பினையுடைய உயிர்த் தொகுதியில் வைத்துக் கூறுகின்றது. எனவே, ஈசன் ஒருவனே எவ்

விடத்தும், எக்காலத்தும் தனக்கோர் பிறப்பிறப்பு இல்லாத வன் என்பது தேற்றரவு தருகின்றது காண்க.

" மலிகடல் மாதோட்டத்(து)
எல்லை யில்புகழ் எந்தைகே
தீச்சரம் இராப்பகல் நினைந்தேத்தி
அல்லல் ஆசறுத் தரனடி
யிணைதொழு மன்பராம் அடியாரே."

நிறைகடல் சூழ்ந்த மாதோட்ட நன்னகரில் அளவில் புகழ் படைத்த எந்தை, ஈசன் கோயில் கொண்டுள்ள திருக் கேதீச்சரத்தை இரவு பகலாக நினைந்து பரவுவதாலே தங்கள் உறுதுயர் போக்கி, மேல் தீயது வாராது காத்து அரனடியிணை தொழும் அன்பரே அடியராவார்; பிறர் ஆகார் என வலியுறுத்தப் பெற்றுள்ளதாகும்.

## (6)

பேழை வார்சடைப் பெருந்திரு
மகள்தனைப் பொருந்தவைத் தொருபாகம்
மாழை யங்கயற் கண்ணிபா
லருளிய பொருளினர் குடிவாழ்க்கை
வாழை யம்பொழில் மந்திகள்
களிப்புற மருவிய மாதோட்டக்
கேழல் வெண்மருப் பணிந்தநீண்
மார்பர்கே தீச்சரம் பிரியாரே.

[பேழை - பெட்டகம்; பெருந்திருமகள் - இங்கே கங்கைமேல் நின்றது; கங்கை என்றாலும் வாறு என்றாலும் ஒரு பொருளே; மாழை - மா, மாவின் வடு; பொருளினர் - பொருளாகக் கொண்டவர்; குடிவாழ்க்கை - ஒழுக்கம் வாய்ந்த இல்வாழ்வு; மருவிய - பொருந்திய; கேழல் - பன்றி.]

பெட்டகம் போன்று அமைந்த நெடிய சடையினிடத்தே கங்கை என்றழைக்கப்படும் பெருமை பொருந்திய திருமகள் ஒருத்தியைப் பொருந்தும்படி வைத்துக் கொண்டவர். அவளையன்றியும், தனது மேனியில் ஒரு பாதியில் மாவின் வடுப்போன்ற தோற்றமும், இங்கும் அங்குமாக உகளும் செயலையுடைய கெண்டை மீன் போன்ற பிறழ்ந்த நோக்கமுமுடைய கண்களையுடைய உமாதேவியாரைத் தோற்றுவித்து அமர்ந்திருக்கச் செய்துள்ளார். என்னே அவர் பொருளாகக் கொண்டது! வாழைத்தோட்டங்களில் வந்துலாவும் மந்தி இனங்கள் கனிகளையுண்டு களிப்பு எய்தும்படியாகப் பொருந்தி விளங்கும் மாதோட்டம் என்னும் நகரில் ஒழுக்காறு நல்லதோர் இல்லறம் நடத்துகின்றார். ஆண் பன்றியின் வெள்ளை நிறமான மருப்பும் (கொம்பு) அணிந்து அழகு பொலி, அகன்ற மார்பினையுடைய அவர் என்றும் தம் உறைவிடமாகிய கேதீச்சரம் என்னும் கோயிலை விட்டு நீங்கார்.

“ பேழை வார்சடைப் பெருந்திரு
மகள்தனைப் பொருந்தவைத் தொருபாகம்

மாழை யங்கயற் கண்ணிபா
லருளிய பொருளினர்.''

ஆறு தாங்கிய சடையரேயாயினும் தன் மேனியிற் பாதி ஒரு மாதுக்கு அளித்த பொருளினை (கோட்பாடு) உடையவர். கங்கையைப் பெண்ணாக உருவகப்படுத்தல் செய்யுள் வழக்கு ; எனினும் உருவகத்தின் வழி காண்போமாயின் இரு பெண் வடிவம் தாங்கிய ஓர் ஆண் வடிவமேயன்றோ ! என்னே புதுமை! புதுமைதான். ஆனால், பழைமையிற் புதுமை என்றால் இப்படித்தான் தோற்றம் அளிக்கும். ஏன்,

" முன்னைப் பழம்பொருட்கும்
முன்னைப்பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும்
பேர்த்தும்அப் பெற்றியனே "

என்று மணிவாசகப் பெருமானாரே கூறுவதாயின் உண்மை இருக்கத்தான் வேண்டும். அன்றியும், இலக்கண நூல்களும் இரண்டு எதிர்மறை சாரின் ஓர் உடன்பாட்டை வலியுறுத்தும் எனவே கூறுகின்றன. இரண்டு பெண் உருவின் இடையே ஓர் ஆண் உருத் தோற்றம் நோக்கின் அவ்விரு பெண்களில் ஒன்று பெண் அல்லாமையும், ஒன்று பெண்ணாகவும் தோன்றக் காணுகின்றோம். எனவே, ஆண்மையினின்றே பெண்மைத் தோற்றம் என்ற பேருண்மைக்குப் புறம்பாகவே காட்சியளிக்கின்றதே இங்கு புதுமை எனக் கொள்ளப்படும். ஆயின், அவ்வாறே ஆண்மையினின்றும் தோன்றிய பெண்மையானது தன்னினின்றும் பிறிதோராண்மையினைத் தோற்றுவித்தலும் இயல்பேயாகுமன்றோ? இவ்வாறு ஒன்று வழி ஒன்று தோன்றித் தோற்றமளிப்பினும் இவற்றுக்கெல்லாம் மூலமாயுள்ளது அப்பெரும் தனி ஆண்மையொன்றே ஆவதால் பின்னையவையனைத்தும் அதன் வழி முறைப்படியே தோன்றும், தோற்றும் இயல்பினையுடையன. இவ்வரிய உண்மையினை விளக்கும்

வடிவமே கங்கை என்னும் மங்கையைச் சடையில் தாங்கி மறைத்தும், தன் ஆண் வடிவில் ஒரு கூறு பெண் வடிவாய்ப் பிறரும் அறிய வெளிப்படக் காட்டியும் கொண்டுள்ளது. இப்பொருட்டு இவ்வடிவம் என்பதை வலியுறுத்துவார் "பொருளினர்" என்று கூறிய கூற்றுக் கவனிக்கத் தக்கது. இக்காலத்து மேலை நாட்டு அறிவியலார் ஒருவர் இரண்டு பெண் புழுக்கள் காமவேட்கை மிகுதியால் ஓர் ஆண் புழு உடன் இல்லாததன் காரணமாகத் தம்முள் ஒன்று ஆண் புழுவாக மாறிவிட்டது என்று கூறுகின்றார். ஒப்புநோக்கி உண்மையறிதல் அறிஞர் தம் பொறுப்பாம்.

*

ஒருநாள் எம்பிரான் கைலை மலையிலுள்ள பூம்பொழில் ஒன்றிலே இனிதிருந்தார். எம்பிராட்டியார் எதுவும் பேசாமல் எம்பிரானுக்குப் பின்புறமாக வந்தார். விளையாட்டாக எம்பிரானுடைய திருக்கண்களைத் தமது திருக் கைகளினாலே மூடினார். அதனால் உலகங்கள் யாவும் இருண்டன; உயிர்கள் வருத்தமடைந்தன. அம்மையார் எம்பிரானுடைய கண்களை மூடிய கணப்பொழுதில் உலகத்துயிர்கட்குப் பல ஊழிக்காலங்கள் ஆயின. எம்பிரான் உயிர்களுக்குத் திருவருள் செய்ய எண்ணினார். தம்முடைய நெற்றியிலே ஒரு திருக்கண்ணை உண்டாக்கினார். அதனால் உலகங்களெங்கும் பரவியிருந்த பேரிருளை நீக்கினார். கதிரவன் முதலாயினோர்க்கும் பேரொளியைக் கொடுத்தார். உயிர்கள் மகிழ்ச்சியுற்றன. எம்பிரானுடைய செயலைக் கண்டு எம்பிராட்டியார் அச்சமுற்றார்; திருக்கண்களை மூடிய கைகளை எடுத்தார். அச்சத்தினாலே விரல்களினின்றும் வியர்வை தோன்றியது. தமது திருக்கைகளை உதறினார். அவ்வியர்வை பத்துக் கங்கைகளாய்க் கடல்களைப் போல எங்கும் பரவியது. திருமால் நான்முகன் முதலிய தேவர்களும் பிறரும் எம்பிரானைத் தொழுது கங்கைப் பிரவாகத்தைத் தாங்கிக் காத்தருள வேண்டினர். எம்பிரான் அக் கங்கையைத் தமது சடையிலுள்ள ஒரு மயிரின்மீது

விடுத்தார். கங்கைப் பிரவாகம் நின்றது. இது புராணக் கூற்று.

குடிவாழ்க்கை
வாழை யம்பொழில் மந்திகள்
களிப்புற மருவிய மாதோட்டக்
கேழல் வெண்மருப் பணிந்தநீண்
மார்பர்கே தீச்சரம் பிரியாரே

உடன் உறைதரும் வாழ்க்கைத்துணையோடு நல்லறமாகிய இல்லறம் நடாத்துவதன்பொருட்டே கனியும் தேனும் உண்டு களிப்புறும் மந்திகள் விளையாடு வாழைச் சூழலின் இடையே மாதோட்டநகரில் கேதீச்சரம் என்னும் கோயிலைவிட்டு நீங்காத் தன்மையராய் விளங்குகின்றார். ஆயின், "கேழல்வெண்மருப் பணிந்தநீண் மார்பன்" என்றமையால் விலங்குகள்வாழும் காட்டிலும் அச்சமின்றி வாழும் வீரம்செறிந்த அவர் எல்லோராலும் விரும்பப்படும் இல்வாழ்க்கை இன்பம் துய்ப்பதற்கென்றே மக்கள் குழுமி வாழும்நகரை விரும்பியுறைகின்றார் என்பதாம்.

ஏன்,

"துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை"

என்றே தமிழகத்து அறநூல் கூறுகின்றதல்லவா?

## (7)

பண்டு நால்வருக் கறமுரைத்
தருளிப்பல் லுலகினில் உயிர்வாழ்க்கை
கண்ட நாதனார் கடலிடங்
கைதொழக் காதலித் துறைகோயில்
வண்டு பண்செயு மாமலர்ப்
பொழில்மஞ்ஞை நடமிடு மாதோட்டம்
தொண்டர் நாடொறுந் துதிசெய
வருள்செய்கே தீச்சர மதுதானே.

[அறம் - நால்வகை அறம்; அதாவது அறம், பொருள், இன்பம், வீடு என்ப; நாதன் - தலைவன்; காதலித்து - விரும்பி; பண்செய்யும் - பாடும்; தொண்டர் - அடியவர்.]

அன்று ஒருநாள் சநகாதிமுனிவர் நால்வருக்கும் முறையே அறம், பொருள், இன்பம், வீடுபேறு இவற்றின் நிலையினை எடுத்து விளக்கி அருள்புரிந்தவர்; அவ்வாறே பல்வேறு உலகிலும் வாழும் உயிர்கள் பலவும் ஒழுகி வாழ்க்கை நடாத்தும்படி செய்துவந்த தலைவர். ஆதலால், கடல்சூழ்ந்த தீவகத்துள்ளோர் பலரும் தனது ஒழுக்க வாழ்க்கையைக் கண்டு நயத்துடன் தன்னைத் தொழும்படியாகத் தானேவிரும்பி உறைகின்ற கோயில்கேதீச்சரமாகும். மதுவுண்டு வண்டினங்கள் இசைமுரலும் மாமலர்க்காவில் வண்டின் இசைகேட்ட மஞ்ஞைக்கூட்டங்கள் இசையின் வசப்பட்டு வயின் வயின் தொறும் நடமிட்டு மகிழ்ந்தாடும் மாதோட்டநகரில் அன்பராம் அடியார்பலர் நாள்தோறும் புகழ்ந்து பாடக்கேட்டு அருள்புரியும் கேதீச்சரம் என்பது அதுவே.

பண்டு நால்வருக் கறமுரைத்தருளி

நால்வராவார் சநகன், சநந்தன், சநாதநன், சநற்குமாரன் என்பவர்களாம். இவர்கள், அயன்மனத்துத்தோன்றிய புதல்வர் எனப் பெரியோர் புகல்வர். இவர்கள், முறையே நான்கு வேதங்களையும் பயின்றவர்கள்; பலகாலம் பயின்ற

வர்கள். பலகாற்பயின்றும் பயன்பெறுது மயங்கிஞர்கள். ஏன், வேதவிழுப்பொருளின் இயல்பை எடுத்துப் பலவாருக விளக்கிமறைக்கும் தன்மையாலே வேதம், மறை என்றழைக்கப்பட்டது. அன்றியும், தன் அகத்தே அப்பொருள் மறையப் பொதிந்து விளங்குவதாலும் வேதம் மறையெனப் பட்டது. தொல்காப்பியரும் "மறைபிறரறியாமை" என்பார். அதுபோன்றே மறைபொருளாற் பொதிந்து மறைக்கப்பட்ட பொருளின் உண்மைநிலையினைக் காண மாட்டாது மயங்கிஞர்கள் அந்நால்முனிவரும் என்ருல் அது மிகையாகாது.

வேதத்தின் உள்பொருள் யாது என்பதனை அதனை ஆக்கித்தந்த வேதமுதல்வனேயன்றிப் பிறர் உணர்தல் கூடாமை வெளிப்படை. வேதமுதல்வன் என்று அழைக்கப்படும் அயனும்தான் வேதம் ஓதுதற்கு (பயிலுதற்கு) முதல்வனுயினனே அன்றி அவ்வேதன் தானும் வேதம் கற்பித்தவன் ஆகான் என்றதோர் உண்மையும் இங்கு புலனுதல் காண்க. வைத்தவன் எடுத்தல் வேண்டும், வழி தெரிந்தவன் போதல் வேண்டும் என்ற உண்மை உலக வழக்குக்கு இணங்கவே ஈசன் ஆம் எம்பெருமான், வேத முதல்வன், வேதத்தை ஆக்கியோன் ஆனதாலே மயங்கிப் பொருளுணராது, அதுவோ அன்றி இதுவோ பெரும் பொருள் எனக் கலங்கி உழலும் மனத்தவராம் அந்நான்கு முனிவர்பாலும் இரங்கித்தானே ஞானகுரவன் வடிவம் தாங்கி ஓராலின்கீழ் அமர்ந்திருந்து அவர்கட்கு உள் பொருள் யாது என உணர்த்தியருளிஞர். உள்பொருள் உணர்த்துங்கால் அறமுதலாய நான்கினையும், முறைப் படுத்தி அறம், பொருள், இன்பம், வீடு எனப் பகுத்தோதி யருளிஞர் என்பர் அறிஞர்.

இவ்வுண்மையினை அப்பரடிகளும்,

"ஆலின்கீழ் அறம்நால்வர்க் குரைத்தான் கண்டாய்"

என்றும்,

"அன்றாலின்கீழ் நால்வர்க்கறமுதலா நான்கினையும்
அருளினான் காண்"

என்றும் கூறியவாறே சான்றாகும்.

அன்றியும்,

"கல்லாலின் தண்ணிழற்கீழ் கல்வித்துறைபயந்த
காமர்காட்சி நல்லானை"

எனவரும் செய்யுளாலும் நன்கு தெளியலாம்.

"பல் லுலகினில் உயிர்வாழ்க்கை
கண்ட நாதனார்"

தாம் அந்நான்கு முனிவர்கட்கும் பொருள் உரைத்த வாறே பல்வேறுவகைப்பட்ட உலகெங்கணும்-வாழும் உயிர் பலவும் ஒழுகும்படி செய்தருள்புரிந்த தலைவர்.

"கடலிடங்
கைதொழக் காதலித் துறைகோயில்
வண்டு பண்செயு மாமலர்ப்
பொழில்மஞ்ஞை நடமிடு மாதோட்டம்
தொண்டர் நாடொறும் துதிசெய
வருள்செய்கே தீச்சர மதுதானே"

கடல்சூழ்ந்த தீவகத்து விளங்கும் மக்களும், கண்டு கை தொழ வண்டு பாண் செய்யும் மாமலர்ப்பொதும்பரில்பாண் இசைகேட்ட மயிலினமும் இன்பத்துறையாம் இசையள வில் ஈடுபட்டுக் களிப்பெய்தித் தோகைவிரித்துக் கூத்தாடும் காட்சியளிக்க, மாதோட்ட நகரில் உள்ள தொண்டர் பல ரும் துதிசெய்து வணங்கி நிற்கக்கண்டு, உள்ளம் மகிழ்ந்து அருள்புரிந்துறையும் கோயில் அதோ தோன்றுகின்ற கேதீச்சரமாகும்.

"கேதீச்சரம் அதுவே" என்ற சொற்றொடரில் காணும் "அது" என்னும் சேய்மைச்சுட்டுச் சொல்லே திருஞானசம்பந்தப் பிள்ளையார் திரு இராமேச்சரத்திருந்தே நினைந்து பாடியருளினார் என்பதற்கும் கேதீச்சரம் வந்து சேர்ந்து பாடியருளிய தில்லை என்பதற்கும் தக்கதோர் அகச் சான்றாகும் என்று கொள்ளுதல் பொருந்தும்.

(8)

தென்னி லங்கையர் குலபதி
    மலைநலிந் தெடுத்தவன் முடிதிண்தோள்
தன்ன லங்கெட அடர்த்தவற்
    கருள்செய்த தலைவனூர் கடல்வாயப்
பொன்னி லங்கிய முத்துமா
    மணிகளும் பொருந்திய மாதோட்டந்
துன்னி அன்பொடும் அடியவர்
    இறைஞ்சுகே தீச்சரத் துள்ளாரே.

[தென் இலங்கையர் குலபதி - இராவணன்; முடி - தலை; நலம் - இயல்; அடர்த்து - கெடுத்து; வாய் - இடம்; இலங்கிய - ஒளிவிடுகின்ற; துன்னி - பொருந்தி; இறைஞ்சுதல் - வணங்குதல்.]

தென்பால், நிலநடுவரையின் தென்பால் விளங்கிய இலங்கை நாட்டு மக்களின் தலைவன் (அரசன்) திருக்கைலாயமலை என்னும் பெருமலையை (இமயமலையை) தன் உடல் நலியும் வரையும் மெய்வருத்தம் பாராது உள்ள ஊக்கத்துடன் எடுத்தான். அவ்வாறு அவன் மலையை எடுக்கும் போது அசைவுகண்டு, எடுக்கும் அவன் தலையும், தோளும் வலிமை குன்றித் தன் இயல்பு கெடும்படி அடர்த்துவருத்திப் பின்னர் அவன்பால் இரங்கி நல்லருள் புரிந்த தலைவனே எம்பெருமானுவன். பெருமான் கடலிடத்து விளங்கும் பொன்னொளிகாலும் முத்துக்கள் அலையால் மோதுண்டு ஒதுங்கி அணிசெய்யும் மாதோட்டம் என்னும் நகரில் நெருங்கிநின்று அன்பர்கள் பலரும் அன்போடு தலைவணங்க அருள்வான் கேதீச்சரம் என்னும் கோயிலுள் அமர்ந்துறைகின்முன்.

" தென்னி லங்கையர் குலபதி
மலைநலிந் தெடுத்தவன் "

நிலநடுவரையின் தென்பால் விளங்கியது இலங்கை என்னும் தீவகம். அத்தீவகத்து அரசன் இராவணன் என்

பவன். இவனே பண்டொருகாலத்து நிலநடுவரையின் வடபால் விளங்கும் திருக்கைலாயமலை என்றழைக்கப்படும் இமயமலையைக் கடந்துசெல்ல முயன்றான். முயலுங்கால் தான் ஏறிச்சென்ற பறவை வடிவம்போன்ற வானவூர்தி (புட்பக விமானம்) செல்லுவதற்குத் தடையாய் அம்மலை மிக்கோங்கியிருந்தது. என்செய்வான் இராவணன்? செல்லுதற்குத் தடையாக இருக்கும் அம்மலையைத் தானே சற்று நகர்த்திப் பின் அவ்வெளிவழிச் செல்ல விழைந்தான். விழைந்தவாறே, தன் முழுவலிமையுங்கொண்டு அறியாமை மேலீட்டால் அம்மலையை நகரும்படி அசைத்தான். "ஆத்திரக்காரனுக்குப் புத்திகொஞ்சம்" என்பார். உடல் வலிகுன்றுங்காறும் ஊக்கத்தோடு அசைத்துத் தூக்கினான்.

இவ்வரியதொரு பேருண்மையினைத் தேவார ஆசிரியன்மார், மணிவாசகப் பெருந்தகையார் முதலியோர் எடுத்து விளக்கியுள்ளார்கள். அன்றியும், சங்ககால இலக்கியங்களுள் தொகை நூல்கள் எட்டனுள் ஒன்றாகிய கலித்தொகையில் குறிஞ்சிக்கலிபாடிய பெரும்புலவர் கபிலர் என்பாரும் உவமைப்பொருளில் வைத்து எவரும் உண்மை உணருமாறு விளக்குவதும் காண்க.

> "இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
> உமையமர்ந் துயர்மலை யிருந்தனன் ஆக
> ஐயிரு தலையின் அரக்கர் கோமான்
> தொடிப்பொலி தடக்கையிற் கீழ்புகுத் தம்மலை
> எடுக்கல் செல்லாது உழப்பவன் போல"

(குறிஞ்சிக்கலி 2.)

[இமயமலையிடத்துப் பிறந்த மூங்கிலாகிய வில்லை வளைத்த, கங்கையான் ஈரத்தையுடைத்தாகிய சடையினையுடைய இறைவன், இறைவியோடே பொருந்தி, உயர்ந்த கைலைமலையிலே இருந்தானாக, அரக்கர்க் கரசனாகிய பத்துத் தலையுடைய இராவணன் வரையெடுத்தற்குக் கையைக் கீழே செருகித் தொடி பொலிவுபெற்ற அத்தடக்கையினாலே

அம்மலையை எடுத்தலாற்ருது வருந்துகின்றவனைப் போல,"
—நச்சினர்க்கினியார்.]

" எடுத்தவன் முடிதிண் தோள்
தன்ன லங்கெட அடர்த்தவற்
கருள்செய்த தலைவனர் "

இராவணன் தனது கால்களை ஊன்றித் தனது கண்ணும் வாயும் நெருப்பெழ, மெய்கலங்க, தனது இருபது கரங்களையும் நிறுவி, விண்ணும்அதிர அக்கைலை மலையை வேரோடும் பேர்த்தசைத்து அலைத்துக் குலுக்கி நிலை குலையச்செய்து நெறுநெறன எடுத்தான். அப்படி எடுக்கும் போது உமாதேவி பயந்தனள். எம்பிராட்டியார் பயந்ததைக் கண்ட பெருமானர் முறுவல்செய்து தமது ஒரு காலின் விரல்களுள் ஒரு விரலில்உள்ள நகத்தின் நுனியால் சிறிதே ஊன்றி அழுத்தினர். மலையின்கீழ் இராவணன் நசுக்குண்டான். அவனது இருபது தோள்களும் உடலும், உரமும், கரமும், சிரமும் நெரியுண்டன. இராவணன் அஞ்சினன்; பத்துவாயாலும் அலறினன்; அழுதான். அவனது அடல், ஆண்மை, ஆற்றல், வீரம் யாவும் குன்றின. எம்பிரான் சிரித்தார். இராவணன் உய்யும் வழியை நாடினன். எந்தையடி போற்றி என்று கைந்நரம்பெடுத்தமைத்து மனம்ஒன்றி ஏழிசையாழ் வாசித்தான்; சாமவேதகீதத்தை ஓதினன். எம்பிரான் இரங்கினர்; ஊன்றிய விரலை நெகிழ்த்தனர்; இழந்த வலியைக் கொடுத்தனர்; நீடிய ஆயுளும் பெரிய போர்வாளும் அவனுக்கு அளித்தருளினர். அத்தகைய தலைமகனர் திருக்கேதீச்சரத்தான் என்பதைக் குறிப்பதே இவ்வடிகளாம்.

" கடல்வாயப்
பொன்னி லங்கிய முத்துமா
மணிகளும் பொருந்திய மாதோட்டந்
துன்னி அன்பொடும் அடியவர்
இறைஞ்சுகே தீச்சரத் துள்ளாரே "

இராவணன் வலிகெடுத்துத் துன்புற்றுழலும் அவ னுக்கு இரங்கிநாளும் வாளும் கொடுத்துதவிய தலைவரே, கடற்படு முத்துமணி ஒளிவீசத் திரைகொழித்துக் கரை யொதுக்கும் கடலையடுத்த மாதோட்டம் என்னும் நகரில் அன்பொடும் அடியார் பலர் நெருங்கி நின்று தலைவணங்கி நிற்க அருள்புரிவாராயத்திருக்கேதீச்சர மென்னும் கோயி லைத் தனக்கு உறையுளாக் கொண்டுள்ளார்.

(9)

பூவு ளானும்அப் பொருகடல்
வண்ண னும் புவியிடந்தெழுந் தோடி
மேவி நாடிநுன் அடியிணை
காண்கிலா வித்தக மென்னுகும்
மாவும் பூகமுங் கதலியும்
நெருங்குமா தோட்டநன்னகர் மன்னித்
தேவி தன்னெடுந் திருந்துகே
தீச்சரத் திருந்தவெம் பெருமானே.

[பூவுளான் - தாமரையில் எழுந்தருள் அயன்; பொருகடல் வண்ணன் - ஆழ்ந்த கடல்நீர்த் தோற்றம் போன்ற நிறமுள்ள திருமால்; இடந்து - தோண்டி, தொட்டு; எழுந்து - மேல் எழுந்து, பறந்து; நாடி - கூர்ந்துநோக்கி; வித்தகம் - உள்ளடக்கம்; பூகம் - கமுகு.]

தாமரை மலர்மேல் வீற்றிருந்து உலகு படைக்கும் அயனும், ஆழியகடல் நீர்த்தோற்றம் போல் விளங்கும் கருநிற மாலும் முறையே மால் நிலத்தைக் கீண்டும், அயன் விண்மிசைப் பறந்தும் யாண்டும்ஓடிப் பொருந்திக் கூர்ந்து நோக்கியும் நின் திருவடியிணை காணமாட்டாமையால் மயங்கினுர்கள். அவ்வாறு அவர்கள் இருவரும் காண வொண்ணுது (இறைவன்) செய்த உள்ளடக்கந்தான் என்னே? எம்மனோரால் அறியவும்படுமோ? மாவும், கமுகும், வாழையும் நெருங்கி விளங்கும் மாதோட்ட நல்நகரில் பொருந்தி வாழ்க்கைத் துணையோடும் திருந்தப்பெற்ற கேதீச்சரம் என்னும் கோயிலுள் அமர்ந்துறையும் எம் பெருமானே.

“ பூவு ளானும்அப் பொருகடல்
வண்ண னும் புவியிடந்தெழுந் தோடி
மேவி நாடிநுன் அடியிணை
காண்கிலா வித்தகம் என்ஆகும்! ”

✱

"பூவெனப்படுவது பொறிவாழ் பூவே"

என்றும்,

"பூவினுக் கருங்கலம் பொங்குதாமரை" என்றும் பெரியோர் உரைப்பார்கள். ஆதலால், இங்கு தாமரைமலர் மேல் வீற்றிருந்து உலகு பல படைத்துதவும் அயன் ஆகும்.

"பொருகடல் வண்ணன்" என்றது திருமாலையே குறிப்பதாம். திருமாலின் மேனி கருங்கடல் வண்ணம். கடல்நீர் எத்துணை ஆழமுடையதோ அத்துணை ஆழத்துக் கேற்பத் தனக்கென ஒரு நிறமும் இல்லாநீரும் தோற்றத் தால் கருமை நிறமாக விளங்குவது இயல்பாகும்.

சொல்லப்பட்ட அயனும், மாலும் மகன் தந்தை முறை மையில் சமய நூல்கள் பேசுகின்றன. ஒரு காலத்து இருவரில் மகன் முறைமையுரிய அயன், தான் உலகு படைத்து உதவாவிடின் தன் தந்தையாம் மாயோனுக்குச் செய்தொழில் கூடாதாதலாலே அக்காப்புத் தொழிலுக்குக் காரணமாய் விளங்குவதுதானே எனக் கண்டான். தன்னில் பெருமைகொண்டான். சரேல் என வெளிச் சென்றான். காக்குந்தொழில் முடைப்படாது நிகழவேண் டுமே. என் செய்வது? "எவ்வுயிரும் காக்குமொரு ஈசன் உளனே இலையோ," என்றபடி காக்குந் தொழில் பூண்ட தன்னையும் காப்புச்செய்யும் பரம்பொருளாகிய இறைவனை ஒருமனப்பட்டவனாக உள்ளத்தால் நினைந்த வண்ணமாய் அறிதுயில் அமர்ந்த தன் தந்தையை அவன் பேருறக்கம் உறங்குபவனாகவே கண்டான். தன் பெருமை யினை எடுத்துக் கூறித் தருக்கினான். தன் மகன் தருக் குற்றது கண்டு யாதுற்றதோ என ஒன்றுந் தோன்றாது சற்றே மயங்கிய மாலோன்தான் தனக்கொரு தந்தை யல்லவா, மறந்தனனே என அறிவுச்சுடர் கொளுத்தியும் பயனில்லாது போயது. அறிவு மயக்கத்தால் இருவரும் தருக்கிய உள்ளத்தராய்த் தம்மில் பகைத்துப் பெரும் போரிட்டனர். நெடுங்காலம் போர் நின்றபாடில்லை. கண்டார் இறைவனார் இவர்தம் அறியாமையை. அறிவுச்

சுடர் கொளுத்த எண்ணித் தாமொரு தீப்பிழம்பு (தாணு) வடிவாய் அவர்க்கிடையில் தோன்றி அருளினர். தாணு வின் உருவைக் கண்ட இருவரும் அச்சுற்றவராய்த் தம் இடுபோரை நிறுத்தினர். இவ்வுருத் தோற்றத்தின் அடியும் முடியும் தேடிக்கண்டவரே பெரியர் ஆவார் என உறுதி யிட்டுத் தேடுவாராயினர். அயன் அன்னப் பறவை வடிவாய் முடிதேடச் சென்றான். மாலவனே பூமியை இடந்து அவ்வுருவின் அடியினைத் தேடமுயன்றான். இரு வரும் தேடியுங் காண்கிலர். இளைத்து அவ்வுருத் தோன்றியவிடத்து மீண்டும்வந்து அடங்கி ஒடுங்கினர். தோன்றிய தீப்பிழம்பின்வழி எல்லாம்வல்ல இறையருள் பெற்றுய்ந்தனர் எனப் புராணம் கூறுகின்றது.

ஆயுங்கால், இறைவன்முன் அடங்கித்தாழும் உயிர் திருமால் என்பதும், அடக்கம் இன்றி யாண்டும் சென்று மீண்டுவரும் ஆற்றல்வாய்ந்த மனம் (உள்ளம்) அயன் என்றும் கருத இடமுண்டு. மனத்தின் செயல் எல்லாம் ஆக்கும் தொழிலே. அதுவே போன்று உயிரின் செயல் எல்லாம் உடலோம்புவதே எனக் காணுகின்றோமல்லவா ?

“ மாவும் பூகமுங் கதலியும்
நெருங்குமா தோட்டநன்னகர் மன்னித்
தேவி தன்னொடுந் திருந்துகே
தீச்சரத் திருந்தஎம் பெருமானே ”

மாலயன் காணு மலரடி அண்ணல் தான் மாவும், கமு கும், வாழையும் நெருங்கிவளரும் மாதோட்ட நகரில் மனை வாழ்க்கை வாழ்வாங்கு வாழும் முறையில் ஏனையோரும் கண்டு நடத்தத் தானும் தன்வாழ்க்கைத் துணையொடும் பொருந்தித் திருந்திய வாழ்வுடைய கேதீச்சரம் என்னும் கோயிலுள் இருந்த எம்பெருமான் என்பதாம்.

(10)

புத்த ராய்ச்சில புனை துகில்
உடையவர் புற்றுறை சமண்ஆதர்
எத்த ராகிநின் றுண்பவர்
இயம்பிய ஏழைமை கேளேன்மின்
மத்த யானையை மறுகிட
உரிசெய்து போர்த்தவர் மாதோட்டத்
தத்தர் மன்னுபா லாவியின்
கரையிற்கே தீச்சரம் அடைமின்னே.

[புனை துகில் - அழகிய பட்டாடை; புற்று - வான்மீகம்; எத்தர் - ஏமாற்றுபவர்; ஏழைமை - அறியாமை; மறுகிட - மறுக்கம் உறும்படியாக.]

புத்த சமயஞ் சார்ந்து சிறிய அழகிய பட்டாடையே தங்கட்கு உடையாகக் கொண்டு உடுப்பவர்களும், வன்மீகத்திருந்து மறைந்து வாசஞ் செய்யும் அமணராம் சமண சமயத்தைச் சார்ந்தொழுகும் அறியாமைப் பித்தர்களும் ஏமாற்றஞ் செய்பவர்களாய் வாழ்க்கை நடாத்தியும் நின்றும் (இருந்தும்) உண்பவர் ஆவார்கள். ஆதலால் அவ்விருவகைச் சமயத்தவர்களும் எடுத்துரைக்கும் அறியாமை உரையைச் செவிவாயாகக் கொள்ளுதல் கூடாவாம். தாருகாவனத்து முனிவர் பலரும் விடுத்த மத்த யானையை அது நின்று மறுக்க முற்றுத் துயருற அடர்த்து, அதன் தோலை உரித்து, அதனையே மேற் போர்வையாகப் போர்த்துக் கொண்ட வீரர் நம்பெருமானவர். அவர் மாதோட்டம் என்னும் நகரின் தலைவரும் ஆவார். ஆதலால், அவர் பொருந்தி உறைதரும் பாலாவியின் கரையில் விளங்கும் கேதீச்சரம் என்னும் கோயிலைச் சென்று அடையுங்கள்.

"புத்த ராய்ச்சில புனை துகில்
உடையவர்"

புத்தசமயம் இறத்தலே முத்திநிலை எனச் சித்தாந்தம் பண்ணும். வினைபற்றிய சிந்தனையே அவர்கட்கில்லை

எனவே நூல்கள் கூறும். பிடகநூல் இச்சமயத்தவர்க்கு மூலமாவது. பிடகநூலும் மூவகைப்படும் ஆதலால், "திரி பிடகம்" என்றழைக்கப்படும். இச்சமயத்தவர் உயிர் வதையை வெறுப்பர். ஆயினும், ஊன் உண்டு வாழ்வர். இச்சமயக்கொள்கை தமிழ்நாட்டிலே பரவத்தொடங்கும் காலத்திலிருந்தவர் நம் திருவள்ளுவப் பெருந்தகையார் என்பதற்கோர் அகச்சான்றாக அவர் எடுத்துரைத்த ஏக் கழுத்தமான உரையாவது,

"தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்"

என்பதாகும்.

இவர்கள் நல்ல அழகிய பட்டாடையால் தங்களை அலங்கரித்துக் கொள்ளுவார்கள். ஆனால், விரும்புவது பழுப்புச் செந்நிற ஆடையே. இவர்கள் சமணர்களைப் போலன்றிஇருந்துண்ணும் பழக்கம் உடையவர்கள்.

"அறந்திகழ் பிடக நன்னூல்
ஓதியன் புடைய னாகிப்
பிறங்குபல் யோனி தோறும்
பிறந்துயிர்க் குறுதி செய்து
மறந்தரு கோற லாதி
நால்வகை யொழித்து மாண்பு
சிறந்துள போதி நீழற்
சேர்வனெம் மிறைவ னாவான்;

[கொல்லாமை முதலிய தருமங்களை விரித்து விளங்கும் நல்ல பிடகநூல்களைக் கூறி, உயிர்களிடத்து அன்புடையவ ராகி விளங்காநின்ற பல யோனிகள் தோறும் பிறந்து, அவ்வுயிர்கட்கு நன்மைகளைச் செய்து, வன்கண்மையை உடைய ஊராத்துமவாதம் முதலிய குற்றங்கள் நான்கை யும் நீக்கி, மகிமை சிறந்துள்ள அரசமர நிழலில் உருவத் திருமேனிகொண்டு வீற்றிருப்பர் எமது கடவுளார்.]

" மேவிய கருவிற் சேரு
முருவம் வேதனை குறிப்புப்
பாவனை யுடன்விஞ் ஞானப்
பஞ்சகந் தங்கள் கூடி
யோவில்பல் லுணர்வுண்டாகி
யொழிவது பிறவித் துன்பம்
ஆவது பொன்றக் கேடாய்
அழிவது முத்தி யென்ருன் "

[உதரத்திற் பொருந்திய கருப்பத்தின்கட் சேரும் உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் ஆகிய இப்பஞ்சகந்தகளுங் கூடித் தேகஞ் சனித்து, ஒழிவற்ற பலதிற அறிவுகளும் உதித்துப் பின்பு தாங்கூடியவாறே அக்கந்தங்களின் கூட்டம் ஒவ்வொன்ருய் அழிவைப் பொருந்துவதே பிறவித்துன்பமாம்; அங்ஙனம் கூடிய அப்பஞ்சகந்தக் கூட்டமும் இல்லை என்னும்படி நாசமாய் அழிவதே நமது முத்தி என்று புத்த குரு கூறினர்.]

இதுவே புத்தர் சமயம் என்பர் கடவுண் மாமுனிவர்.

" புற்றுறை சமணர் ஆதர் "

இவர்கள் அம்மணம் (ஆடையின்மை) ஆகவே புற்றுக்களை அடைந்து மறைந்து செய்யும் தவவொழுக்கம் பூண்ட தலைவர் ஆவார். தலையின் மயிர் பறித்து வழுக்கையாய்ச் செய்து கொள்வர். சிற்றுயிர்களைக் காலடியால் மிதித்து விடுவோமோ என்றஞ்சியவர்களாய்க் கையில் மயிற்பீலி கொண்டு நிலந்தூத்துத் தள்ளாடித் தள்ளாடிச் செல்லுவார்கள். நிலத்திருந்து முண்ணுர்; நின்று கொண்டே உண்பார்கள். வெளிச் செல்லுங்கால் தாங்கள் அம்மணர் ஆனதால் பாய்சுற்றி உடல் மறைத்துச் செல்லுவார்கள். இவர்கள் வினை உண்டென்பர். அவ்வினைதான் செய்தானைத் தேடிச் சென்றடையும் என அறியாதே கூறுவர். ஆனது பற்றியே, " ஆதர் " என்றழைக்கப்பட்டார் போலும்.

" எத்த ராகிநின் றுண்பவர்
இயம்பிய ஏழைமை கேளேன்மின் "

புத்தர் சமணராம் இருவகைச் சமயத்தவரும் ஏமாற்று பவராகவே வாழ்க்கை நடாத்தும் இயல்பினர். இவ்வாறு இருந்தும், நின்றும் உண்பவராம் இவர்கள் எடுத்துக் கூறுவதெல்லாம் அறியாமையே சார்பாகக் கொண்டுள்ள தால் அவர் கூற்றைக் கொள்ளற்க.

" மத்த யானையை மறுகிட
உரிசெய்து போர்த்தவர் "

யானை உரிபோர்த்த வரலாறு பற்றிய விளக்கத்தைச் சுந்தரரின் முதலாவது செய்யுளின் கீழே காண்க.

" மாதோட்டத்(து)
" அத்தர் மன்னுபா லாவியின்
கரையிற்கே தீச்சரம் அடைமின்னே "

மாதோட்டம் என்னும் நகரில் பாலாவியின் கரையில் விளங்கும் கேதீச்சரம் என்னும் கோயிலை அத்தர் தன் உறைவிடமாக் கொண்டுள்ளதால் அங்குசென்று அடையுங் கள் என்பதாம்.

## (11)

மாடெ லாம்மண முரசெனக்
　　கடலின தொலிகவர் மாதோட்டத்
தாடல் ஏறுடை அண்ணல்கே
　　தீச்சரத் தடிகளை அணிகாழி
நாடு ளார்க்கிறை ஞானசம்
　　பந்தன்சொல் நவின்றெழு பாமாலைப்
பாட லாயின பாடுமின்
　　பத்தர்கள் பரகதி பெறலாமே.

[மாடு - பக்கம் ; முரசு - பறை ; கவர் - தன்வசம் இழுக்கின்ற; ஆடல்ஏறு - போரேறு ; அணி - அழகு ; இறை - அரசு ; நவின்று- நாவினால் எடுத்துக்கூறி ; பரகதி—மேல்நிலை.]

அண்டை அயல் எல்லாம் மணம் நிகழுங் காலத்து நிகழ்த்தும் மணப்பறை அறை ஒலி கேட்பதுபோன்று கடல் அலை வீசி எறியும் தொடர் ஒலியைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் மாதோட்ட நகரத்து அமர்ந்துறை பவர் (ஆடல் ஏறு போன்ற) ஏற்றினையுடைய பெருமை வாய்ந்தவர். கேதீச்சரம் என்னும் கோயிலைத் தமக்கு உறைவிடமாக் கொண்டு ஒழுகுபவர் நம் அடிகள். நம் அடிகளை அழகிய சீர்காழிப்பதியில் உள்ளார்க்கு எல்லாம் தானேர் தலைவனாய் விளங்கும் அரசன் ஞானசம்பந்தன் சொல்லால், நாவினால் நவில எழுந்த பாமாலைப் பாட லாயின வற்றைப் பாடுங்கள் ; பத்தர்கள் யாவரேயாயினும் மேல்நிலை பெறலாம்.

"மாடெ லாம்மண முரசெனக்
　　கடலின தொலிகவர் மாதோட்டத்து"

திருமணம் நிகழுங்காலத்திலே மணப்பறை அறைந்து அதனொலி செவியாரக் கேட்டு யாவரும் மகிழ்வோம். "மண முரசு என" என்று எடுத்துக் கூறியது நோக்கின் மற்றும் இருவகை முரசொலியும் நீக்கப் பெற்றுள்ளது எனக் காணு கின்றோம். மணமுரசு, போர் முரசு, பிண முரசு என

மூவகை முரசுள்ளன. அவை முறையே அவ்வக்காலத்து நிகழ்தல் கூடுமேயன்றி எப்போதும் ஒருங்கே நிகழ்வது அரிது. ஆனதாலன்றோ ஞானசம்பந்தப் பெருமான் இங்கு போர்ப் பறையும் சாப்பறையும் ஒழித்து மணப்பறை ஒன்றே நிகழுங் குறிப்பொடு உவமை கூறியுள்ளார்.

எனவே, என்றும் மணப்பறை அறை ஒலி கேட்பது போலவே கடலினது அலைஒலி ஓவாது இசைக்கும் மாதோட்டம் என்று பொருள் கொள்ளுமாறு ஓதியுள்ளார் போலும். அன்றியும், மங்கல இயம் முழங்கும் ஒலியுமாம்.

> " ஆடல் ஏறுடை அண்ணல்கே
> தீச்சரத் தடிகளே "

இது "கொல்லேற்றுப் பாகனுர்" என்றதைப் போன்றதே. போரேற்றினைத் தனக்கே உரிமையாக் கொண்ட பெருமை வாய்ந்த பெரியோன் என்ற சிறப்புப் பற்றியதுமாகும். ஏன்? ஊர்வதும், உயர்த்துவதும் அவ் வேற்றினையல்லவோ?

ஊர்தியும் வால்வெள்ளேறு அன்றி உயர்த்துவதும் அவ்வெள்ளேறு ஆகக்கொண்ட பெருமையோன் கேதீச்சரம் என்னும் கோயிலுள் உறையும் அடிகளாவார்.

> " அணிகாழி
> நாடு ளார்க்கிறை ஞானசம் பந்தன் "

நம் திருஞானசம்பந்தப் பெருமகனுர் தோன்றியது அந்தணர் குலத்துக் கவுணியர் குடிப் பிறப்பிலாயினும் அழகுமிக்க சீகாழிப்பதியின் மன்னன் (குறுநிலவேந்து) என்பதை நம்போல்வாரும் அறியும்பொருட்டே எடுத்து விளக்கியதாம். "அந்தணளர்க்கரசுவரைவின்றே" என்றூர் தொல்காப்பியனுரும் அல்லவா? பரசுராமன் என்னும் ஓர் அந்தணனும் பேரரசாய்த் திகழ்ந்த வரலாறு இராமாயண வாயிலாய் அறிகின்றோம். நம் வன்றொண்டப் பெருமகனுர் ஆதி சைவ மரபினரேயாயினும் திருமுனைப்பாடி

நாட்டு மன்னனுகவே விளங்கியதும் நன்கு அறிவோம் அன்ருே?

"சொல் நவின்றெழு பாமாலைப்
பாட லாயின"

* * * *

"கேட்டார் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்"

என்றபடி மொழியும் ஆற்றலுடையவர் நம் திருஞான சம்பந்தப் பிள்ளையார் என்பதுதானே தெற்றென விளங்கும். அத்தகைய இனிய, கரவில்லாத, உறு பயன் தரும் சொற்களால், ஞானப்பாலுண்டு பால்மணமருத தன் நாவிஞல் நவில எழுந்த பாமாலைப் பாடல்கள் என்பதாம்.

"போதையர் பொற்கிண்ணத் தடிசில் பொல்லாதெனத்
தாதையர் முனிவுறத் தானெனை யாண்டவன்
காதையர் குழையினன் கழுமல வளநகர்
பேதையாள் அவளொடும் பெருந்தகை இருந்ததே"

எனச் சம்பந்தப் பெருமான் அன்றே கூறியருளிய திருப் பாடலே தக்கதோர் அகச் சான்ருகும்.

"பாடுமின்
பத்தர்கள் பரகதி பெறலாமே"

அங்ஙனம் உமையம்மையார் திருமுலைப் பால்சுரந்து அழகிய பொற்கிண்ணம் ஒன்றிலேந்தித் திருஞானம் குழைத்து இட்டுத் தர உண்டவாயால் பாடிய பாட்டுக் களைப் பாடுங்கள். பாடும் பத்தர்கள் யாவரேயாயினும் மேல்நிலை எளிதில் பெறலாம் என்பதைப் புலனுக்குதல் தெளிவாம்.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச்செய்த தேவாரம்

# திருக்கோணமாமலை

### பண்—புறநீர்மை

திருச்சிற்றம்பலம்

(1)

நிரைகழல் அரவம் சிலம்பொலி யலம்பு
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்தும் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலம் கொழிக்கும்
கோணமா மலையமர்ந் தாரே

[நிரை - வரிசை ; கழல் - ஆடவர் காலணி ; அரவம் - ஒலி ; அலம்பும் - ஒலிக்கும் ; நிமலர் - குற்றமற்றவர் ; வரைகெழுமகள் - மலைமகள் ; குரை - ஒலிக்கின்ற ; ஓதம் - நீர் ; நித்திலம் - முத்து கொழிக்கும் - தெளித்தொதுக்கும்.]

காலில் வரிசையாய் அணிந்து விளங்கும் வீரக்கழலின் ஒலியோடு சிலம்பினின்றும் எழுமொலி கலந்து ஒலிக்கும் படி அணிந்த குற்றமில் குணத்தவர். வெண்ணீறு சண்ணித்த மேனியர். தன் மேனியின் ஒருபாதியில் இமய மலை மகளாம் உமையம்மையாரை உடனாக்கித் தழீஇய தோற்றமுள்ளவர். வெற்றிக்கோர் அறிகுறியாய் உயர்த்தும் கொற்றக் கொடியின்மீது ஏற்றுப்பொறி பொறித்தவர். கரையோரம் பொருந்தி விளங்கும் சந்தனத் துண்டங்களும், கரிய அகிலின் துணிகளும், சொல்லுதற்கரிய பெருமை வாய்ந்த பொன்மணிகளும் உந்தித் தள்ளிக் கொண்டு இரையும் கடல் நீர்தெளித்து ஒதுக்கும் கோண

மலை என்றழைக்கப்படும் பெருமலையிற்றுனே கோயில் கொண்டுள்ளார்.

" நிரைகழல் அரவம் சிலம்பொலி யலம்பு
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் "

வெற்றிச் சின்னமாக ஆடவர் காலில் அணியும் வீரத் தண்டை பல வரிசையாக அணிவது வழக்கம். அவ்வாறு அணிந்த காலணிகளின் ஒலியொருபால்; பெண்கள் வெளிச் செல்லுங்காலத்திலே ஆடவர் கேட்பின் ஓசைவழி ஒரு பெண் வருகின்றுள் என உணர்ந்து ஒதுங்கிக்கொள்ளும்படி முன் அறிக்கை விடுவதுபோல ஒலி எழுப்பும் காலணி சிலம்பின் ஒலி ஒருபால் ஒலிக்கவும் மாசிலாப் பெருமான் தன் செந்நிறத்த மேனியில் எங்கும் வெண்ணிறத்த நீறு சண்ணித்துத் தோன்றுவர். இமயமலை மகள் உமையம்மை ஒருபால் விளங்கத் தன்மேனியில் இடம் இடப்பாகமாகக் கொடுத்துத் தான் இருபால் வடிவாய் "ஆணொடு பெண்ணாய்" அமர்ந்த எம்பெருமானுக விளங்குபவர் என் பதாகும். எனவே, அர்த்தநாரீச்சுரன் அல்லது மாதொரு கூறன் என்றழைக்கப்படுபவர். அன்றியும் மணிவாசகப் பெருமானுல், "பிறர்க்கறிதற்கரிதாம் பெண்மையனே தொன்மை ஆண்மையனே அலிப் பெற்றியனே" எனவும் அழைக்கப்படுவது காணுகின்றோம்.

மேலும், பெண்பால் இடப்பாகத்தில் கொண்டு காட்சி யளிக்கும் கோலத்தின் குறிப்பை நன்கு ஆராய்வோமாயின் அதிலும் ஓர் உண்மை புலனுகும். என்னவென்றுல், பெண்கள் தனித்துவாழும் ஆண்மையில்லாதவர்கள் என் பது பெண்மையுடையவரே பெண் என்று அழைக்கப்படுத லால் அறிகின்றோம். எனவே பெண்மை என்றும் ஆண் மையை அவாவியே நிற்றலை உடையது என்பது தெளி வாம். இவ்வுண்மை புலப்படுத்தும்பொருட்டே பெண் களைக் "கொடியன்னுர்" என்றழைத்தனர். ஆதலால்,

ஒரு கொடியானது வளர்ச்சி நன்குற வேண்டுமானுல் அதற்குப் பற்றுக்கோடு ஒன்று இன்றியமையாது வேண்டப் படுவது தேற்றம். எனவே, கொடிபோன்ற பெண்கள் தங்கள் வளர்ச்சிக்குச் சென்று பற்றும் கொழுகொம்பாய் விளங்குபவர் ஆடவரே என்பதாம். ஆதலால் அன்ருே மணந்த மங்கை ஒருத்தியின் கணவன் அவளுக்குக் கொழுநன் ஆகின்ருன் என்பது வழக்காற்றில் காணு கின்ருேம். வன்தொண்டப் பெருமகனுர் முதல் முறையாகத் திருவாரூர் செல்லுங்கால் சீகாழிப் பதியில் காலடி வைப்ப தற்கும் அஞ்சிப் புறமாகச் சுற்றி வணங்கிவரும்பொழுது இறைவன் காட்சியளித்த முறையினைத் தெய்வச் சேக் கிழார் பெருமகனுர்,

"மங்கையிடங் கொள்ளுமால் விடையானும்
எதிர்காட்சி கொடுத்தருள"

என்று கூறினர். பொருள் கண்டு தெளிதல் நலமாகும்.

"கொடியணி விடையர்
கரைகெழு சந்தும் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலம் கொழிக்கும்
கோணமா மலையமர்ந் தாரே."

எருது வடிவம் விருதிற் பொறித்து விளங்கும் எம் பிரான் கரைவாய்ப் பொருந்திய நிலத்தும் பொருள்களிற் சந்தனக்குறடும் காரகிற்குறடும் சுமந்து ஏற்றி வருவதோ டன்றிக் கடல்படுமணியும், நிலம்படுபொன்னும் சேர உந்தித் தள்ளி ஒதுக்கும் கடலையுடைய கோணமாமலை (திருக்கோணமலை) தனக்குற்றதோர் உறைவிடமாக் கொண்டுறைந்தார் என்பதாம்.

## (2)

கடிதென வந்த கரிதனை உரித்து
அவ்வுரி மேனிமேற் போர்ப்பர்
பிடியன நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுதல் அவளொடும் உடனாய்க்
கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமுன் நித்திலம் சுமந்து
குடிதனை நெருக்கிப் பெருக்கமாய்த் தோன்றும்
கோணமா மலையமர்ந் தாரே.

[கடிது - விரைவு; கொடிது - கொடுமை; கதறும் - வாய் விட்டு அலறும்; நித்திலம் - முத்து; குடி - மக்கள் இனம்.]

கோணமாமலை இறைவனார் விரைந்து வந்து தாக்கக் கருதிய ஒரு யானையைச் சினந்து நோக்கினார்; கையாற் பற்றிப் பிடித்தார். அவ்வளவில், அதன் தோலையே உரித்து விட்டார். என்ன அருஞ்செயல் இது! உரித்ததோடமைய வில்லை. பற்றி உரித்த தோலைத் தாமே தமக்கோர் போர்வையாக் கொள்ளக் கருதினார். கருதியவாறே தம் மேனி மேலே போர்த்துக் கொண்டார். பெண் யானை ஒல்கி ஒல்கி அசைநடை கொள்வது போலவே நடக்கும் நடையினை யுடையவளாய் முன் கையில் அணிந்து விளங்கும் வளையுடைய ஒரு பெண்பால், பிறைபோலும் வளைவுடைய நெற்றி வாய்ந்த அவளோடும், தான் உடனாய், மணவாள மாப்பிள்ளையாய், கொடுமை கொடுமை இதுவென்ன கொடுமை என்று இரைந்து அரற்றும் கடல், சூழ்ந்த நிலத்துக்கரையின் முன்னர், எவரும் எளிதில் கொள்ளும் படியாக முத்துக்களைச் சுமந்து தரக்கொள்ளும் மக்களினத் தவர் எங்கும் நெருங்கிப் பெருக்கமாய் விளங்கித் தோன்றும் திருக்கோணமாமலையில் அமர்ந்து உறைவார்.

“ கடிதென வந்த கரிதனை உரித்து
அவ்வுரி மேனிமேற் போர்ப்பர் ”

[புராணக்கூற்று முன்னர்க் கூறப்பட்டுள்ளது.] இதன் உண்மையை ஆய்வாம். தாருகா வனமுனிவர் தம்

அறியாமையாம் இருள் இறைவனைச் சூழ்ந்தும் இறைவன் அதனிடை நின்று மயக்கமின்றி அறிவு விளக்க முறக்காட்சி யளிக்கும் நிலையினைக் காட்டுவதே இப்புராணக் கருத்தாம். எங்ஙனம் இருளிடைக் கதிரொளி எட்டும்வரை அவ்விருள் அகன்று செல்லுமோ அவ்வாறே அறியாமை மிக்க உயிரிடை இறைவன் நின்று தன் அருள் ஒளியாம் அறிவுச் சுடர் கொண்டு உயிரின் அறியாமையாம் இருள்கெட்டு இரிந்தோடச் செய்கின்றான் என்பதே குறிப்பாம். வரலாற்றுண்மை ஆயுங்கால், வினையால் எவற்றையும் ஆக்கலாம், அழிக்கலாமாயினும் அவற்றின் பயனை வினை செய்தவன் தானே பெறுதல் இயலா என்னும் குறிப்பை உணர்த்தும். எனவே, ஊட்டுவான் ஒருவன் வேண்டும் என்பது புலனும்.

"பிடியன நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுதல் அவளொடும் உடனாய்க்
கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமுன் நித்திலம் சுமந்து
குடிதனை நெருக்கிப் பெருக்கமாய்த் தோன்றும்
கோணமா மலையமர்ந் தாரே."

அறிவுக்கு அறிவாம் இறைவன் அறியாமைச் சூழலில் அமர்ந்து கொள்ளும் காலத்தும் அரிவையொருத்தி உடனாகவே அமர்ந்துள்ளது கண்டு கடலுங்கூட ஈதென்ன கொடுமை என அரற்றிக்கூறியும், அறியாமையாம் இருள் போலும் நிறங்கொண்ட கடலும் தன்பால் விளங்கும் ஒளி விளங்கும் முத்துக்களைக் கரையிடைச் சேர்க்கின்ற செய லும்காணின் " அழுக்கினுள் மாணிக்கத்தொளி " அமைந் துள்ளவாறு புலப்படுத்தியதாகும் என்பது பொருத்த மாகும்.

(3)

பனித்திளம் திங்கள் பைந்தலை நாகம்
படர்சடை முடியிடை வைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாகம்
ஆகமுன் கலந்தவர் மதின்மேல்
தனித்தபேர் உருவ விழித்தழல் நாகம்
தாங்கிய மேருவெஞ் சிலையாக்
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.

[பனித்து - ஈரித்து ; பைந்தலை - பசியதலை ; கனித்து - கனியக்கனிந்து ; துவர் - பவளம் ; காரிகை - பெண் ; முன்கலந் தவர் - பண்டு அன்பர் ; மேரு - மேரு என்னும் மலை ; சிலை - வில் ; குனித்த - வளைத்த.]

ஈரிய ஒரு பிள்ளை மதியும், பசிய தலைவாயப்பெற்ற அரவமும் படர்ந்த தன் சடைமுடியின் இடையே வைத் தவர். தன் மேனியின் ஒரு கூற்றில் கனியக்கனிந்த பவளம் போன்ற இதழ்கள் வாய்ந்த பெண்ணொருத்தியைக் கொண்டவர். பண்டு தன்பால் அன்பு கெழுமிய அடியவர் களின் மதில்கள்மேல் அவை கெடுதலுறும்படியாக ஒப்பற்ற பெருஞ் சீற்றமுடைய கண் பார்வைத் தீக்காலும் அரவம் சுமந்த மேருமலையே கொடிய கொலைத் தொழில் புரியும் வளைந்த வில்லாகக் கையில் கொண்டவர். இரைகடல் சூழ்ந்த கோணமா மலையினிடத்தே கோயில் கொண்டு உறைபவர்.

"பனித்திளம் திங்கள் பைந்தலை நாகம்
படர்சடை முடியிடை வைத்தார்"

திங்கள் தன்பால் நீர் ஊறும் தன்மையதென்பதும், நிறைமதி நாளன்று இராகுக்கோள் என்று அழைக்கப்படும் கருநிறப் பாம்பு நிறைமதியை வந்து பற்றுமென்பதும் உய்த்துணரும்படி வளரும் தகவுடைய இளமதி, பாம்பு

உடலுகப் படர் சடைமுடியிடை வைத்தார். அன்றியும், இளம்பிள்ளை மதியின் வெள்ளைக் குணம் இது எனத் தெரிவித்தலுமாம். நஞ்சுடைப் பாம்பையும் அஞ்சாது கைப்பற்றும் பிள்ளை மதியே பிள்ளை மதியல்லவா ? ஓடும் பாம்பை நாடிப் பிடிக்கும் வயது என்று சொல்லக் கேட்கின்றதுவே சான்றாகும் என்பதில் ஐயம் என்ன ? அல்லாமலும், இளமதியும் வளர்ந்து நிறைமதியாங் காலத்திலே தன் நிழலாம் இராகு எனப்படும் கரும்பாம்பால் வவ்வப்படும் என்றதோர் உண்மைக்கிணங்கவே எதிர் காலத்து வாழ்வு அச்சம் உடைத்தேயாயினும் அதனை அறியாமையால் ஓராது விளையாட்டு வாழ்வு விரும்புவோர் பெரியோராயினும் வெள்ளைமதி படைத்த பிள்ளை மதியுடையோரே அன்றிப் பிறிதென் கூறுவது என்னும் பெரு வழக்காற்றினை நமக்குக் கற்பிப்பதுமாகும். மேலும் பகையிடை நட்பும், இருக்கும் இடத்தில் இருப்பின் உண்டாம் என்பதைப் புலப்படுத்தியதுமாகும்.

> " கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாகம்
> ஆக "

இளமதியும் பாம்பும் சடைமுடியிடை வைத்த அவனே கனியக்கனியும் பவளவாய்ப் பெண்ணுள் ஒருத்தியைத் தன் ஒரு கூறுகக்கொண்டு விளங்குகின்றுன். நோக்குங்கால், செயலும் குணமும் உருவமும் வாய்ந்த பெருமை விளம்பவும் படுமோ என்பதாகும். எனவே, பிறர் அறிவுக்கு அளவுபடா அற்புதமாகவன்றே காணப்படுகின்றது என்பதே தேற்றம்.

> " முன் கலந்தவர் "

இதுபோது உறவற்றவர் என்பதன் குறிப்பே இது. எனவே, பண்டு தன்பால் அன்போடிருந்த அத்திரிபுர மக்கள் இன்று நிலை திரிந்து அன்பற்றுர் ஆயினர் என்பதாம்.

" மதின்மேல்
தனித்தபேர் உருவ விழித்தழல் நாகம்
தாங்கிய மேருவெஞ் சிலையாக்
குனித்ததோர் வில்லார் "

முப்புரங்களையும் கேடுறும்படி யாக்க ஊக்கத்தோடு சீற்ற நோக்கமும் பேருருவமும் வாயப் பெற்றுச் சீறி விழிக்கும் அரவேசுமந்து கொண்டிருக்கும் மேருமலையைச் சிலையாக வளைத்தவர் என்பதாம். மேருமலை என்பது நிலநடு வரையைக் குறிப்பதாகும். புராணகாரர் இம்மேருமலை கடலின் வெள்ளப் பெருக்கால் மூடப்பட்டுள்ளது என்பார்.

" குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே "

இங்ஙனம், அரவும் பிள்ளை மதியும் உடனுகை உறையும்படி தன் சடைமுடி மிசை அமர்த்தியும், பெண்ணொரு கூருயமரத் தன்மேனியை அளித்தும் காட்சியளிக்கும் எல்லாம்வல்ல அளவுப்படா அற்புதப் பொருளாய் விளங்கும் ஒருவனும் இறைவன், முன்பே தன்பால் பற்று உடையராயிருந்து தன் பேரருளும் கிடைக்கப் பெற்று இது போழ்து தன்னை மறந்து மதியாதிருக்கும் முப்புர வாசிகளை நல்அறிவுச் சுடர் கொளுத்தித் தன்பால் அன்பு முன்னையிலும் சிறக்கச் செய்ய விரும்பினுன் என்பதும், விரும்பியவாறே அவர் அஞ்சும்படி முப்புரக் கோட்டைகளைக் கேடுறச் செய்தல் காரணமாக நிலைநடு வரையாம் மேரு மலையைச் சிலையா வளைத்தவன் என்பதும் புலப்படுத்தியவாறே அவன் விரும்பிக் கோயில் கொண்டுள்ள இடம் ஒலிகடல் சூழ்ந்த கோணமாமலை என்று பொருந்த உரைத்ததாகும். எனவே மலையைச் சிலையா வளைத்த அருஞ்செயலாளன் தங்கி உறைவதும் வளைவாயமைந்து விளங்கும் மலையேயன்றிப் பிறிதில்லை எனக் கொள்ளுதலும் பொருந்தும்.

## (4)

பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன் தேவி வேண்டமுன் கொடுத்த
விமலனார் கமலமார் பாதர்
தெழித்துமுன் அரற்றுஞ் செழுங்கடற் றரளம்
செம்பொனும் இப்பியுஞ் சுமந்து
கொழித்துவன் திரைகள் கரையிடைச் சேர்க்கும்
கோணமா மலையமர்ந் தாரே.

[பழித்து - இங்கே பழிச்சு என்னும் பொருள்பட நின்றது: ஆதலால், பழிச்சு - போற்று எனக் கொள்க; மதனன் - மன்மதன்; பொடி - நீறு; தேவி - மனைவி; தெழித்து - பேரிரைச்சலிட்டு; அரற்றுதல் - ஓலமிடுதல்; தரளம் - முத்து; கொழித்து - தெளித்து வன் திரைகள் - வலிய அலைகள்; பாங்கு - அழகு.]

இளமை வாய்ந்த கங்கை என்னும் பெண்ணொருத்தியைத் தன் சடையின் இடை அமர்த்திக் கொண்டார். அழகுடை மதனனை நீறும்படி தன் நெற்றிக் கண்ணினாலே சினந்து நோக்கினார். பின் அவன் மனைவி இரதி என்பவள் வேண்ட வல்விரைந்து அவள் கணவனுக்கு மீண்டும் உடல் கொடுத்து உதவினார்; பற்றற்றவர்; தாமரை போன்ற திருவடி உடையவர். மிக்கிரைந்து விரைந்து ஓலமிட்டு அலறும் செழிய கடலானது தன் அகத்தேயுள்ள முத்துக்களையும், செம்பொன்னையும், இப்பியையும் அக் கடல் அலை பலவாய்ச் சுமந்து தெளித்துக் கரைமிசை ஒதுக்கும் கோணமாமலை மிசைக்கோயில் கொண்டுள்ளார்.

"பழித்திளங் கங்கை சடையிடை வைத்து"

வானத்தினின்றும் நிலமிசை இழியும் புதுப்புனலாகிய கங்கையைத் தன் சடைமிசைத் தாங்கி நிலமிசை விடுத்த ஒரு வரலாற்றினைக் குறிக்கும். சோழ மரபில் ஒருவன் பகீரதன் எனப் பெயர் வாய்ந்து அரசு செலுத்தினான். அவன் முன்னோர், கண்ணுவ முனிவன் கடுஞ் சொல்லுக்

காளாகி மாண்டொழிந்தனர். அவர் தம்மை நினைந்து அவர் உய்யும் பொருட்டுப் பலகாலம் தவம் இயற்றிய பின் கங்கை வரவு கிடைக்கப் பெற்றான். புதுப்புனல் வரவைப் பூமி பொறுது நிலை கலங்கு மென்றஞ்சி இறைவனை நோக்கிப் பணிந்து கங்கை கடுகி வரும்பொழுது, நிலம் பிறழ்ச்சி யுறாதவாறு காக்க வேண்டுமெனக் குறையிரந் தான். எல்லாம்வல்ல இறைவனும், அவன்பால் இரங்கிக் கங்கையைத் தன் சடையிடைத் தாங்கி உதவினான் என்று கூறும் புராண வரலாறுகள். ஒன்றினொன்று புராணக் கூற்று முரண்படினும், கங்கையின் மைந்தனும் காங்கே யன் எனப்படும் முருகவேளின் தந்தையும் கங்கைக் குலத் தவரே என்னும் குறிப்புத் தோன்றவே இளங் கங்கையைப் போற்றிச் சடையிடை வைத்தான் இறைவன் என்பதே பொருந்துதல் காண்க.

"பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன் தேவி வேண்டமுன் கொடுத்த
விமலனார் கமலமார் பாதர்"

இங்கு குறிப்பது மாரனை எரித்து மீட்டும் அவன் தேவி வேண்டக் கொடுத்த வரலாறாகும். உமையம்மை திருமணம் அமையாமை கண்ட தேவ நாட்டரசனும், மால யன் முதலியோரும் ஒருங்கு கூடித் தங்களில் உசாவினர். இறைவன் தனித்துத் தவக்கோலம் கொண்டு யோகம் புரி கின்ற செயலை அறவே மாற்றின் திருமணம் நடைபெறு மெனக் கண்டனர். மால் மகனாம மன்மதனை அழைத்துச் சிவன் பால் காமவேட்கை எழும்படி செய்யத் தூண்டினர். மாரனும் சென்றான்; முயன்றான். இறுதியில் பற்றற்ற வனும் பரமன் புலனொடுக்கத்தால் வேட்கை எழாது இடை யூறு கழியச் சினங்கொண்டு ஞானக் கண்ணும் நெற்றிக் கண்ணால் ஏறிட்டு நோக்கினர். ஞானத்தின் முன் புலனுகர் பொருள்கள் நிற்குமோ? நிற்கமாட்டா. அவ்வளவில் மதனன் எரிந்து சடலம் மறைந்தான். இதை அறிந்த மனைவி இரதி என்பவள் அவனுடன் உறைபவள் ஆதலால்

இறைவனை வேண்டிக் குறையிரந்து நின்றாள். குறை நிறையப் பண்ணினான் எம்கோமான் எனவே புராணம் யாவும் கூறும். ஆயினும், ஐம்புலன்கட்கும் சுவை தரும் பொருளாய் விளங்கும் இறைவன் மாறுபடும் சுவைப் பொருள் வேறுபடவே ஞானத்தால் அப்பொருள்களைச் சுட்டி நோக்கி நீருக்கினான் என்பதே பொருந்தும் எனக் கொள்ளுதலே மரபாம். திருவள்ளுவப் பெருந்தகையும்,

> " உரன்என்னும் தோட்டியால் ஓரைந்தும் காப்பான்
> வரன்என்னும் வைப்புக்கோர் வித்து "

என்று கூறியதோடு,

" தூஉய்மை என்பது அவா இன்மை " என்றும் சொல்லியுள்ளது நோக்கித் தெளிதல் சாலும்.

> " தெழித்துமுன் அரற்றுஞ் செழுங்கடற் றரளம்
> செம்பொனும் இப்பியுஞ் சுமந்து
> கொழித்துவன் திரைகள் கரையிடைச் சேர்க்கும்
> கோணமா மலையமர்ந் தாரே."

அலைகடலும் தன்னகத்தே கொண்டுள்ள முத்து, செம் பொன், இப்பி இவற்றினைத் தன்கை போலும் உதவும் பேரலைகளால் வல்விரைந்து இரைந்து கூவி, கரையிடைத் தெளித்து ஒதுக்கி உதவும். அவ்வாறே இறைவனும் உயிர் கட்கெல்லாம் ஒளிவள அறிவுஞ் செல்வமும் ஒருங்கே உதவ விரும்பியே ஈழத்தின் கண் உள்ள கோணமாமலை மிசைக் கோயில் கொண்டுள்ளார் என்பதாகும்.

CONNEMARA PUBLIC LIBRARY
6 FEB1955
MADRAS

(5)

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.

[தலைவர் - மேலானவர்; மருவி - பொருந்தி; மாண்பு - உயர்ச்சி; பலவேடர் - பல்வேறு வடிவம் கொண்டவர்; பிணியுந் தொழிலர் - கட்டுப்படுபவர்; பால் - வேற்றுமை; நூலினர் - ஒழுக்க முடையர்; ஞாலம் - நிலம்; சுனை - ஊற்று.]

தாயைக் காட்டிலும் நல்லன்புடைய பெரியர் என்று அவர்தம் அடியார் பலரும் போற்றி எடுத்து இசைப் பார்கள். அவரோ அடியவர் வாயினும், மனத்தினும் பொருந்தி நீங்காது உறையும் பெருமை உடையவர். பலவேறு வடிவில் காணப்படுவார். அடியவர் நோய் வந்துற்ற காலத்தும் தான் அவரை விட்டு அகலாது உடன் உறைந்து நுகரும் தன்மையாம் செய்கை உடைய வர். வேற்றுமை கருதாது எவரிடத்தும் உள்ளத்துச் சென்று உறைதரும் ஒழுக்கம் படைத்தவர். நிலமும், கோயிலும், நீர் ஊற்றும், கடலுடன் சார்ந்து சூழ்ந்து விளங்கும் கோணமா மலையினைக் கோயிலாகக் கொண்டு உறைந்துள்ளார்.

" தாயினும் நல்ல தலைவர் "

இது அன்புடைமை நோக்கியது. என்னவென்றால், திருமூலப் பெருந்தகையார் கூறும் சிவாகம உண்மை விளக் கும் தமிழ்த் திருமந்திரத்துள் " அன்பும் சிவமும் இரண் டென்பர் அறிவிலார் " என்றும், " அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின் அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே "

என்றும் விளக்கி உரைத்தமையால் அன்பினைச் சுட்டி நின்றது எனக் கொள்ளுதல் பொருத்தமாகும். இவ்வரிய உண்மையினை மணிவாசகப் பெருந்தகையும், "பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து நீ", என்று அழைத்துச் சுட்டியுள்ளதும் கண்டு தெளியலாம். எனவே அருள் வேறு, அன்பு வேறு என்பது தெளிவே. ஆயினும், அருள் வழி அன்பு காணப்படுதலும், அன்பு இன்றேல் அருளும் இல்லை என்பது தெளியப்படுதலும் உலக வழக்கில் காணுகின்றோம். ஆதலால், அருளும் அன்பும் பொருள் வேற்றுமை உடையதாயினும் ஒன்றுடன் ஒன்று விட்டு நீங்கா இயல்பு உடையது எனத் தெளியக் கிடக்கின்றது. அன்றியும்,

> "ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
> சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே"

என வரும் புறநானூற்றுச் செய்யுளும் நோக்கற்பாலது. ஆதலால், உயிர் ஓம்பும் பொருட்டு உடல் ஓம்புவாள் தாய் என்பதும், உயிர்க் குறுதி அளிக்கும் முகத்தால் உயிர் ஓம்புவான் தந்தையே என்பதும் புலனாகின்றதல்லவா? ஆனதால் அன்றோ "தாயினும் நல்ல தலைவர்" என்று உரைத்தது.

> "தலைவரென் றடியார்
> தம்மடி போற்றிசைப் பார்கள்
> வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
> மாண்பினர் காண்"

உயிர்க்கு உறுதி தருபவனே தலைவனாதலால் அத்தலைவனைத் தலைவன் என்று கொண்டு அத்தலைவன் திருவடியினை வாழ்த்திப் போற்றுதலைச் செய்பவர் யாவராயினும் அவர் தம் வாக்கிலும், மனத்திலும் பொருந்தி நிற்கும் நிலையேயன்றி விட்டு நீங்காப் பெருமை உடையவர் என்பதாகும். எனவே, அவ்வாறு தலைவன் எனக் கொண்டு போற்றாதார் உள்ளத்தும் வேற்றுமை கருதாதேபுக்கு நிற்பி

னும் அவர்கட்குத் தோற்றப்படார் என்னும் உண்மை புல னுக்கியதாம்.

"பல வேடர்"

பல்வேறு உயிர்தொறும் உள்ளத்தே புக்குநிற்றலை யுணர்த்தியதாகும் எனக் கொள்ளுதல் பொருத்தமாகும்.

"நோயிலும் பிணியும் தொழிலர்"

நோயில்லாரேயன்றி நோயுற்ருர் உள்ளத்தும் விளங்கு பவன்.

"தொழுநோயராய் ஆஉரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்" எனக் கூறிய அப்பர் அடிகள் வாக்கும் நோக்குக.

"பால் நீக்கி நுழைதரும் நூலினர்"

வேற்றுமையிலாதே வேறுபடும் உயிர்தொறும் புக்கு அருள்புரி செயல் உடையான் இறைவன் என்பதே தேற்ற மாகும்.

"ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே"

இத்தகையதோர் ஒப்பற்ற பெருந் தலைவர் தானே நிலமும் கோயிலும், நீர் ஊற்றும் கடலுடன் சார்ந்து சூழ்ந்து விளங்கும் கோணமா மலையிற் கோயில் கொண் டுள்ளார் என்பதாகுமாம்.

(6)

பரிந்துநன் மனத்தால் வழிபடு மாணி
தன்உயிர் மேல்வருங் கூற்றைத்
திரிந்திடா வண்ணம் உதைத்தவர்க் கருளும்
செம்மையார் நம்மையா ளுடையார்
விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்திசெண் பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமா மலையமர்ந் தாரே.

[பரிந்து - அன்பொடு ; நன்மனம் - மாசறு மனம் ; மாணி - மாணவகன், இங்கே மார்க்கண்டேயன் என்னும் மணமாகா மாணவச் சிறுவன் என்பவனைக் குறிப்பதாகும் ; கூற்று- காலக்கடவுள் ; திரிந்திடா - மாறுபடா ; செம்மையார் - செப்பம் உடையார் ; பொழில் - சோலை.]

அன்போடு மாசறு மனத்தனாய்த் தன்னை வழிபாடியற்றும் (மார்க்கண்டேயன்) மணமாகா மாணவச் சிறுவன் ஒருவன் தன் உயிரைக் கொண்டு செல்ல வரும் (வந்த) காலக் கடவுளாம் கூற்றுவனை அவன் மாறுகொள்ளாத வாறு தன் காலால் உதைத்துத் தள்ளி அம்மாணவகனுக்கு நீடியகால ஆயுள் கொடுத்து அருளும் (அருளிய) செப்பம் உடையவரே நம்மை அடிமையாகக் கொண்டு ஆளுந் திறலுடையார் எனப்படுவர். அவர் தான் ஓங்கி உயர்ந்து விளங்கும் காட்டு முல்லை, குருக்கத்தி, புன்னை, வேங்கை, வளப்படு செருந்தி, செண்பகம், குருந்து இவற்றோடு முல்லையும் கொடிவிட்டு வளரும் சோலை சூழ்ந்த கோணமா மலையிடைக் கோயில் கொண்டு உறைகின்றார்.

" பரிந்துநன் மனத்தால் வழிபடு மாணி
தன்உயிர் மேல்வரும் கூற்றைத்
திரிந்திடா வண்ணம் உதைத்தவர்க் கருளும்
செம்மையார் "

மார்க்கண்டேயன் எனப்படும் பதினாறு அகவை நிறை மாணவகனும் மணமாகா அந்தணச் சிறுவன் காலக்

கோட்படாது பிழைத்த வரலாற்றினை விளக்குவதாகும். மார்க்கண்டேயன் வரலாறு அறியாதார் சைவமக்களில் சிலரேனும் இரார் என்பது உண்மையே. என்றாலும், அவ்வரலாற்றின்வழி அறியவேண்டிய சிலபல உண்மைகள் உள என்பதை நாம் மறத்தலாகாது. உயிர்கள் பலவும் மீட்டும் தோற்றமுறுதல் ஊழின்பயனை நுகரும்பொருட்டேயாதல் ஆன்றோர்பலரும் ஆய்ந்துகண்டதோர் பேருண்மையாகும். உயிரினம் வினைவழி உடல்வேற்றுமைகொள்ளும். ஆயின், உயிரானது தன் முன்னைவினையின்பயனை நுகரும்பொருட்டுத் தாங்கும் உடல், வினைவிளைவு நுகரும் கால அளவே விளங்கித் தோன்றுவதாகும். ஆகவே, வினைப்பயன் நுகரும் காலஅளவே விளங்கித்தோன்றும் இவ்வுடல் வினைவிளைவின் காலத்தை எதிர்நோக்கியவண்ணமாய்த் திகழ்ந்து பின் வினையின்பயனை நுகர்ந்த அவ்வளவில் எஞ்சிய வினையின் விளைவும், இவ்வுடல் எடுத்து விளங்கும் காலஎல்லைக்குள் செய்யும் மேல்வினைவிளைவும் ஒருங்கே நுகர விரும்பும் உயிரின்பிரிவால் உடலம் வேற்றுவடிவமாகின்றது. ஆகிப்பின் அவ்வுடல் வழிவினை விளைவை அவ்வுயிர்தானும் தோன்றாத்துணையாய் உடனின்று இயக்கும் "இயவுள்" என்று அறிஞர் பலராலும் அழைக்கப்படும் எல்லாம்வல்ல இறைவன் இன்னருளால் நுகர்கின்றது எனச் சைவசித்தாந்த சாத்திரங்கள் கூறும்.

> "அவரவர் வினையின் அவரவர் வருவார்
> அவரவர் வினையள வுக்கே"

என்ற பொன்மொழியும் போற்றத்தக்கதேயாகுமன்றோ?

எனவே, வினையின் விளைவுதான் காலப்போக்கில் நிகழ்வதொன்றாகும். அக்காலந்தானும் ஒருமுகமாய்ச் செல்லும் இயல்புடையதாகும்; திரிந்துபின் முகமாய்ச் செல்லும் இயல்பில்லாததும் ஆகும் என்பது புலனும். இவ்வரிய பெரிய உண்மையினையே இக்காலத்து உலகப் புகழ் பெற்று விளங்கும் பேராசிரியர் அல்பேட்டு ஈன்ஸ்டீன் என்னும் பெரியோர் நமக்கு விளங்க எடுத்துரைத்துக் காட்டி

ஞர் என்றால் காலத்தின் பெருமை நம்மால் எளிதில் அள விடலாகுமோ ?

ஆதலாலே, பொருளதன் இயக்கத்தால் உடன்தோன் றும் காலம்தானும் அப்பொருளின் இயக்க ஒடுக்கத்துக் கேற்றவாறே நிகழும் என்பதன் உண்மை நம்முன்னோர் அறிந்து ஆற்றுவன ஆற்றும்வழி உதவியாகத் திருஞான சம்பந்தப் பெருமானார் காலத்தோற்றமும் நீட்சியும் ஒடுக்க மும் விளங்கச்செய்யும் செப்பம்வாய்ந்த நம் இறைவன் தன்னை வழிபாடியற்றிய மாணிக்கு இரங்கி அவனுயிர்வவ்வு தற்கு வந்த காலக்கோளினை மாறுகொண்டியங்காவண்ணம் காலால் உதைத்து மாணிஎன்னும் அந்தணச் சிறுவனைக் காத்த செம்மையார் என்றோதினர்போலும் எனக்கொள்ளு தல் பொருந்தும்.

" நம்மையா ளுடையார்
விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்திசெண் பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமா மலையமர்ந் தாரே "

அத்தகைச் செய்கை உடையார் நம்மை ஆளாக உடை யார். அவர்தான் பரந்துயர்ந்தோங்கும் மௌவல், மாதவி, புன்னை, வேங்கை, வளப்படுசெருந்தி, செண்பகம், குருந்து இவற்றோடு முல்லைகொடிவிட்டு உயரும் சோலைசூழ்ந்த கோணமாமலை அமர்ந்துறைவார் என்பதாம்.

[ஏழாவது பாட்டு மறைந்துவிட்டது.]

(8)

எடுத்தவன் தருக்கை இழித்தவர் விரலால்
ஏத்திட ஆத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வம் தோன்றிய பிறப்பும்
இறப்பறி யாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்அருட் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும்புக ழாளர்
கோணமா மலையமர்ந் தாரே.

[தருக்கு - தற்புகழ் ; இழித்தவர் - தாழச்செய்தவர் ; ஆத்தம் - ஆப்தம், கேண்மை ; வனப்பு - மிகுதி ; கருணை - பேரிரக்கம்.]

தன் உறைவிடமாம் கைலாயமலையினை (தற்புகழ்ச்சி யால்) உடல்வலிகொண்டு பெயர்த்து எடுத்த ஒருவனை அவன் புகழ்தாழும்படி வலிகெடத்தன் கால்விரலால் அடர்த் தவர். அவன் வலியிழந்து அரற்றிப் பின்னர் தம்மைப் புகழ்ந்து பாடக் கண்டும் கேட்டும் உளமகிழ்ந்து அவனுக்கு இரங்கித் தம்கேண்மை அவன்பாலுறச் செய்தவர். செல்வ மாகவே விளங்குபவர். தோன்றும் பிறப்பும் பின் உண்டாம் இறப்பும் தான் அறியாதவர். தக்கனுர்செய்த வேள்வியைத் தடுத்தவர். மிகுதியும் விளங்கும் தன்கழிபேரிரக்கத்திறுல் தன் அருளால் உண்டாம் பெருமையும், வாழ்வும் கொடுத்த வர். ஏவரும் விரும்புதலைச்செய்யும் அத்தகைய பெரும் புகழாளர். கோணமாமலைமிசைக்கோயில் கொண்டுள்ளார்.

" எடுத்தவன் தருக்கை இழித்தவர் விரலால் "

இலங்கை வேந்தன் இராவணன் கைலைமலையைப் பெயர்த்த வரலாறு முன்னர் சொல்லப்பட்டுள்ளது.

" ஏத்திட ஆத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வம் "

தன்னை மறவாதே எக்காலும் புகழ்ந்தேத்தும் பண்பு உடையார்மாட்டு இரங்கி அவர்பால் தன்கேண்மை மிகச் செய்து, அவர்தம் செல்வமாகவே எம்பெருமானுர் விளங்

கும் உண்மைநிலை விளக்குவதாகும். இப்பொருள் இராவணனுக்கும் பொருத்தமாதல் காண்க.

" தோன்றிய பிறப்பும்
இறப்பறி யாதவர் "

உடலொடு தோன்றும் உயிர்த்தொகுதிபோலத் தனக்கோர் உடற்றோற்றமும், சின்னாள் விளங்கிப்பின் அவ்வுடல்விட்டுச் செல்லும் இறப்புந்தாம் அறியாதவர். இதனால், இறைவன் நிமலன் என்பது தெளியப்படும். ஆதலால், எவ்வுருவும் தற்சார்பில்தோன்றி விளங்கத் தாம் தோன்றாத் துணையாக்கலந்து விளங்கும் தகைமையுடையாரே எல்லாம்வல்ல இறைவன் என்றழைக்கப்பெறும் பேருண்மையும் புலனாதல் தெளிவாம்.

" வேள்வி தடுத்தவர் "

சிறுவிதி எனப்படும் தக்கன் தன் அகச்செருக்கினாலே இறைவனுக்குச் செய்யும் வேள்வியைத்தான் விலக்கியும், அவ்வேள்வி முடிப்பான் விழைந்த அவன் வேள்வித் தலைவன் நாரணனே எனக்கொண்டு அவனுக்குத் தலைமையுந் தந்தான். வேள்வி தொடங்கினான். இதை அறிந்த சிவபெருமான் தக்கனது செருக்கு அடங்கும்படி வீரபத்திரக் கடவுளைத் தூண்டி அவ்வேள்வி தலைக்கூடாவாறு தடுத்தருளிய வரலாற்றுண்மை கூறுவதாகும். இதனால், தலைவன் ஒருவனையின்றித் தனி உலகம் வாழாது என்னும் குறிப்புணர்த்துதலேயாகும் அன்றோ ? அன்றியும் தலைவன் இல்லாத்தானையும் மயங்கும் என்றதோர் உண்மைக் கூற்றும் புலப்படுத்தியதாகும்.

" மலர்மகனாகி மூன்று வையமும் படைத்து மாலா
யலைவற நிறுத்தி முக்கணாதியாயழித் தம் மூவர்
தலைவனாய்ப் பரமாகாச சரீரியாய் முதலீறின்றித்
தொலைவருஞ் சோதியாமிச் சுந்தரவி லிங்கந்தன்னில் "

என்று திருவிளையாடற் புராணகாரர் கூறுவதும் நோக்கித் தெளிக.

" வனப்பால் வைத்தோர் கருணை
தன்அருட் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் "

மிகுதியும் விளங்கும் பெருங்கருணைத் திறத்தவன் ஈசன். ஆதலாலே தன்னை அடைந்தோர்க்குத் தன் அருளால் பெருமையும், வாழ்வும் சேரத்தந்தவர் என்பதாம்.

" விரும்பும் பெரும்புக ழாளர்
கோணமா மலையமர்ந் தாரே "

எப்பாலவரும் யாவரேயாயினும் தன்னை விரும்புதற்குரிய பெரும் புகழுடையார் என்பதும், அவரே கோணமா மலையிடைக் கோயில் கொண்டுள்ளார் என்பதுமாகும்.

(9)

அருவரா தொருகை வெண்டலை யேந்தி
யகந்தொறும் பலியுடன் புக்க
பெருவரா யுறையும் நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவரும் அறியா வண்ணம்ஒள் எரியாய்
உயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்கும்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோணமா மலையமர்ந் தாரே.

[அருவராது - வெறுத்து ஒதுக்காது; வெண்டலை - நிணங்கொள் என்புத்தலை; அகம் - இல்லம்; பலி - உணவு; பெருவராய்- பெருமையுடையோராய்; நீர்மையர் - ஒழுக்கத்தன்மையர்; சீர்மை- புகழ்மை; பெருங்கடல் வண்ணன் - நீலநிறமேனியுடைய திருமால்; எரி - தீ; ஒள் - விளக்கம்; மாற்கும் - மாலுக்கும்; குருவராய் - ஆசானாய்; குரைகழல் - ஒலிக்கும்கழல் தாக்கிய திருவடி.]

உள்ள வெறுப்பின்றி நிணங்கொள் என்புத்தலை ஒன்றைக் கையில் ஏந்தியவராய் இல்லம் தோறும் இடும் உணவுடன் புகுந்த பெருமையுடையவராய் உறையும் தன்மை வாய்ந்தவர். புகழ் மிக்க பெருங்கடல் நிறத்த மேனிவாய்ந்த திருமாலும் பிரமனும் அறியக் கூடாவாறு விளக்கமுறும் தீப்பிழம்பாய்த் தோன்றி உயர்ந்தவர். அவ்வொளி கண்டு விலகிய கரிய திருமாலுக்கும் ஆசானாக விளங்கியவர். ஈண்டி நின்றார் யாவரும் தன் ஒலிசெய் வீரக்கழல் புனை திருவடி வணங்கும் பொருட்டே கோணமா மலைமிசைக் கோயில் கொண்டுள்ளார்.

"அருவரா தொருகை வெண்டலை யேந்தி
யகந்தொறும் பலியுடன் புக்க
பெருவரா யுறையும் நீர்மையர்"

இறைவன் அயன்தனை ஐந்தில் ஒன்றை அறுத்தெடுத்து நிணங்கொள் அத்தலைஓட்டைத் தன்கையில் அருவருத்தல் செய்யாது ஏந்தித் தாருகாவனத்து முனிவர்

தம் இல்லந்தொறும் சென்று உணவிரந்துவந்த வரலாற்றை நினைப்பூட்டுவதாகும்.

ஒருகாலத்து அயன் தனக்கும் ஐம்முகச் சிவனூர் போன்று ஐந்தலையுடைமை நோக்கித் தருக்குற்றான். தன்னிலும் பெரியோர் எவரும் இலர் என்று அகச்செருக்கு மீக்கூரவே அதுகண்ட ஐம்முகச்சிவனூர் வயிரவக் கோலங் கொண்டு சென்று அயனைக் கண்டு வினவி, அப்பிரமன் செருக்கறப் பொருக்கென அவன் தலையில் ஒன்றும் அகந்தைகொள் தலையைத் தன்கூரிய உகிரால் அறுத்து வேறுபடுத்தி, அதனையே உண்பலிக் கலனாய் ஆக்கிக் கொண்டார் என்பது புராணவரலாறு.

" வருபடை வேகக்காற்றினின் முரியவிரைந்து
செல்வயிரவப் புத்தேள்
திருமலர்க் குரிசில் பழித்திடும் அஞ்சாம் சிரத்தினை
யுகிரினுற் கொய்தான்
பெருவிறலுயிர்போய் விழுந்தபின் மீளப் பிஞ்ஞகன்
அருளினுல் உய்ந்து
மருள்வலி நீங்கி எழுந்தனன் மறையோன் வள்ளலை
வணங்கி நின்றேத்தும் "

என்றுகூறும் காஞ்சிப்புராணச் செய்யுள்சான்றுதல் காண்க. எனவே, அகந்தைக் கிழங்கை ஆணிவேர் அறக்களைந்த அருமை பெருமை கூறியதாகின்றது. நான்மறை யோதும் ஒருவன் ஐம்முகமாகவும் ஐந்து முனிவர்க்கு ஆகமம் இருபத்தெட்டு எடுத்தோதிய ஒருவனுக்கு ஈடும் இணையும் ஆகான் என்னும் உண்மையும் புலப்படுத்தப் பெற்றுள்ளது காண்க.

" பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவரும் அறியா வண்ணம்ஒள் எரியாய்
உயர்ந்தவர். "

தம்முள் பெரியோன் யாரெனத் தலைதடுமாறி உரை செய்து போர் மிகுத்த திருமாலும் அவன் மகனும் அயனும் கண்டு அஞ்சிக் கதிகலங்கி மயங்கி நிற்கும்படி எல்லாம்

வல்ல சிவபெருமான் தானேர் விளக்கமுறு தீப்பிழம்பாய்த் தோன்றி இடைநின்ற காட்சி உணர்த்துவதே இஃது. இவ்வரலாற்றுண்மை அடிமுடிகாண் காட்சியிற் காண லாகும். உண்மை ஆராய்வோமாயின் போகமுறையில் இடைகலை, பிங்கலை இரண்டும் அடங்கிப் பின் உயர்ந் தோங்கும் சுழுமுனை நாடி எழுச்சியேயாவது தேற்றமாம். அன்றியும், உயிராகிய மாலவனோடு விட்டு நீங்காதும் நீங்கி வேரும் பொருளாம் மனம் எனப்படும் அயன் எனும் இவ்விருவர்க்கும் அப்பால் நின்று ஆட்டும் ஒருவனே ஒளிப் பிழம்பாயுள்ளான் என்பதுமாம்.

"நன் மாற்கும்
குருவராய் நின்ருர்"

திருமால் மாணவனுகச் சிவன் ஆசானுய் இருந்து அறிவுச்சுடர் கொளுத்திய வரலாற்றுத் தொடர்பு காட்டு தலாம்.

"குரைகழல் வணங்கக்
கோணமா மலையமர்ந் தாரே"

மாலவனேடு ஏனையோரும் என்றபடி அங்கு வந்தீண்டி நின்ருர் யாவரும் ஒருங்கேதனுது ஒலிசெய் வீரக்கழல் வீக்கி வீறுகொள் திருவடியிணை வணங்குதற்கு எளிதாய் மன முவந்து வந்து கோணமா மலையினைக் கோயிலாக் கொண்டார்.

(10)

நின்றுணுஞ் சமணும் இருந்துணும் தேரும்
நெறியலா தனபுறங் கூற
வென்றுநஞ் சுண்ணும் பரிசினர் ஒருபால்
மெல்லிய லொடுமுட னாகித்
துன்றுமொண் பெளவம் மவ்வலுஞ் சூழ்ந்து
தாழ்ந்துறு துறைபல மோதிக்
குன்றுமொண் கானல் வாசம்வந் துலவும்
கோணமா மலையமர்ந் தாரே.

[சமண் - சமணர்; தேரும் - தேரர் எனப்படும் புத்தரும்; நெறியலாதன - ஒழுக்கமில்லாதன; பரிசினர் - தன்மையார்; மெல்லியல் - பெண்டிர்; துன்றும் - நெருங்கும்; பெளவம் - கடல்; மவ்வல் - காட்டுமுல்லை; கானல் - கழி.]

நிலத்தின்மீது அமர்ந்துறையாது நின்றுகொண்டே உணவு கொள்ளும் சமண் சமயத்தவரும், சமணரைப் போலாது நிலமிசை இருந்துண்ணும் புத்தரில் ஒருவகைத் தேரர் என்றழைக்கப்படும் புத்த சமயத்தவரும் ஒழுக்கம் இல்லாதனகூறக் கேட்டு அவர் உள்ளம் பொருந்த அல்லதை எடுத்து விளக்கி உள்ளதை ஒப்பக்கூறி வாதில் வென்றவர். உண்டார்க்குச் சாவிளைக்கும் நஞ்சினைத்தான் மகிழ்ச்சி யோடும் உண்ட பெருந்தன்மையுடையவர். தன் மேனியில் ஒருகூறு பெண்ணுருத் தாங்கி விளங்குபவர். தோன்றும் கடலும், காட்டுமுல்லையும் சூழ்ந்து தாழ்ந்து விளங்கும் துறைகள் பலவுஞ் சென்று மோதிக்கொண்டு குன்றிடையும், கானற் கழியிடையும் மணம் பரப்பும் கோணமா மலை யினைத் தன் உறைவிடமாக் கொண்டுள்ளார்.

“ நின்றுணும் சமணும் ”

சமணசமயத்தவர் தாங்கள் கொல்லா விரதியர் எனக் கூறிப் பிறர் கொன்றுதரும் ஊனை உண்பவர் என்பதும்,

பிறர் கொன்றுதரும் அவ்வூனையும் உணவோடு உட்கொள்ளுங் காலத்தும், இருந்துண்டால் சிற்றுயிர்கள் தேய்ந்து மாண்டொழியுமே என்று அஞ்சியோராய் நில மிசை இருந்துண்ணாது நின்றே உண்பார்கள் என்னும் உண்மை புலப்படுத்தியதாகும். இன்றும் இச்சமணர் சமயத்துத் தலைவர்தஞ்செயலால் இவ்வுண்மை அறியலாகும். இச்சமயத்தலைவர் உலகியல் வாழ்வில் இன்றும் எறும்பு முதலிய சிற்றுயிர்கள் வாழும் வளைகளில் அவற்றுக் கேற்ற உணவுதேடி இட்டுவருவது எவரும் அறிந்த ஒரு பேருண்மை.

" இருந்துணும் தேரும் "

புத்தமதச் சார்புடைய தேரர் என்பவரைக் குறிப்பதாகும். இவர்களும் கொல்லாமை மேற்கொண்டொழுகும் பான்மையரே. ஆயினும் சமண் சமயத்தவர்க்கும் இவர்க்கும் வேறுபாடுண்டு. இச்சமயத் தோற்றத்தின் பின்பே தோன்றியது சமணர்சமயம் என்பது இவர்தம் கொள்கை. இவர்கள் சமண் சமயத்தவர் போலாது உண்ணுங்கால் நிலமிசை நன்கு அமர்ந்திருந்தே உண்பார்கள் என்பதும் யாவரும் அறிந்ததொன்றாகும்.

" நெறியலா தனபுறங் கூறவென்று "

மேலே காட்டிய இருசமயத்தவர் கூறும்பொருள் நிலையாமையினை அவர் தம்உள்ளம் பொருந்த உரைத்து உண்மைப் பொருளைக் காட்டி விளக்கியதன் உண்மை உரைத்தலாகும்.

" நஞ்சுண்ணும் பரிசினர் "

பிறர் உண்ண அஞ்சும் நஞ்சினைத்தான் அந்நஞ்சின் மூலகப்பொருளைக்கண்டு, கொல்லும் மூலகத்தின் கொடுமையைப் படிப்படியாய்ப் போக்கி அந்நஞ்சையே அமுதாக அருந்திய பெருமை உடையவர்.

" ஒருபால்
மெல்லிய லொடுமுட னாகித்
துன்றுமொண் பௌவம் மவ்வலுஞ் சூழ்ந்து
தாழ்ந்துறு துறைபல மோதிக்
குன்றுமொண் கானல் வாசம்வந் துலவும்
கோணமா மலையமர்ந் தாரே."

*மாதொரு கூறனாகிவிளங்கிக் கடலும் காட்டுமுல்லையும்* (கடலின்புலவு நாற்றத்தையும் போக்கும் முல்லைநறு நாற்றம்) சூழ்ந்து பக்கத்தே தாழ்ந்து விளங்கும் துறை தொறும் சென்று அலை மோதிக் கொண்டு மலையும் கானற் கழியும் தழுவி மணம்பரப்பும் கோணமா மலையினைத்தமது உறைவிடமாக் கொண்டுள்ளார்.

## (11)

" குற்றமில்லாதார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞானசம் பந்தன்
உற்றசெந் தமிழார் மாலையீ ரைந்தும்
உரைப்பவர் கேட்பவர் உயர்ந்தோர்
சுற்றமு மாகித் தொல்வினை யடையார்
தோன்றுவர் வானிடைப் பொலிந்தே.

[குற்றம் - ஆசு, மாசு ; குரைகடல் - ஒலித்து அலை எழுங் கடல் ; காழியர் பெருமான் - சீர்காழி நகரின் தலைவன் ; மாலை - தொடையல் அல்லது தொகுப்பு ; தொல்வினை - பழவினை ; பொலிந்து - நிறைந்து.]

மாசிலாமனத்தவர் வாழும் ஒலி அலைமலியும் கடல் சூழ்ந்து விளங்கும் கோணமா மலைமிசைக் கோயில்கொண்டு உறைபவராகிய எப்பெருமானைப் பற்றிப் பயின்று உணர்ந்தும், கேள்வியால் அறிந்தும் செறிவுற்ற மனத்தை உடையவராய் விளங்கும் சீர்காழிப்பதியில் வாழும் பெரியோர்கள் புகழும் தலைவனும், கருதியுரைக்கும் தகைமை வாய்ந்த ஞானசம்பந்தன் வாயுரை செவ்விய தமிழால் யாக்கப்பெற்ற தொடைமாலை ஒரு பத்தும் பயின்று உரைப்பவரும், உரைப்பார்வழிக்கேட்போரும் உயர்ந்தோர் தம் கேண்மையராகி, அவ்வாறுகிய பண்புடைமையினாலே தங்கள் முன்னைப் பழவினை வந்தடையப் பெறார் ; வானுலகத்திடை விளங்கித் தோன்றுவார்.

" குற்றமில் லாதார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலை "

ஒலிசெய்யும் அலைகள் பலவாய் மலிந்துமுழங்கும் கடலாற் சூழப்பட்டு விளங்குவது கோணமாமலை. அங்கு வாழ்வோர் யாதானும் ஒரு மாசும்வந்து பொருந்தா நல்ல உள்ளத்தவராவர்.

" அமர்ந் தாரை "

அத்தகைய மக்கள் பொருந்திவாழும் கோணமாமலையினையே தனக்கோர் உறைவிடமாகக் கொண்டு உயிர்கட்கு அருள்சுரக்கும் எமது இறைவனும் பெருமானுரை என்பதாகும்.

" கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான் "

இது திருஞானசம்பந்த மூர்த்தியைக் குறிப்பதாயினும் "கருத்துடை ஞானசம்பந்தன்" எனப் பெயர் கொடுத்தோதியுள்ளதை நோக்கின், அப்பொருள் சீகாழி மக்களில் உயர்ந்தோரையே குறிப்பது நன்கு புலனுகும். ஆதலால், சீகாழிப்பதியில் வாழும் பெரியோர்கள் கோணமாமலையில் வீற்றிருந்தருள் புரியும் நம்பெருமான் செயலாற்றல் மறைமுதலாம் வரலாற்று நூல்களின் வழிபயின்று அடைந்த பேருணர்வும், பெரியோர்வாய்க் கேட்டறிந்து விளங்கும் செவ்விய உள்ளமும் படைத்தவர்கள் என்றே துணியப்படும். அன்றியும், அத்தகைப் பெரியோர்கட்கும், அவர் வாழ் பதிக்கும் நம் ஞானசம்பந்தப் பெருமானுர் தலைவர் என்றும் தேற்றமாதல் காண்க.

" கருத்துடை ஞானசம் பந்தன் "

அப்பெருமை வாய்ந்த சீரியோர் பலர்க்கும் தானே தலைவனுய் விளங்கும் திருஞானசம்பந்தப் பெருமானுர் தாம் பயின்றவற்றும், செவிகைப்பக் கேட்டவற்றும் காணும் உண்மைப் பொருள்களை மிகத் தெளிவாய் ஓர்ந்து உணர்ந்து உரைப்பவர் என்பது புலப்படுத்தியதாகும்.

" உற்றசெந் தமிழார் மாலையீ ரைந்தும்
உரைப்பவர் கேட்பவர்"

திருஞானசம்பந்த மூர்த்திகள் வாய்உரை செய்த செவ்விய தமிழால் நிறைந்த யாப்புடைத் தொடைமாலை ஒருபத்தும் பயின்றும் முறையே பிறர்க்கு உரைப்பவர்களும், அவ்வுரை செவிகைப்பப் பருகுவோரும் என்ற இவர்களைச் சுட்டிநிற்பது விளக்கமாம்.

" உயர்ந்தோர்
சுற்றமு மாகித் தொல்வினை யடையார் "

அத்தகைக் கல்வி கேள்வியுடைய பெரியோர் தம்மினும் சிறந்த மேதகவுடையார் தம் கேளிராய் முன்னைப் பழவினை தம்மை வந்தடையப் பெறுர்.

" தோன்றுவர் வானிடைப் பொலிந்தே "

பழவினை யொழியத்தாம் பண்ணவர் வாழும் ஆனிலை உலகம் (உயர்நிலை உலகம்) சென்று தம் மறுமை வாழ்வு சிறந்தோங்க விளங்குவார்கள்.

---

CONNEMARA PUBLIC LIBRARY
6 FEB 1955
MADRAS